
அமுதசுரபி

செப்டம்பர் 1994

விலை: ரூ. 6



தொலைபேசி : 5228545, 510535

ஸ்ரீராம் டிரஸ்ட்

(அமுதசுரபி வெளியீட்டாளர்கள்)

தபால் பை : 5043, 145, லிங்கச் செட்டி தெரு, சென்னை-1

'அமுதசுரபி' ஆயுள் சந்தாத் திட்டம் விதிமுறைகள்

1. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் / பெண் / இருபாலரும் இந்தத் திட்டத்தில் சேரலாம்.
2. ஒரு முறை ரூ. 1,000/-ம் செலுத்தியவர்கள் பிறகு எந்தத் தொகையும் செலுத்த வேண்டாம். இந்தத் தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது. இந்தத் தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது.
3. சந்தாதாரரின் ஆயுட்காலம் முழுமையும் ஒவ்வொரு மாதமும் அமுதசுரபியும் மற்றும் ஆண்டுதோறும் தீபாவளி மலரும் அனுப்பி வைக்கப்படும்.
4. ஆயுள் சந்தாதாரர், தம்முடைய ஆயுள் சந்தா உரிமையை வேறு-ஒருவருக்கு மாற்ற இயலாது.

இந்தத் திட்டத்தில் சேர்பவர்களுக்கு ரூ.101/- மதிப்புள்ள நூல்கள் அன்பளிப்பாக அளிக்கப்படும். (நீதியரசர் ச. மோகன் எழுதிய தியாக தீபம் ரூ.40/- ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளிய அமுத மொழி ரூ.20/- கமலபத்மகிரீசன் எழுதிய பாரதியும் புஷ்கினும் ரூ.16/- வசுமதி ராமசுவாமி எழுதிய சந்தனச் சிமிழ் ரூ.25/-)

இங்கு கத்தரிக்கவும்

'அமுதசுரபி' - ஆயுள் சந்தாதாரர் திட்டம்

விண்ணப்பப் படிவம்

பெயர் : ....

பிறந்த தேதி : .... தொழில் : ....

முகவரி :

ஆயுள் சந்தாதாரர் திட்ட விதிமுறைகள்படி, இத்துடன் ரூ. 1,000/-ம் (ரூபாய் ஆயிரம் மட்டும்) ரொக்கம்/செக்/டிராப்ட் / எண்.............................. தேதி.................. வங்கி..) அனுப்பியுள்ளேன். மேலே குறிப்பிட்ட முகவரிக்கு 'அமுதசுரபி' இதழ்களைத் தொடர்ந்து அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

கையொப்பம்.

ACC NO. 10594

அமுதசுரபி



எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே — பாரதியார்

செப்டம்பர்'94 | மலர் : 47
பவ - புரட்டாசி | இதழ் : 5

ஆன்மிகம்

இலக்கியம்

இளைய அமுதம்

(புதுச்சேரி) கட்டுரை

கவிதை

அட்டையில்...

இலங்கையின் தலைமன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ்கோடி வரையில் உள்ள சுமார் 24 கி.மீ. தூரமுள்ள பாக் ஜலசந்தியை 16 மணி நேரத்தில் நீந்தி சாதனைப் புரிந்ததோடு, இங்கிலீஷ் கால்வாயின் 21 மைல் தூரத்தை 11 மணி 36 நிமிடங்களில் கடந்து உலக சாதனை படைத்தவர் குற்றாலீஸ்வரன். இந்தச் சாதனைக்கு ஆன 6.15 லட்சம் ரூபாயைத் தமிழக அரசு தந்திருக்கிறது.

தமிழக விளையாட்டு மேம்பாட்டு வாரியம் குற்றாலீஸ்வரனைத் தத்து எடுத்துக் கொண்டிருப்பதாக தமிழக முதல்வர் டாக்டர் ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். குற்றாலீஸ்வரனின் வயது 12. படிப்பது சென்னை கோபாலபுரம் டி.ஏ.வி. உயர்நிலைப்பள்ளியில். தாய் சிவகாமி. தந்தை ரமேஷ்.

மிகக் குறைந்த வயதில் உலகச் சாதனைகளைப் படைக்கும் குற்றாலீஸ்வரனை வாழ்த்துகிறோம்! மேலும் வளர்க!

சிறுகதை

சோதிடம்

தொடர்கதை

நாணயம்

பாவையர் பக்கங்கள்

★ பதிப்பாளர்: ஏ. வி. எஸ். ராஜா ★ கௌரவ இலக்கிய ஆலோசகர்: என். வி. சுப்பிரமணியன் ★ ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன் ★ இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார் ★ தனி இதழ் விலை ரூ. 6/- ★ ஆண்டு சந்தா ரூ. 72/- ★ மேலட்டை வண்ணப்படம் : யோகா ★ அட்டையில் : குற்றாலீஸ்வரன்



அன்பர் அனுபவம்...

'கர்மயோகி'

சென்ற இதழைத் தொடர்ந்து 'அன்பர் அனுபவம்' என்ற தலைப்பில் எனக்கு வந்த கடிதங்களின் பகுதிகளைக் கீழே தருகிறேன்.

1. "தாங்கள் எழுதிய கடிதப்படி பிரார்த்தனை செய்ததில், வீட்டின் காம்பவுண்ட் பிரச்னை தீர்ந்து விட்டது. பின் வீட்டுக்காரன் வீட்டை விற்றுச் சென்று விட்டான். ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டு இரண்டு ரூம் எடுத்ததால் தான் தேங்காய்களைப் போட்டு உடைத்து ரகளையாய் விட்டது. போலீஸ், கேஸ் எனச் சென்ற நம் பக்கம் தீர்ப்பாயிற்று. அந்தத் தென்னையை அவனுடைய மரத்தை வெட்டி விடுவான். இப்பொழுது வீட்டையும் விற்றுச் சென்று பிரச்னை முடிவடைந்துவிட்டது".

2. "அன்னையிடம் நான் வைத்திருந்த நம்பிக்கை வீண் போகவில்லை. ஒரு தடவை தவறாக எண்ணியதற்கு நான் இப்பொழுது மிகவும் வேதனைப்படுகிறேன். என் தம்பியின் மனைவி பிள்ளை உண்டாகியிருந்தாள். முதல் குழந்தை பெண்ணாகப் பிறந்து விட்டது. ஏற்கெனவே அவனுக்கு, அதாவது எனக்கு இன்னும் 2 தங்கைகள் திருமணத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் நல்ல வேலை Government job or bank job ஒன்றும் (அவர்கள் நன்றாக Post graduate ஆக இருந்தும்) இன்னும் கிடைக்கவில்லை. திருமணம் செய்யவும் பணம் பற்றாக்குறையாக இருக்கிறது. இவர்களின் மூத்த தங்கைக்கு கடன் வாங்கி திருமணம் செய்துவிட்டு இன்னும் வட்டிதான் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அசல் அப்படியே இருக்கிறது. இந்த நிலையில் என் தம்பிக்கு இரண்டு குழந்தையும் பெண்ணாகப் பிறந்துவிட்டால் அவன் மிகவும் நொந்து விடுவான். என் பெற்றோரும் மனமுடைந்து போய்விடுவார்கள். ஆதலால் என் தம்பிக்காக நான் அன்னையிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டது என்னவென்றால் என் தம்பிக்குப் பிறக்கப் போகும் இரண்டாம் குழந்தை ஆண் குழந்தையாக இருக்க வேண்டும். அக்குழந்தையால் எல்லாரும் சுகப்பட வேண்டும். அப்படியே பலித்து விட்டது".

3. "வேலைப் பிரச்னையைப் பற்றி எழுதியிருந்தேன். என்னை 15 நாள்கள் தினசரி பிரார்த்தனை செய்து பின் 3 நாள்கள் இடையறாத பிரார்த்தனையை மேற்கொள்ளச் சொல்லி எழுதியிருந்தீர்கள். நான் தங்களின் அறிவுரையின்படி 27.9.89 முதல் 11.10.89 வரை தொடர்ந்து 15 நாள்கள் மாலை ஆறு முதல் ஆறரை மணிவரை பிரார்த்தனை செய்து வந்தேன். 20.10.89 இல் அதிசயிக்கத்தக்க வகையில் எனக்கு Permanent job கிடைத்தது. ஒரு சிறு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். 15 நாள்கள் தொடர்ந்து பிரார்த்தனை செய்தவுடன் காரியம் நிறைவேறப் பெற்றது. தாங்கள் கூறியதுபோல் மேலும் மூன்று நாள் இடையறாத பிரார்த்தனையை மேற்கொள்ள வேண்டுமா?"

4. "அன்னையின் அருள் வேண்டி நிற்கும் அடியேன் எழுதுவது. 17 ஆம் தேதி அங்கு வந்த சமயம், என்நிலை பற்றிக் கூறி வந்தேன். நேற்று மீண்டும் சென்று ஆபீசரைப் பார்த்து வந்தேன். அது சமயம் தான் அவர் எனது தமையனால் தூண்டப்பட்டு எனக்கு இடையூறு செய்கிறார் என்பதை அறிந்து மனம் வருந்தினேன். ஆனால்

அன்னையின் அருளால் எங்களது கோவாப ரேட்டிவ் சொஸைட்டி தலைவர் அவர்கள் தனது சொத்தை எனக்காக ரிஜிஸ்டர் செய்துதர ஏற்பாடு செய்ததை அறிந்து நான் கண்ணீர் அஞ்சலி செலுத்தினேன். காலத்தினால் அவர் செய்த நன்மைக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் எனப் புரியவில்லை. அவருடைய நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் நான் நடந்து, வியாபார அபிவிருத்தி செய்து, அவரை மகிழ்விக்கக் கூடிய வகையான ஆற்றலையும், சக்தியையும் எனக்களிக்குமாறு அன்னையிடம் வேண்டிக் கொள்கிறேன்".

5. "என் மூத்த மைத்துனர் பெரிய மருமகள் எனக்கு அன்னை ஸ்ரீ அரவிந்தர் பெருமைகளைக் கூறி 'எல்லாம் தரும் அன்னை' என்ற புத்தகத்தைக் கொடுத்து, படித்துப் பாருங்கள் என என்னிடம் கொடுத்தார். நான் அன்னையைப் பிரார்த்தித்துக் கொண்டு நேரம் கிடைத்த பொழுது தினமும் படித்தும் அன்னையைத் தியானம் செய்தும் வந்தேன். அதில் எனக்கு நன்மைகள் தெரிந்தன. பாறையைப் போல் மனதை அழுத்தும் நேரத்திலும், துணியைப் பிழிவதுபோல் மனதை வருத்தும்போதும் அன்னையிடம் முறையிட்டால் அது பனி போல் கலைந்து மனதிற்கு சாந்தி ஏற்படும்.

6. "அன்னையின் நூல்களிலிருந்து சில பகுதிகள் படித்துவிட்டு மீதி 15 நிமிஷம் தியானம் செய்து வருகிறோம். இதில் என் குடும்பத்தினர் அனைவரும் கலந்து கொள்கிறோம். இதனால் குடும்பத்திலுள்ள கவலைகள், சண்டை, குழப்பங்கள் யாவையும் நீங்கிவிடுகின்றன. இதை நாங்கள் எல்லாருமாக உணருகிறோம்".

7. "என் தாயை, 18 மாதங்களுக்கு முன் Intensive care unit மருத்துவமனையில் சேர்த்தேன். அதுபோது லைப்ரரியில் இருந்து பெற்ற 'சாவித்திரி'யின் சில பக்கங்களை படுக்கைக்கு அருகில் அமர்ந்து நான் படித்தேன். ஸ்ரீஅன்னை ஸ்ரீ அரவிந்தர் படத்திற்கு Protection flower Bouganvilla வைத்து வணங்கினேன். ஆபரேஷன் எதுவுமின்றி சுகமாக வீட்டிற்கு வந்தார்கள்.

எங்கள் அலுவலகத்தில் ஒரு பெண்ணின் கணவருக்கு ஹார்ட் அட்டாக் வந்ததாகவும், இப்பொழுது வீட்டிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார். அவருக்கு பௌர்ணமி நாள்களுக்கு

ஸ்ரீரஸ்து, சுபமஸ்து, ஸ்ரீவெங்கடேச ப்ரசன்ன:-

ஸ்ரீஜெகத்குரு ஸ்ரீஆசார்ய சுவாமிகள் ஆசியுடன் 22.10.94இல் புறப்பட்டு பிரயாகை திருவேணி ஸ்நானம், அயோத்யா ஸ்ரீராமஜென்மஸ்நானம், சரயூ நதி ஸ்நானம் செய்து தீபாவளி சமயத்தில் 7 நாட்கள் காசியில் இருந்து தீபாவளி நிஜகங்காஸ்நானம் தனதிரயோதசி, நரகசதுர்தசி, தீபாவளி அமாவாசை அன்றைக்கு அன்னதானங்கள், ஸ்ரீவிஸ்வநாதருக்கு 108படி பால் அபிஷேகம் செய்து பீதாம்பரம் சமர்ப்பித்தல், லட்டுதேர் மிட்டாய்த் திருவிழா, சொர்ண அன்னபூர்ணா தரிசனம், வராஹி, சீதாளதேவி காலபைரவர் பிந்துமாதவர் முதலிய தேவதரிசனங்கள். ஆத்ம சுத்தி தேவகார்யங்கள் பித்ரு காரியங்கள் அனுஷ்டித்து கயா க்ஷேத்ரம் சென்று பல்குனி நதிஸ்நானம், விஷ்ணு பாததரிசனம், பித்ருகாரியங்கள் செய்து புத்தக்ஷேத்ரம், புத்த கயா தரிசித்து காசி வந்து சென்னை வர 18 நாட்கள் ஆகும். இந்த யாத்திரைக்கு ரயில் சார்ஜ் மற்றும் பஸ் சார்ஜுகள் தங்கும் இடவாடகை, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவுகள் வழக்கமான எங்கள் ஆகாரம் ஒரு பை உள்பட நபர் ஒன்றுக்கு ரூ. 3500/-.

இத்துடன் இணைந்த நேபாள யாத்திரை 10 நாட்கள் ரூ. 1850/- நேபாள யாத்திரைக்கு சென்னையில் இருந்து சேர்ந்து கொள்வோர் ரயில் சார்ஜ் ரூ. 650/- சேர்த்து ரூ. 2500/- கொடுக்க வேண்டும். 19.11.94இல் புறப்படும் 12 நாட்கள் கொண்ட பாம்பே பண்டரீபுர மகாராஷ்டிரா யாத்ரை நபர் ஒன்றுக்கு ரூ. 2700/-. 2.12.94இல் புறப்படும் துவாரகை, சௌராஷ்டிரா தேசயாத்திரை 12 நாட்கள். நபர் ஒன்றுக்கு ரூ. 3000/-.

மேலும் விவரங்களுக்கு :

ஸ்ரீமஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்

1. யூசப் லேன் - அருணாசல ஆசாரி தெரு

சேப்பாக்கம், சென்னை - 600 005

டெலிபோன்: 841957

நமது அலுவலகம்

மௌண்ட் ரோடு. இதில் அண்ணாசிலை கிழக்கே திரும்ப வாலாஜா ரோடு. இதில் கலைவாணர் அரங்கம் கொஞ்சம் தள்ளி எதிரே இரண்டு அரச மரங்களுக்கு நடுவே அருணாசல ஆசாரி தெரு. இதில் கோயில் தாண்டி வந்தால் இரண்டாவது வலப் பக்கம் முதல் வீடு யூசப் லேன் எண் 1. மாடி.

முன்பும் பின்பும் அவரையறியாமல் படுக்கையில் வாய் ஊறிக் கொண்டிருக்கிறார் என்றார். என்னிடமுள்ள இரண்டாவது பிரதியான Small size Savitri என்ற புத்தகத்தைக் கொடுத்து அப்பெண்மணியை தினமும் ஒரு பக்கம் படிக்கச் சொல்லி ஸ்ரீ அன்னையிடம் பிரார்த்திக்கச் சொன்னேன். அவரும் அதுபோல் செய்து, "அவர் கணவர் பௌர்ணமி நாள்களில் மூன்று மாதமாக முன்போல் ஊறுவதில்லை" என்றார்.

8. "என் மகனைப் பற்றித்தான் கவலைப்பட்டு உங்களுக்கு எழுதியிருந்தேன். அன்னையை நினைத்துப் பிரார்த்தனை செய்தேன். என் மகன் நன்கு திருந்திவிட்டான். அளவில்லாத விதத்தில் அன்னை எனக்கு உதவி புரிகிறார், அதிகமான வருமானம் முன்பைவிட இப்பொழுது வருகிறது".

9. "இலங்கையில் இருந்து வந்ததும் நீங்கள் சொன்னதுபோல் Visa பிரச்னை தீர்ந்து விட்டது".

10. "கீழ்க்காணும் வரிகள் என் நிலைமையை விளக்கும். இதுவரை என் மகன் திருமணம் செய்து கொள்ள மறுத்தான். ஆபீஸ் பிரச்னை காரணம். படுக்கைக்குப் போகு முன் என் மனதைத் திறந்து அன்னையின் பாதங்களில் கவலையைக் கொட்டித் தீர்த்தேன். மறுநாள் காலை நல்ல செய்தி காத்திருந்தது. என் மகன் பல நிபந்தனைகளுடன் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டான். எளிய விழாவாகவும், வீடியோ போன்றவை கூடாது எனவும் நிபந்தனை விதித்தான்".

11. "என் சகோதரி மகள் ஆசிரியை பயிற்சி முடித்து வேலைக்குக் காத்திருந்தாள். இன்டர்வியூ முடிந்தும் உத்தரவு வரவில்லை. சகோதரியின் கணவர் வேலைக்கு யாரிடமாவது சொல், யாருக்காவது 5, 10 கொடுக்க வேண்டுமானாலும் கொடு என, துளைத்து எடுத்துவிட்டார். 'நான் சொல்லி வைத்துள்ளேன் (என் மனதில் அன்னையிடம்) நிச்சயம் வேலை கிடைக்கும்' என்று உறுதியாகக் கூறினேன். அதுபோல் கடந்த 12.12.89 அன்று வேலைக்கு எல்லாருக்கும் ஆர்டர் வந்துள்ளது என்று சொன்னார்கள். இரவு ஏழு மணிக்கு D.E.O. ஆபீசுக்குப் போய் விசாரித்தேன். என்ன ஆச்சரியம்! 'வேலைக்கான ஆர்டர் தங்கள் மருமகளுக்கு அனுப்பப் பட்டது' என்றனர்".

12. "இப்பவும் அன்னைக்குப் பிரார்த்தித்துக் கொண்டபடி எனது மகளின் திருமணம் போன செப்டம்பர் மாதம் நடைபெற்றது. நான் வேண்டிக் கொண்டபடியே உள்ளூரிலேயே நல்ல வரனாக அமைந்தது. எல்லாம் அன்னையின் கருணை".

13. "அன்னையின் அருளால் தற்போது எனக்கு மீண்டும் கும்பகோணத்திற்கு மாற்றலாகி உள்ளது. ஏற்கெனவே இங்கு காலியாக இருந்த இடத்திற்கு நான் முயற்சி செய்தும் கிடைக்கவில்லை. தங்கள் ஆலோசனையின்படி இடையறாத பிரார்த்தனை செய்ததன் விளைவாக தற்போது கும்பகோணத்தில் ஒருவர் ராஜினாமா செய்ததால் எனக்கு மாற்றல் கிடைத்துள்ளது".

14. "நான் போட்ட கடிதத்திற்கு எனக்கு பதில் எழுதி Mother Photo அனுப்பி வைத்தது குறித்து எனக்குப் பரம சந்தோஷம். அதுவே எனக்குத் தெம்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. அந்தப் பிரார்த்தனையைச் சிறப்பாய்ச் செய்யத் தொடங்கியதிலிருந்து எனக்கு வேலையில் எந்தச் சிக்கலுமில்லாமல் இருக்கிறது".

15. "அன்னை வழிபாட்டில் எனக்கு மன நிம்மதி கிடைத்துள்ளது. மிகவும் மனம் சந்தோஷமாக இருக்கிறது. என் மனதில் ஒரு பயம் இருந்தது. அது எதனால் என்று தெரியாது, எந்தக் காரியம் செய்தாலும் ஒரு பயம். இப்பொழுது அந்த பயம் அறவே நீங்கி விட்டது. இது அன்னையின் அருளால்தான் என மிகவும் நம்புகிறேன்".

16. "அன்னையிடம் என் திருமணம், கணவர் வேலை, பிரசவம் ஆகியவற்றிற்குப் பிரார்த்தனை செய்து நல்ல பலனை அடைந்திருக்கிறேன்".

17. "நான் டிசம்பர் 31 ஆம் தேதி அன்று மாலை 6 மணிக்கு தங்கள் வீட்டில் தியானம் செய்தேன். அப்பொழுது சிறிது நேரம் கண்ணன் தோன்றி மறைந்தார். மறுநாள் ஜனவரி 1 ஆம் தேதி சமாதி முன்பு தியானம் செய்தேன். அப்போது அன்னை அப்படியே கட்டி அணைத்துக் கொண்டார்கள். நான் ஆனந்தக் கண்ணீர் வடித்தேன். அந்த அனுபவம் இப்பொழுது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது".

18. "என் பையன் ஆஸ்துமாவினால் கஷ்டப் பட்டான். மாத்திரை எடுத்துக் கொண்டும் மூக்கிற்கு மூன்று தரம் சிகிச்சை செய்தும் விடாமல் இருந்தது. தாங்கள் அனுப்பிய அன்னையின் அருள் மலர் ஒன்றை அவன் மூக்கில் இரண்டு பக்கமும் தடவிக் கொடுத்து, மார்பு பக்கங்களிலும் தடவினேன். சிறிது நேரத்திற்கெல்லாம் மார்பில் சளி கரைந்து நன்றாகத் தூங்கி விட்டான்".

(தொடரும்)



நாணயம்

நேர்மை, நாணயம், உழைப்பு செழிக்கவும் உங்கள் பொருளாதாரம் கொழிக்கவும் வழிகாட்டும் புதிய பகுதி.

வட்டிக் கணக்கு அவசியமா?

எஸ். இராஜரத்தினம்

நம் நாட்டிலும், மேலை நாட்டினருக்குக் கிடைக்கும் கடன் வசதிகளைப் போல், எளிதாக கிரெடிட் கார்டு மூலமாகவோ, தவணை முறையில் பொருள் வாங்குவதற்கோ அல்லது நேரடியாகவோ கடன் கொடுக்கும் வங்கிகள் தவிர நிதிகள், நிதி நிறுவனங்கள், விற்பனை நிலையங்கள் கடன் வசதி அளிக்கின்றன. அமெரிக்க நாட்டில் ஒரு குடிமகனுக்கு சராசரியாக 6 இலட்சம் டாலர் (ரூ. 1.80 கோடி) மதிப்புள்ள கடன் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. பணக்கார நாடாகிய ஐக்கிய அமெரிக்கக் குடியரசிலேயே இது மிக அதிகம் என்று கருதப்படுகிறது. பல குடிமக்கள் நொடித்துப் போய் அவர்களுடைய பொருள்கள் ஏலத்திற்கு வருவது அந்த நாட்டில் ஓர் அன்றாட நிகழ்ச்சியாகும். நல்ல வருவாய் உள்ள ஒரு நாட்டில், பலர் இந்தத் தொல்லைக்கு ஆளாகின்றார்கள் என்றால், அதற்குக் காரணம் எளிதாகக் கிடைக்கும் கடன் வசதிதான் என்பது பலருடைய ஒருமித்த கருத்தாகும்.

கடன் ஏன் வாங்குகிறோம்?

கடன் வாங்குவது எளிதாகும்போது கடன் வாங்குவதை ஒரு பொருட்டாகப் பலரும் நினைப்பதில்லை. வங்கிகள் கொடுக்கும் கடன் வசதி அட்டைகள் (கிரெடிட் கார்டுகள்) பொதுவாக கையில் பணம் எடுத்துச் செல்லும் நிர்ப்பந்தத்தைத் தவிர்க்கிறது என்பதால் பலரும் கடன் வசதி அட்டைகளை உபயோகிக்கின்றனர். ஆயினும் இந்தப் பழக்கம் தவிர்க்கப்பட வேண்டிய பொருளைக்கூட வாங்குவதற்கு வழி செய்கிறது. விலைவாசி ஏற்றம் என்பது நமது பொருளாதாரத்தில் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாக இருப்பதால் ஒரு பொருளை அப்போதே வாங்காவிட்டால் அதிக விலை கொடுக்க நேரிடலாம் என்பதைக் காட்டி விற்பனை செய்வது ஒரு நல்ல வியாபாரத் தந்திரம். நிச்சயம் விலை கூடும். ஆயினும் பொறுத்து வாங்கும்போது நமது வருமானம் கூடி வசதி பெருகி இருக்கலாம். இதை விட நல்ல பொருளும் கிடைக்கலாம்.

உதாரணமாக, குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி, சமையல் உபகரணங்கள் போன்ற பலவும் ஏற்கெனவே நம்மிடம் இருக்கலாம். அவற்றை மாற்ற வேண்டிய உடனடியான தேவை இல்லை. வாகனங்கள், வீட்டுக்கு வேண்டிய சோபா, கட்டில் போன்றவை ஓரளவு இன்றைக்குத் தேவையாக இருப்பினும்கூட ஆடம்பரமான முறையில் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியது அவசியமில்லை அல்லவா?

அடுத்த வீட்டுக்காரருக்கு முன்னரோ, அவர் வாங்கிய பிறகாவது அல்லது அவர் வாங்கியதைவிடத் தரமான பொருளை நாம் வைத்திருக்கிறோம் என்பதைக் காட்டுவதற்கு நாம் எல்லாருமே ஆசைப்படுகிறோம். அவர்களும் உடனுக்குடன் நம்மைவிட மிஞ்சப் பார்க்கின்றனர். இந்தப் போட்டி, வியாபாரிகளுக்கு மிகவும் உதவுகிறது. நாம் வாங்கும் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி போன்ற பொருள்கள் நமக்கு வேண்டாத பொருள்களையும் எப்படி தேவையானவையாகக் கருத வைக்கிறது என்பதையும் நாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய சமுதாயத்தில் விற்பனையை விருத்தி செய்யத் திறமையான ஊழியர்களுக்கு தொழில் நிறுவனங்களில் நல்ல கிராக்கி. நல்ல முறையிலே விளம்பரத்தைச் செய்தால் நன்கு விற்பனையாகும் என்பது எல்லாருக் கும் தெரிந்த தொழில் இரகசியம் இந்த விற்பனையாளர்களின் திற மைக்கு முன்னர் நமது இல்ல தரசிகளுடைய சிக்கன மன பான்மை எதிர் நீச்சல் போடவல் தல்ல. ஏன்? இந்த விளம்ப யுகத்தில் இந்த விற்பனை சாதனையாளர்களின் திறத்தினா எவை உடனடியாகத் தேவை யில்லை, எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற விவேக அடிபட்டுப் போகிறது.

கடனே வாங்க வேண்டி தில்லை என்பது பொருளல் அன்றாடத் தேவைகளுக்குக்கூ பல சமயங்களிலும், மிகச் சி ஆடம்பரப் பொருள்களைக் கூ சில சமயங்களிலும் வாங்குவ தவிர்க்க முடியாமல் போகலாம் ஆனால் எந்த அளவிற்கு வாங் கிறோம் என்று ஓர் உச்சவரம்பை நமக்கு நாமே ஏற்படுத்தி கொள்ளாவிட்டால் கடன் ஏ வாங்குகிறோம் என்ற சிந்தனை நம்மைவிட்டு அகன்றுவிடும்.

குறைந்த வட்டிக்குக் கடன் கிடைக்கிறதா?

நாம் தவணையில் பொரு வாங்கும்போதோ, கடனுத பெறும் போதோ, நாம் செலுத்த கூடிய வட்டி மிகக் குறைவான என்பதை நமக்குக் கடன் கொடு போர் வலியுறுத்துகின்றனர். ஆ னும் அப் பொருள்களைக் க னாகப் பெறாமல் ரொக்கமாக கொடுத்தால் சுமார் 10% விற்பவ களிடமிருந்து பட்டியல் விலை லிருந்து கழிவாகக் கிடைக்கிற கடன் அட்டை (கிரெடிட் கார் நிர்வாகத்திற்கு வியாபாரிக சுமார் 2% கொடுப்பதால் நேரா நாம் ரொக்கம் கொடுத்தால் இந் 2%ஐக் கூட அதிகப்படி கழிவா வியாபாரிகள் கொடுப்பார்க ஆனால் கடனுதவி பெறும்போ பெரும்பாலும் பட்டியல் வி கொடுக்கிறோம். கடன் வட் அப்போது 12% ஆக இருந்தால்கூ நாம் உண்மையில் வட்டியாக கொடுப்பது நமக்குக் கிடைக்கா விலைக் கழிவும் சேர்த்துத்தா என்பதைக் கவனத்தில் கொள்வ நலம். அத்துடன் பொதுவா தவணை முறையிலே தங்களுடை

பொருள்களை விற்பவர்கள் பட்டியல் விலையைவிட ஓரளவு அதிகமாகப் பெற்று, வட்டியைக் குறைத்துக் காட்டுவது அங்கீகரிக்கப்பட்ட ஒரு வியாபார முறையே. அதனால் வட்டி விகிதத்தை மட்டும் வைத்து கணக்குப் போடுவது, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகத்தான் ஆகும்.

சில சமயங்களில் வட்டி விகிதம் குறைவாக இருப்பினும், நாம் செலுத்த வேண்டிய முதலுக்குச் கடைசித் தவணை செலுத்தும் வரை வட்டி கொடுத்துக் கொண்டே இருப்போம். அல்லது முதலில் கொடுக்கப்பட்ட பணத்தை எல்லாம் வட்டிக் கென்றே வரவு வைத்துவிட்டு, முதலைப் பின்னால் திருப்பிக் கேட்பதாகக் கூறுவர். நமது ஒப்பந்தம் காட்டுவது வட்டியும் முதலும் நேர் செய்யப்பட்ட தவணை முறை (Equated instalments) என்றாலும் நாம் அவ்வருட வட்டியையும் முதலில் ஒரு பகுதியையும் திருப்பிக் கொடுத்தால் எந்த வட்டி விகிதம் வருமோ, அதைவிட அதிகமாகவே ஆகும். வட்டிக் கணக்கு பார்த்தால்தான் நாம் வாங்கும் பொருளின் உண்மை விலை தெரியும்.

இம்மாதிரியே நமக்கு வருடத்திற்கு 14% வட்டி கொடுப்பவர்களைவிட மூன்று மாதத்திற்கு ஒரு முறை கொடுப்பவர்கள் நம்மைவிட அதிகமாகக் கொடுக்கிறார்கள். மூன்று மாதத்திற்கு ஒருமுறை நம்முடைய கணக்கில் வட்டி போட்டுக் கொண்டு அதற்கும் நாம் வட்டி கொடுத்தால் வருடாந்தர வட்டியை விட நமக்குக் குறைவான சலுகையே கிடைக்கிறது. இதனால் நாம் அறிந்து கொள்வது வட்டிக் கணக்கு என்பது விளம்பரப் படுத்தப்பட்ட வட்டியை மட்டும் வைத்துத் தெரிந்து கொள்ளக் கூடியதல்ல. அது எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதைப் பார்த்துத்தான் குறைந்த வட்டியில் நாம் கடன் வசதி பெறுகிறோமா என்பதைத் தெரிந்து கொள்ளலாம். மேலும், கடன் வாங்கியவர்களிடம் வட்டியாக அல்லாது மற்றும் பலவிதக் கட்டணங்களை வசூலிப்பது கடன் கொடுக்கும் நிறுவனங்களின் வழக்கமாகிவிட்டது. இதுவும் கடனுக்குள்ள சொல்லப்படாத வட்டியாகவே கொள்ள வேண்டும். குறைந்த வட்டிக்குக் கடன் கிடைப்பது என்பது ஒரு மாயாவாதமே!

வட்டிக்குக் கட்டுப்பாடு இல்லை

மேலை நாடுகளில் வட்டி விகிதம் சரியான முறையில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்று சட்டங்கள் உள்ளன. நம் நாட்டில் இதுவரை இந்த மாதிரிச் சட்டம் வரவில்லை. 1986இல் ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் மூன்று மாதத்திற்குக் கடன் கொடுத்தால்கூட அந்தக் கடன் 6% வட்டிதான் என்று விளம்பரப் படுத்துவது வழக்கமாக இருந்தது. இப்போது, அந்த 6% வட்டிஎன்பது மூன்று மாதத்திற்குத்தான்; வருடாந்திர வட்டி 24% என்று விளம்பரப்படுத்த வேண்டும் என்று நுகர்வோர் கடன் பாதுகாப்புச் சட்டம், 1968இன் படி விதிக்கப்பட்டுள்ளது. முன் தேதியிலேயே பணம் செலுத்தினால்கூட வட்டியைக் குறைக்காமல் இருப்பது தவறு என்றும் அந்தச் சட்டம் கூறுகிறது. இந்தச் சட்டத்தில் பொருளைத் திருப்பிக் கொடுக்க உரிமை இருக்கிறது.

நமது நாட்டில் தவணை முறையில் வாங்குபவர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை. 1972 இல் கொண்டுவரப்பட்டு நமது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தவணை முறை விற்பனைச் சட்டம் (Hire Purchase Act) இன்றுவரை அமலுக்கு வரவில்லை. உரிய காலத்தில் தவணைகளைச் செலுத்தாவிட்டால் அதிக வட்டி செலுத்த நேரிடும் என்பதைத் தவிர, அந்தப் பொருளை மீட்பது, அல்லது எழுத்து மூலம் பலர் அறிய நடவடிக்கை எடுப்பது, அல்லது கணக்கு வழக்கில் சில தகராறுகள் இருப்பினும்கூட அதைப் பொருட்படுத்தாமல் குண்டர்களை வைத்து பயமுறுத்தி தவணைகளை வசூலிப்பது என, தவணை தவறியவர்கள் மீது உரிய நடவடிக்கை மூலம் வசூல் செய்வதற்கென்றே நிறுவனங்கள் பல முறைகளில் வாங்கியவர்களைக் கேவலப்படுத்துவது இயற்கையே.

ஆனால், அமெரிக்க நாட்டில் இதற்கென சில சட்ட திட்டங்கள்கூட வந்திருக்கின்றன. கடன் வசூலிப்பவர் பகல் நேரத்தில் செல்ல வேண்டும். பொருளை மீட்பதற்குக் குறைந்தது 5 நாள் தவணை தரப்படவேண்டும். வேறு அசையும் பொருள்களைச் சட்டப்படி எடுத்துச் செல்ல வேண்டுமெனில் குறைந்தபட்சம் 30 நாள்கள் அவகாசம் தரப்பட வேண்டும். தவணை கொடுக்க வேண்டியது இல்லை என்று ஏற்கெனவே கடன் வாங்கியவர் மறுப்புத் தெரிவித்திருந்தால் அந்தப் பொருள் மீது அல்லது நேரடி சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்பதும் கடன் பற்றிய தகவல்கள் மற்ற எவருக்கும் அநாவசியமாகத் தெரியப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதும் சட்டத்தில் ஒரு பகுதி. இந்தச் சட்டம் வந்ததற்குக் காரணம், மேலை நாட்டிலும் தேவையற்ற பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக்குகிறது.

தேவையான சில கோட்பாடுகள்

பொருளை வாங்கும்போது இது தேவையானதுதானா? கடன் உதவி இல்லாவிட்டாலும் நாம் இதை வாங்கியிருப்போமா? அப்படி கடனாகவாவது இந்தப் பொருளை வாங்கத்தான் வேண்டுமா? நம்முடைய தகுதியையும், வருமானத்தையும் கணக்கிடும்போது தேவையாக இருந்தாலும்கூட இதை இன்றே வாங்க வேண்டுமா? இந்தக் கடனை எப்படித் திருப்பிக் கொடுக்கப் போகிறோம்? நமக்குள்ள வேறு கடன்கள், வரக்கூடிய வருமானம், செலவினங்கள் ஆகியவற்றை மனதில் கொண்டு, இந்தக் கடனுதவியை நாம் பெறத்தான் வேண்டுமா என்று யோசித்து முடிவு எடுத்துக் கொள்ள வேண்டும். இது அத்தியாவசியமாக இருந்தாலும்கூட எந்த வட்டிக்குப் பொருளை வாங்குகிறோம், இதைவிடக் குறைந்த வட்டிக்கு நம்மால் வாங்க முடியுமா என்று சிந்திக்க வேண்டியது அவசியம்.

பெண்கள் அந்திமக் கிரியைகள் செய்யலாமா?

சமீபத்தில் குடும்ப நண்பர் ஒருவர் இறந்து விட்டார். அவருக்கு 2 பெண்கள் மட்டுமே. ஆண் வாரிசு கிடையாது. இறந்தவரின் ஈமக்கடன்களை யார் நிறைவேற்றுவது? என்ற கேள்வி பிரச்னையாய் எழுந்தது. இறந்தவரின் மூத்த பெண் தன் தகப்பனாரின் ஈமக் கடன்களைத் தானே செய்வதாகக் கூறினாள். அது வழக்கமில்லை என்று கூறி மற்றவர்களும் உறவினர்களும் மறுத்துவிட்டனர். கடைசியில் சம்பந்தமில்லாத ஒருவருக்குப் பணம் தந்து காரியங்களைச் செய்யும்படி ஆகிவிட்டது. மிகவும் மனம் நொந்துபோன அந்தப் பெண்மணி மீதமிருக்கும் 13 நாள் காரியங்களையும் செய்ய வேண்டாம் என்று முடிவெடுத்து அதற்குச் செலவாகும் பணத்தை அநாதை ஆசிரமத்திற்குத் தந்து விட முடிவு செய்து விட்டார்.

ஆண் சந்ததி இல்லாவிட்டாலும் மனைவி இறந்து விட்டால் கணவன் அந்திமக்கிரியைகள் செய்யலாம். ஆனால் கணவன் இறந்து விட்டால் தான் பிரச்னையாகி விடுகிறது.

வடநாட்டில் புனே என்னுமிடத்தில் பெண்கள் மந்திரங்கள் கற்று சுப, அசுப காரியங்களை மிகவும் சிரத்தையுடன் செய்வதாகப் பத்திரிகைகளில் படிக்கிறோம்.

"சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பலபல செய்வராம்"

என்று தமிழ் நாட்டுப் பெண்களை உயர்த்தி தமிழ்க்கவிஞன் பாரதியார் பாடி இருந்தாலும் தமிழ் நாட்டில் சாத்திரம் கற்ற பெண்களால், மூத்த பொய்ம்மைகளை ஒழிக்கவும் முடியவில்லை; மூடக் கட்டுகள் எதையும் தகர்க்கவும் முடியவில்லை.

காலம் மாறி வருகிறது. 'நாமிருவர் நமக்கிருவர்' போய் 'நாமிருவர் நமக்கொருவர்' என்றாகிவிட்ட காலமிது. அநேகக் குடும்பங்களில் ஆண் வாரிசுகளே கிடையாது.

"ஆணும் பெண்ணும்நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கியிவ் வையந் தழைக்குமாம்"

என்று பாரதியார் கண்ட கனவு பலித்து வருகிறது. ஆணுக்குச் சமமாக, பெண்ணை இன்ஜினீயர், டாக்டர், கலெக்டர் என்று படிக்க வைக்கிறோம். சொத்திலும் சம பங்கு. இவ்வாறிருக்க தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கியவரின் அந்திமக்கிரியைகளை ஒரு பெண் ஏன் செய்யக் கூடாது?

பொதுவாகவே பெண்களுக்கு மனோதிடம் போதாது. மேலும் பெண்களுக்கு வீட்டுவிலக்கு, பிரசவம் போன்றவை இருப்பதால் அந்தச் சமயங்களில் அவர்கள் கஷ்டப்படக் கூடாது என்ற எண்ணத்துடன் முற்காலத்தில் இந்த மாதிரி காரியங்களிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளித்திருக்கலாம்.

"அநாத ப்ரேத சம்ஸ்காராத்
அச்வமேத பலம் லபேத்"

என்பது சாஸ்திரம்.

"ஓர் அநாதை ப்ரேதம் நல்ல கதி அடையும் பொருட்டு ஸம்ஸ்காரம் செய்தாலோ, செய்ய உதவினாலோ அச்வமேத யாகம் செய்த புண்ணியம்" என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

பாவையர் பக்கங்கள்


தற்காலத்திலோ யாரும் உறவுக்குக் கை கொடுப்பதில்லை. 'நீ தனி, நான் தனி' 'உன் குடும்பம் உனக்கு, என் குடும்பம் எனக்கு' என்றாகி விட்ட நிலை.

வேதங்களை வெளியிட்ட ரிஷிகளின் காலத்தில் வாழ்ந்த மைத்ரேயி, கார்கி, ஸுலபா, லோபாமுத்ரா போன்ற பெண்கள் வசிஷ்டர் போன்ற அறிஞர்களுக்கு ஒப்பாக வேத மந்திரங்களை வெளியிட்டிருப்பதாக அறிஞர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். இவர்களில் ப்ரும்மவாதினிகள் என்ற வகையினருக்கு அக்னி உபாசனையும் உண்டு என்று கூறுகிறார்கள். வேத காலத்தில் பெண்களின் நிலைமை போற்றப்பட்டதாகவே இருந்திருக்கிறது. அந்த நிலை மறுபடியும் வர வேண்டும்.

பெண்ணை மட்டுமே பெற்ற ஆயிரமாயிரம் அபாக்கியத் தாய்மார்களின் சார்பாக என் மனதில் தோன்றியதை எழுதி இருக்கிறேன். விவரமறிந்தவர்கள் பதில் கூறலாமே!

திருமதி. மீனாட்சி சங்கரன்
சென்னை – 600 004

அம்பாரி யானை கோலம்



← 21-1 நேர்புள்ளி

இந்த மாதம் பரிசு பெறும் கோலத்தை வரைந்தவர்

திருமதி ஜெ.கே. ராதிகா, சி-55, இளங்கோ வீதி, மகாலிங்கபுரம் (கிழக்கு), பொள்ளாச்சி 642002.

வாசகர்கள் இந்த இடம் பிடித்துப் பரிசு பெற இதுவரை வெளிவராத புதுமையான சிறந்த கோலத்தை, கறுப்பு மையினால் வரைந்தனுப்பவும். தேர்ந்தெடுக்கப்படும் கோலத்துக்குப் பரிசு ரூ. 50/- தேர்ந்தெடுக்கப்படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.



முகப்பரு மறைய

கசகசாவில் எலுமிச்சம்பழச் சாறு விட்டு மைபோல அரைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அரைத்த விழுதை அடிக்கடி முகப்பரு மேல் தடவி வந்தால் பருக்கள் மறைந்து முகம் கவர்ச்சிகரமாக மட்டுமின்றி அழகாகவும் இருக்கும்.

வெங்காயத்தை இரண்டாக நறுக்கி பரு உள்ள இடத்தில் நன்கு தேய்த்து வர முகப்பரு மறையும். சுத்தமான புனுகைத் தடவி வந்தாலும் குணமாகும். விபூதிப் பச்சிலைச் சாற்றை எடுத்து பருவின் மேல் தடவி வர விரைவில் பரு மறையும். கஸ்தூரி மஞ்சளைச் சிறிது எடுத்து நன்றாக அரைத்து, சிறிது வெண்ணெய் சேர்த்துக் குழப்பி பரு உள்ள இடங்களில் தடவவும். சிறிது நேரம் ஊறியதும் சீயக்காய்ப் பொடி போட்டு நன்றாகத் தேய்த்துக் குளிக்கவும். இவ்வாறு செய்து வந்தால் விரைவில் முகப்பரு நீங்கும். ஜாதிக்காய், சந்தனம், மிளகு ஆகியவற்றை அரைத்து முகத்தில் பூசி வந்தாலும் முகப்பரு மறையும்.

— கீதா சுவாமிநாதன்,
சென்னை – 83.

சில சூப் வகைகள்

காய்கறிகாய் சாப்பிட சில குழந்தைகள் அடம் பிடிப்பார்கள். அதையே சூப்பாகச் செய்து கொடுத்தால் ஆஹா என்று ருசியாகச் சாப்பிடுவார்கள்.

வெள்ளரிக்காய் சூப்


தேவையான பொருள்கள் :

பொடியாக நறுக்கிய வெங்காயம் – 1. வெள்ளரிக்காய் (துருவியது) – 1. மைதா மாவு – 1 கரண்டி. காய்கறி வேகவைத்த தண்ணீர் – 4 கப். பால் ஏடு – 2 கரண்டி. வெண்ணெய் – 2 கரண்டி. உப்பு, மிளகுத் தூள் தேவையான அளவு.

செய்முறை :

வெங்காயத்தை 2 நிமிடங்கள் வெண்ணெயில் வதக்கவும். பிறகு வெள்ளரிக்காயைப் போட்டு 2 நிமிடங்கள் வரை வதக்கி, மாவையும் சேர்த்து நன்றாகக் கலக்கவும். பின் காய்கறி வேகவைத்த தண்ணீரைச் சேர்த்து 10 நிமிடங்கள் கொதிக்க வைக்கவும். பிறகு பால் ஏட்டைக் கலக்கவும். மிளகு உப்பு சேர்த்துப் பரிமாறவும்.





பசலைக்கீரை – பருப்பு சூப்

தேவையான பொருள்கள் :

பசலைக்கீரை (பொடியாக நறுக்கியது) – 1 கப். பயத்தம் பருப்பு – 1 கப். தண்ணீர் – 5 கப். தக்காளி (பொடியாக நறுக்கியது) – 2. கொத்தமல்லிப் பொடி – 1 கரண்டி. சீரகப் பொடி – அரை ஸ்பூன். வெண்ணெய் – 1 கரண்டி. பூண்டு – 2 பருப்பு. வெங்காயம் (பொடியாக நறுக்கியது) – 1. எலுமிச்சம் பழச்சாறு, உப்பு மிளகுத் தூள் – 2 கரண்டி.

செய்முறை :

பருப்பைத் தண்ணீர் ஊற்றி பருப்பு மென்மையாகும் வரை வேகவைக்கவும். சூப் வடிகட்டியின் மூலம் பருப்பை வடிகட்டவும். வெண்ணெயை உருக்கி வெங்காயத்தையும் பூண்டையும் அதில் வதக்கவும். பசலைக்கீரை சேர்த்து வேக வைக்கவும். சீரகப் பொடி, கொத்தமல்லிப்பொடி, பொடியாக நறுக்கிய தக்காளிப் பழம் ஆகியவற்றைச் சேர்க்கவும். பருப்பு, உப்பு, மிளகுத்தூள் முதலியவற்றைச் சேர்த்து 10 நிமிடங்கள் மெல்லிய தீயில் சுடவைக்கவும். பிறகு எலுமிச்சம் பழச் சாற்றைச் சேர்க்கவும். நன்கு வதக்கிய வெங்காயம் மற்றும் எலுமிச்சம்பழ வில்லைகளோடு சூப்பைப் பரிமாறவும்.

— கமலா,

தாய்மார்களே! கவனியுங்கள்...

புகுந்த வீட்டு ராணிகள்



இன்றைய நாளில் பெரும்பாலான தாய்மார்கள் மிகவும் பெருமையாகச் சொல்லிக் கொள்வது இதுதான்: "22 வயதாகிறது என் பெண்ணுக்கு. இன்னும் சமைக்கத் தெரியாது. புடைவை கட்டத் தெரியாது". இது ஏதோ பெருமை என்று கூறி தம் குழந்தைகளையும் கெடுக்கிறார்கள். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமோ என்பது போல், எவ்வளவு படித்து உயர்ந்த வேலையில் இருந்தாலும் பெண் என்பவள் கட்டாயம் ஒருநாள் சமையலறையில் கால் வைத்தே தீர வேண்டியுள்ளது. இதைச் சற்றும் உணராது, தாய்மார்களே இப்படி தங்கள் பெண்ணுக்குச் சமைக்கத் தெரியாது என்று வீண் பெருமை பேசுவது சற்றும் சரியில்லை.

பெண் குழந்தைக்கு ஐந்து வயதில் இருந்தே அவள் திருமணத்திற்கு வைரத் தோடும், வெள்ளித்தட்டும் சேர்த்து வைப்பதைவிட, எவ்வளவு படித்தாலும் உயர்ந்த வேலை பார்த்தாலும் யதார்த்த வாழ்க்கை என்பது வேறு. அதற்குத் தகுந்தாற்போல் சிறுசிறு வேலைகளைப் பழக்கி கல்லூரி விடுமுறை நாட்களில் வேலைச் சிரமம் தெரியாமல், தமாஷாக, பொழுது போக்காக சமையல் வேலைகள் செய்யப் பழக்கினால் திருமணமானபின் மாமியார் வீட்டுச் சமையலறை சொர்க்கபூமியாகத் தெரியாதா? பெரும்பாலான படித்த தாய்மார்கள்கூட, "திருமணமானால் புக்ககத்தில் போய் கற்றுக் கொள்கிறாள். இங்கேயே ஏன் இந்தத் தொல்லை?" என்கின்றனர்.

இது உண்மையில் தவறான கண்ணோட்டமில்லையா? தாயைப் போல் அரவணைத்து மாமியார் சொல்லித் தருவாரா? கூட நாலு வார்த்தைகள் சுருக்கென்று விழாதோ? வேண்டாம் இந்த விஷப்பரீட்சை. பெண்ணுக்குச் சீர் செய்ய நகையும் பாத்திரமும் சேர்ப்பதுபோல், நல்ல பழக்க வழக்கம், போலி கௌரவமின்மை, குறிப்பாக சமையல் பழகுதல் என இந்த வகைச் சீர்களுக்குத் தாய்மார்கள் முன்னுரிமை அளித்தால் புகுந்த வீட்டில் உங்கள் பெண் தான் ராணி.

சந்திரா ஜானகிராமன்
சென்னை – 600 004

இந்நாளில் பெரும்பாலும் எல்லாருடைய வீடுகளிலும் டி.வி. இருக்கிறது. மேலும் நிறைய வீடுகளில் கேபிள் இணைப்பும் இருக்கிறது. எனவே நாள் முழுக்க (பார்க்கிறார்களோ, பார்க்கவில்லையோ). டி.வி. ஓடிக்கொண்டேயிருக்கிறது. அதனால் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளும் ஓயாமல் டி.வி. பார்த்தவண்ணமேயிருக்கிறார்கள். நிறைய வீடுகளில் நான் பார்த்திருக்கிறேன் டி.வி. பார்த்துக்கொண்டே பள்ளிப் பாடங்களைப் படிக்கிறார்கள்; வீட்டுப் பாடங்களையும் (Home-work) எழுதுகிறார்கள். இதனால் படிக்கும் பாடங்கள் மனதில் பதிவதில்லை. ஆனால் டி.வி. நிகழ்ச்சிகள் நன்கு பதிகின்றன. பாடங்கள் எழுதும்போது மட்டும் நிறையப் பிழைகள். காரணம் கவனம் டி.வி.யின் மேலல்லவா. உள்ளது!

முதலில் டி.வி.நிகழ்ச்சியை சிறிது நேரம் நிறுத்திவிட்டு, நாமும் பிள்ளைகளுடன் உட்கார்ந்து அவர்களுக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். வீட்டுப் பாடங்களை எழுத வைக்க வேண்டும்; அன்றைய பாடங்களில் கேள்விகளைக் கேட்க வேண்டும். கையெழுத்து நன்றாக எழுதவும், சுத்தமாக எழுதவும் கற்றுத் தர வேண்டும். மனப்பாடப் பாடங்களைக் கேட்டு அவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். அதன்பிறகு எல்லாருமாக, குறிப்பிட்ட டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்கலாமே!

குழந்தைகள் அவர்களாக உணர்ந்து படிக்கும் பிள்ளைகளாக வளரும்வரை தாய்மார்கள் இனிமையான மாலை நேரத்தைக் குழந்தைகளுடன் உற்சாகமாகக் கழியுங்கள். பிள்ளைகள் புத்திசாலிகளாக வளரவும், கல்வியில் வல்லவர்களாகத் திகழவும் தாய்மார்களாகிய நாம் முயற்சி செய்வோம்.

— தேவி, கோவை.



வயிற்று வலி

கொதிக்கும் நீர் ஒரு டம்ளரில் ஒரு தேக்கரண்டி தேன் விட்டு நன்றாகக் கலக்கிக் குடிக்க வேண்டும்.

சுளுக்கிற்கு

கற்பூரத்தைத் தேங்காய் எண்ணெயில் கலக்கி சுளுக்கியுள்ள இடத்தில் அழுத்தித் தேய்க்க வேண்டும்.

மயக்கம்

எலுமிச்சம்பழச் சாற்றில் சிறிதளவு சீரகத்தை அரைத்து காலையில் மட்டும் சாப்பிட வேண்டும்.

— ஜி. சேகர்

என்ன கொண்டு வந்திருக்கேன் பார்!

கைகளைப் பின்னால் வைத்துக் கொண்டு, "சின்னு! என்ன கொண்டு வந்திருக்கேன் சொல்லு" என்று பெண்ணைப் பார்த்து, தந்தை கேட்கிறார்.

ஏதோ தனக்குக் கொடுக்கப் போகிறார் என்ற மகிழ்ச்சியோடு பெண், 'பொம்மை, பாவாடை, இல்லை ஸ்வீட்" என்று துள்ளிக் கொண்டே சொல்வாள்.

"உனக்காக 'கலர் பாக்ஸ்' வாங்கினேன்".

"எனக்கா..?" வியப்புடன் கையில் எடுத்து மெல்லப் பிரிக்கும் பொழுதே குழந்தையின் முகத்தில் வண்ணக் கனவுகள் மலர்கின்றன. அடுத்தகணமே பேப்பரை எடுப்பாள், கற்பனைகளுக்கு உருக் கொடுப்பாள். "அப்பா! தாங்க்யூ" என்று வெட்கத்துடன் சொல்வாள்.

குழந்தைகளுக்குப் பிறந்த நாள், புத்தாண்டு, திருமணநாள், தீபாவளி, பொங்கல்... என்று பரிசளியுங்கள்! அளிக்கும் பரிசு அவர்களுடைய வருங்காலத்துக்கு வழி காட்டுவது போல இருக்கட்டும்!

என்றும் நினைவில் வைத்து, பரிசினைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். மேலைநாட்டு எழுத்தாளர் ஒருவரின் இளமைக் காலத்தில் அவருடைய தந்தை ஓர் அழகான காமிராவைப் பரிசாக அளித்தார்.

அந்தப் பரிசைப் பற்றிக் கூறும்போது அவர் சொன்னார், "காமிராவின் வ்யூ பைண்டரின் வழியே உலகை, அதன் அழகுகளை, கோணங்களைப் பார்க்கக் கற்றுக் கொண்டேன். பிற்காலத்தில் இது எனக்கு எழுத்துப் பணிக்குப் பெருமளவில் உதவியது" என்றார்.

நீங்கள் அளிக்கும் பரிசுகள் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு வித்திடுவதாக இருக்க வேண்டும்.

தன் பெண், ட்வைன் நூலை இறுகக்கட்டி அதிலே ஒலி எழுப்ப முயற்சி செய்ததை அவளுடைய அம்மா ஒருநாள் கவனித்தாள்.

அடுத்த பிறந்த நாளன்று அந்தப் பெண், ஒரு வயலினை, பெற்றோரிடமிருந்து பரிசாகப் பெறும்போது அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

உங்கள் வசதி, விருப்பம், தகுதி இவற்றிற்கேற்ப பரிசுகளை வாங்கித் தருவது சரியல்ல. குழந்தைகளைக் கவனியுங்கள். அவனோ அவளோ, தங்கள் விருப்பத்தை வாய்மொழியாகவோ, வேறு எவரிடத்தில் பேசும் பொழுதோ வெளியிடலாம். அவற்றைக் கவனித்து அந்த விருப்பத்தை ஈடுசெய்யும் விதத்தில் பரிசளியுங்கள்.

அழகான வாழ்த்து அட்டைகளை விடவும், சின்னச்சின்னப் புத்தகங்கள் மிகவும் பயனுள்ள பரிசுகளாக அமையும்.

குழந்தைகளின் ஆளுமை என்பது பிறவியிலேயே அமைவதல்ல, பெற்றோரும் பள்ளியும் சேர்ந்து உருவாக்குவதாகும்.

படிக்கும் ஆர்வத்தை, கதைப் புத்தகங்கள் தூண்டுகின்றன.

சாதனை படைத்தவர்கள், சோதனைகளில் வெற்றி கண்டவர்கள் என்று தேர்ந்தெடுத்த நூல்களாகப் பரிசு கொடுங்கள்.

குழந்தைகளின் மனவலிமை கூடும். தாங்களும் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வித்தாக மனதில் விழும்!

நல்ல பரிசுகளைத் தருவது என்பது நல்ல மகனையோ மகளையோ உருவாக்குவதில் துணைபுரியும் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

சிறியதாக இருந்தாலும் பெரிய பரிசாக நினைத்துக் கொள்ள வைக்கும் அன்புக்குகந்த பாட்டி தன்னுடைய கைப்பெட்டியைப் பரிசாக அளிக்கிறாள். "எனக்கு என் பாட்டி பரிசாகத் தந்தது. நீ என் செல்லப் பேத்தியாயிற்றே! உனக்கு நான் இதைத் தருகிறேன்" என்று சொல்லித் தருகிறாள். இதில் பரிசு முக்கியமல்ல! பரிசைத் தருபவரின் அன்பையும் நெஞ்சின் பாச உணர்வுகளையும் அது தாங்கி வருவதுதான் முக்கியம்.

பரிசினைத் தரும்போது அன்போடு இரண்டொரு வார்த்தைகளைச் சேர்த்துத் தந்தால் அவையும் நினைவில் நிற்பவையாகி விடும்.

குழந்தைகளை ஊக்குவிக்கவும், மகிழ்விக்கவும் பரிசு தருகிறீர்கள். அவை, குழந்தைகளின் ஆளுமையை மேம்படுத்துவதாக இருக்கட்டும். மனவலிமையை அதிமாக்குவதாக இருக்கட்டும். அவர்களின் எதிர்காலத்தைச் செம்மைப்படுத்துவதாக இருக்கட்டும்!

எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தரும் பரிசுகள் உறவுச் சங்கிலிகளை இணைப்பதாக இருக்கவேண்டும்!

கங்கா ராமமூர்த்தி




திடீரென்று கொறிக்க

திடீர் என்று என் நாத்தனார் சொந்தக்காரர்கள் விருந்தாளிகளாக வந்து விட்டார்கள். "டிபன் செய்யட்டுமா..." என்றதற்கு "நாங்கள் சாப்பிட்டுத்தான் வந்தோம்" என்றனர். கொறிக்க ஏதாவது கொடுக்க வேண்டுமே... வீட்டில் மிக்ஸர் கொஞ்சமாகத் தான் இருந்தது.

ஐடியா உதித்தது.

மிக்ஸர் பாதி பொரி பாதி கலந்து வெங்காயம் வெள்ளரிக்காய் பொடியாக நறுக்கி உப்பு, காரப்பொடி, எலுமிச்சைப்பழம் அரை மூடி பிழிந்து மிக்ஸருடன் நன்றாகக் கலந்து கொத்துமல்லி இலையைத் தூவி, ஆளுக்கு ஒரு தட்டில் வைத்துக் கொடுத்து விட்டேன். பிரமாதம் என்றனர்.

ஹேமா கோதண்டராமன்



அருணகிரிநாதர் விழா

தாம்பரம், இறைபணி மன்றத்தில் அருணகிரிநாதர் 30 ஆவது ஆண்டு அருட்பெருவிழா நடந்தது. பண்ருட்டி ஏ.ஆர்.பி. கணேசன் குழுவினரின் நாதஸ்வர இசைக்குப் பின்னர் இறைபணி மன்ற மாணவர்கள் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடி அவையோரை மகிழ்வித்தனர்.

பேராசிரியர் கே.எஸ். நாகராஜன் அவர்களின் வரவேற்புரைக்குப் பின் அலங்கார் கந்தசாமி விழாவைத் தொடக்கி வைத்துப் பேசினார். தலைமையுரை : மீ.ப. சோமசுந்தரம்.

கலைமாமணி விக்கிரமன், இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் செயலாளர் - எழுத்தாளர் நா. ராமச்சந்திரன், சரஸ்வதி வாக்கேயகார நிறுவனத்தின் செயலர் என்.வி. சுப்பிரமணியம், எம்.வி. அரங்கநாதன் ஆகியோரும் பேசினர். இறைபணி மன்றத் தலைவர் த.ஏகாம்பரம் அவர்களின் ஆராய்ச்சியைப் பாராட்டினர்.

பித்துக்குளி முருகதாஸ், தேவி சரோஜா குழுவினரின் பக்திப் பாடல் நிகழ்ச்சி அவையோரைக் கவர்ந்தது.

வல்லக்கோட்டை இராஜாராம் நன்றி கூற, விழா இனிது முடிவடைந்தது. •

ஆசிரியர்களுக்குப் பாராட்டு விழா

தண்டையார்பேட்டையிலுள்ள சென்னைத் துறைமுக கப்பற்கூடக் கல்வி அறக்கட்டளைப் பள்ளி பள்ளியிறுதித் தேர்வுக்கு முதலாவதாக அனுப்பி வைத்த மாணவர்கள் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றதற்காக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்குப் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் டாக்டர் மு.இராசாராம் சிறப்பு விருந்தினராக வருகை தந்து ஆசிரியர்களையும் வெற்றி பெற்ற மாணவர்களையும் பாராட்டிப் பேசியதோடு, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பரிசு வழங்கினார். இந்த வெற்றி மேன்மேலும் தொடர வேண்டும் என்று வாழ்த்தினார்.

விழாவிற்குத் தலைமையேற்ற துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு. மு.கலைவாணன் இ.ஆ.ப. மாணவர்களை வாழ்த்திப் பேசியதோடு, வாழ்க்கையை ஓர் அறைகூவலாக ஏற்று, அதனைச் சந்திக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

கப்பற்படை வாரியத்தின் துணைத் தலைவர் திரு. மு.வேலு இந்த வெற்றி அனைவரின் கூட்டு முயற்சியாலும் கிடைத்த வெற்றி என்பதை வலியுறுத்தி, தொழிலாளர் பிள்ளைகள் பயிலும் இந்தப் பள்ளிக்கு இத்தகைய வெற்றி கிடைப்பது பாராட்டுதற்குரிய சாதனை என்றார்.

பள்ளியின் கல்வி ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ்.இராஜகோபாலன் "இந்த வெற்றியை முதல் படியாக வைத்துக் கொண்டு மேலும் பல துறைகளில் முன்னேற்றம் காண முயற்சி எடுப்போம்" என உறுதிமொழி வழங்கினார்.

பள்ளியின் ஆசிரியர் திரு. ஆர். ஹரிபாஸ்கரன், தலைமையாசிரியர் திரு. ஆ.அய்யாசாமி ஆகியோர் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்கள். முன்னதாகப் பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு எஸ்.வீராசாமி அனைவரையும் வரவேற்றார். திருமதி வா.எஸ்தர் நன்றி நவில கூட்டம் நிறைவெய்தியது. •

மகாத்மாவின் பாதை

திருச்சி, பாரதிதாசன் பல்கலைக் கழகம் அரங்க, சீனிவாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை ஆகஸ்ட் 17, 18 ஆகிய இரு நாள்களிலும் பல்கலைக் கழக ஆளவை மன்றத்தில் நிகழ்த்தியது.

சொற்பொழிவுத் தலைப்பு: மகாத்மாவின் பாதை. முதற் சொற்பொழிவு 17.8.94 (புதன் கிழமை) பிற்பகல் 2.30 மணியில் இருந்து 3.30 மணி வரையும், இரண்டாம் சொற்பொழிவு 18.8.94 (வியாழக்கிழமை) முற்பகல் 11.00 முதல் 12.00, மூன்றாம் சொற்பொழிவு பிற்பகல் 3.00 முதல் 4.00 மணி வரையிலும் நடந்தன. சிறப்புச் சொற்பொழிவு ஒன்றினை, 'கலை மாமணி' விக்கிரமன் அவர்கள் நிகழ்த்தினார்.



நிகழ்ச்சிக்கு பாரதிதாசன் தமிழியல் துறைத் தலைவர் முனைவர் மா. இராமலிங்கம் (எழில்முதல்வன்) வரவேற்புரை நிகழ்த்த, துணைவேந்தர் முனைவர் வீர. முத்துக்கருப்பன் தலைமையுரை ஆற்றினார்.

காந்தி காவியம் எழுதிய திரு. அரங்க. சீனிவாசன் அவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.



↑ திரு. நாகசுந்தரம் அவர்களின் பவழ விழா திருச்சி வாசவி மகாலில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழா மலரை கி.ஆ.பெ. விசுவநாதன் வெளியிட பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் பெற்றுக் கொண்டார். அறிஞர் பெருமக்கள் பலர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



← மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ராஜேஷ் பைலட் அவர்கள், பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகளிடம் ஆசி பெற்றார். அருகில் ஸ்ரீ பரத்வாஜ் ஸ்வாமிகள் உடனிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த ஸ்ரீமதி கமலாக்ஷி சர்மாவும் உடன் இருக்கிறார்கள்.



← **பா**ர்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்டின் ஆலோசகரும், எஸ்.ஐ.சி. குரூப்பின் தலைவரு மான திரு. பி. பாலசுப்பிர மணியம் அதிநுட்ப கம்ப்யூட்டர் பயிற்சி பெறவும், தனது மகளின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளவும் அமெரிக்காவிற்குச் சென்றிருக்கிறார். இதற்கான வழி யனுப்பு நிகழ்ச்சி சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடை பெற்றது.

நிகழ்ச்சிக்கு கலைமாமணி விக்கிரமன் தலைமை தாங்கினார். நடிகர் கே. பாக்யராஜ், பர்ல்பக்ட் பெனிபிட் பண்ட் இயக்குநர் சுந்தரம், டி. ராஜகோபாலன் ஆகி யோர் கலந்து கொண்டு பேசி னார்கள்.

திருமதி அருள்மொழி விவே கானந்தன் அனைவரையும் வர வேற்றார். எஸ்.ஐ.சி. குரூப் நிர் வாக இயக்குநர் ஆ. லட்சுமணன் நன்றி கூறி, விழா ஏற்பாடுகளை கவனித்தார்.

குமாரி பல்லவி மூர்த்தியின் நடன அரங்கேற்றம் ←



அமெரிக்காவில் நியூயார்க் நகர பைராம் ஹைஸ்கூலில் பதினோராம் கிரேட் படிக்கும் மாணவி குமாரி பல்லவி மூர்த்தி பிறந்தது 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி. தந்தை டாக்டர் சிட்டி ஆர். மூர்த்தி ரேடியோஷன் ஆன்கோலஜி துறை யில் துணைத் தலைவர். தாய் கௌசல்யா மூர்த்தி.

குரு, பத்மபூஷன் (குமாரி கமலா வின் நடனப் பயிற்சி, குமாரி பல்லவி மூர்த்தியை மிகச் சிறந்த நடன மணியாக்கி, சென்னை கஸ்தூரி சீனிவாஸ அரங்கத்தில் நடன அரங்கேற்றத்தை வெகு விமரிசையாக்கி இருந்தது.

அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு பிர பலங்கள் பலர் அரங்கம் முழுக்க நிரம்பியிருக்க - மேடை யில் அமர்ந்து தலைமையுரை ஆற்றியவர் நீதிபதி கே.எஸ். பக்தவத்சலம்.

வாழ்த்துரை வழங்கினார் பத்மஸ்ரீ சித்ரா விஸ்வேஸ்வரன்.

கார்த்திக் பைன் ஆர்ட்ஸின் தலைவர் ஏ.வி.எஸ். ராஜா, நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை கௌரவித்தார்.

ஏற்புரையாற்றியபோது குமாரி பல்லவி மூர்த்தியின் ஆங்கிலம் அமெரிக்காவை நினைவுபடுத்தி னாலும் அவர் ஆடிய ஆட்டம் தமிழ்க் கலாசாரத்தை நிலை நாட்டியது.

'இந்த நூற்றாண்டின் சிறந்த நடனமணியாகத் திகழ்வார்' என்று சித்ரா விஸ்வேஸ்வரன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையே என் பதை குமாரி பல்லவி மூர்த்தியின் நடன அரங்கேற்ற நிகழ்ச்சி நிரூபித்தது.

ராஜா சர் முத்தையா செட்டியார் பிறந்த நாள் நினைவுப் பரிசு

ராஜா சர் அண்ணாமலை செட்டியார் நினைவு அறக்கட்டளை வழங்கும் ராஜா சர் முத்தையா செட்டியார் பிறந்த நாள் நினைவுப் பரிசு ரூ. 50000/-, 1994ஆம் ஆண்டுக் காக பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுக்கு வழங்கப் பட்டது.

இதற்கான விழா பத்ம பூஷண் டாக்டர் ராஜா சர் மு.அ. முத்தையா செட்டியார் அவர் களின் 90ஆவது பிறந்த நாளான 5.8.94 அன்று மாலை ராணி சீதை மன்றத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி மாண்பமை திரு.பி.எஸ். மிஸ்ரா அவர்கள் தலைமை ஏற்றார். டாக்டர் எம்.ஏ.எம். ராமசாமி வரவேற் புரை நிகழ்த்தினார். அறக்கட்டளை யின் கௌரவச் செயலாளர் திரு. ராமசாமி விருதினை அறிவித்தார்.

பேராசிரியர் டாக்டர் ந சுப்பு ரெட்டியாரின் ஏற்புரைக்குப் பின் 'டிரஸ்டி' திரு. எல். சபாரத்தினம் நன்றி கூறினார்.

இளைய அமுதம்

தயாரிப்பு : குண்டு மணி

மௌனத்தின் வெற்றி!

ஜானகிமணாளன்

சோலையூர் என்று ஓர் ஊர். அங்கு அச்சுதன், அனந்தன் என்று இருவர் இருந்தனர். இருவரும் ஒரே தெருவில் பக்கத்துப் பக்கத்து வீட்டில் வாழ்ந்து வந்தனர்.

அச்சுதன் மகா கோபக்காரன். எதையும் ஆராயாமல் அவசரப் பட்டுப் பேசுவான். எவருடனும் சண்டை பிடிப்பான்.

ஆனால், அனந்தன் அப்படி பல்லன். அவன் இரக்கமும் சாந்தமும் உடையவன். சிந்தித்துச் செயலாற்றுவான். எதற்கும் வீண் பேச்சை வளர்க்க மாட்டான்.

கிராம மக்களுக்கு அச்சுதனைக் கண்டால் பிடிக்காது. அவனது வாய்க்குப் பயந்து ஒதுங்கி விடுவார்கள். அவர்களுக்கு அனந்தனை அதிகம் பிடிக்கும். எல்லாரும் வலிய வந்து அவனிடம் நட்புக்கொள்வார்கள்.

ஒரு சமயம், அனந்தன் ஒரு குதிரை வாங்கினான். அதைப் பார்த்ததும், அச்சுதன் மனதில் பொறாமை எழுந்தது. 'அவனுக்கு நான் என்ன சளைத்தவனா' என்று நினைத்தான். உடனே அவனும் ஒரு குதிரை வாங்கினான். எல்லாம் ஏட்டிக்குப் போட்டி தானே! அக்குதிரைக்குச் சேணம், லகான் எல்லாம் வாங்கிப் பூட்டி அழகு படுத்தினான். மிகுந்த கர்வத்துடன் அதைத் தெருவோடு ஊர்வலமாக அழைத்துச் சென்றான். எதிர்ப்பட்டவர்களிடம் எல்லாம், தன் குதிரையின் உயர்வு பற்றிப் பெருமையடித்துக் கொண்டான். அதுமட்டுமல்ல. அனந்தனின் குதிரையை மட்டம் தட்டி இழிவாகப் பேசினான்.

அந்தச் சோலையூர் கிராமத்திலிருந்து சற்றுத் தொலைவில் ஒரு நகரம் இருந்தது. ஒரு சமயம், அனந்தன் தன் குதிரை மீதேறி, அந்த நகரத்துக்குப் போனான். வழியில் அவனுக்குப் பசியெடுத்தது. கையிலேயே சோற்று மூட்டை வைத்திருந்தான்.

குதிரையை ஒரு மரநிழலில் நிறுத்திக் கீழிறங்கினான். அந்த மரத்தின் வேரில் கட்டிப் போட்டான். அருகில் ஒரு குளம் இருந்தது. அங்கு போய்க் கைகால்களைக் கழுவிவிட்டு வந்தான். குடிக்க நீர் கொண்டு வந்து வைத்துக் கொண்டு, இன்னொரு மரநிழலில் அமர்ந்து, உணவு மூட்டையைப் பிரித்து உண்ணத் தொடங்கினான்.

அப்போது அந்த மரத்தடியை நோக்கி இன்னொருவர் குதிரையில் வருவது தெரிந்தது. அது வேறு யாருமல்ல. அவனது பக்கத்து வீட்டு அச்சுதனேதான்!

அச்சுதன் மரத்தடிக்கு வந்ததும், குதிரையை விட்டு இறங்கினான். அனந்தனின் குதிரை கட்டப்பட்டிருந்த அதே மரத்து வேரில், தன் குதிரையையும் கட்டினான். பிறகு, அவனும் உணவு உண்ணத் தயாரானான்.

அதைக் கண்ட அனந்தன், "டேய், அச்சுதா! என் குதிரை மிகவும் பொல்லாதது. முரட்டுத்தனம் உடையது. அதன் அருகில் கொண்டு போய்க் கட்டியிருக்கிறாயே...! உதைத்துக் கீழே தள்ளிவிடுமே...! உன் குதிரையை அவிழ்த்துச் சற்று தூரம் தள்ளிக் கட்டு" என்று எச்சரித்தான்.

ஆனால் அச்சுதன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவன்தான் வலுவிலே வம்பை இழுப்பவனாயிற்றே!

இருவரும் சாப்பிட்டு விட்டு அவரவர் குதிரையிடம் வந்தனர். அங்கு, அச்சுதன் குதிரையை, அனந்தனின் குதிரை உதைத்துக் கீழே தள்ளிக் காயப்படுத்தியிருந்தது. உடனே, அவன் அனந்தனைப் பார்த்து, "டேய்! உன்னுடைய குதிரை என்னுடையதை உதைத்துக் காயப்படுத்திவிட்டது. ஆகவே, அதற்கு நீ எனக்கு நஷ்டஈடு தரவேண்டும். எடு பணத்தை" என்றான், கோபத்துடன்.

அதற்கு அனந்தன், "அது எப்படி? நான் தான் உன்னை முதலிலேயே எச்சரித்தேனே... 'என் குதிரை பொல்லாதது.

மழலைச் சந்தம்

பிறந்த நாள்

இந்த நாள் நல்ல நாள்!
இன்று எனக்குப் பிறந்த நாள்!

அக்கா பிறந்த நாள் ஒன்று.
அண்ணன் பிறந்த நாள் ஒன்று.

அப்பா பிறந்த நாள் ஒன்று.
அம்மா பிறந்த நாள் ஒன்று.



எங்கள் வீட்டில் பிறந்த நாள்.
எத்தனை எத்தனை நல்ல நாள்.

உங்கள் வீட்டில் பிறந்த நாள்
எத்தனை நாள் அதை சேருங்கள்

எந்த நாளும் நல்ல நாள் –
எவரோ ஒருவர் பிறந்த நாள்

– தம்பி சீனிவாசன்

அதன் அருகில் கட்டாதே' என்று சொன்னேனே. நீ அதைக் கேட்காமல் கட்டினாய். அது உதைத்திருக்கிறது. தவறு உன்னுடையது. அதற்கு நானா பொறுப்பு? நான் நஷ்டஈடு தரமுடியாது" என்று மறுத்துவிட்டான்.


நீண்ட நேரம் இருவரிடையே வாக்கு வாதம் நடந்தது. கடைசியில் அச்சுதன் பக்கத்திலிருந்த கிராமம் ஒன்றின் பஞ்சாயத்தாரிடம் சென்று முறையிட்டான். அவர்களிடம், அனந்தன் தன்னை எச்சரித்ததை மட்டும் அச்சுதன் கூறவே இல்லை. திரும்பத் திரும்ப "அனந்தனின் குதிரை என் குதிரையை உதைத்துக் காயப் படுத்தி விட்டது. அதற்கு நஷ்டஈடு வேண்டும்" என்று மட்டுமே கூறிக் கொண்டிருந்தான்.

பஞ்சாயத்தார் அனந்தனை அழைத்தனர். அவனிடம் விளக்கம் கேட்டுப் பலவித வினாக்களை அடுக்கடுக்காகக் கேட்டுத் துளைத்தெடுத்தனர். ஆனால் அனந்தன் பதில் எதுவும் கூறவே இல்லை. ஊமை போல் வாயை மூடிக் கொண்டிருந்தான். நீண்ட நேரம் அவர்கள் கேட்டுப் பார்த்தனர். அவன் ஊமைபோல் நடித்தான்.

கடைசியில் பஞ்சாயத்தார் அச்சுதனிடம், "இவன் ஊமை போல் இருக்கிறதே" என்றனர்.

உடனே அச்சுதன், 'இல்லை! இவன் ஊமை இல்லை" - சற்று முன்பு என்னிடம் பேசினானே..." என்றான்.

→



"அப்படியா? என்ன பேசினான்?" இது பஞ்சாயத்தார்.

உடனே அச்சுதன், ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு என் பார்களே... அதற்கு ஏற்பத் தன்னை அறியாது சொன்னான்: "என் குதிரை மிகவும் பொல்லாதது. உதைத்துக் காயப்படுத்திவிடும்... ஆகவே, உன் குதிரையை அதனருகில் கட்டாதே என்று என்னிடம் சொன்னானே" என்றான்.

அவ்வளவுதான். பஞ்சாயத்தார் அவன் பதிலையே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டனர். நுணலும் தன் வாயால் கெடும் அல்லவா? அச்சுதன் தானாகவே மாட்டிக் கொண்டான்.


"மிக்க நன்றி! இப்போது உண்மையை நீயே ஒத்துக் கொண்டு விட்டாய்! அவன் தன் குதிரையின் குணம் பற்றி எச்சரித்தும், நீ அதைக் கேட்காமல் உன் குதிரையை அங்கு கட்டியிருக்கிறாய்... தப்பு உன்னுடையது தான். எனவே உனக்கு நஷ்ட ஈடு எதுவும் கிடையாது" என்று பஞ்சாயத்தார் தீர்ப்புக் கூறினர்.

அச்சுதன் அவமானப் பட்டுப் போனான். அது மட்டுமா?

பஞ்சாயத்தார் மேலும் சொன்னார்கள் "அனந்தன் பெயரில் வீண் பழியாக நீ எம்மிடம் வந்து பொய் வழக்குத் தொடர்ந்திருக்கிறாய்... எனவே, அதற்குத் தண்டனையாக உனக்கு நூறு ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது!" என்றும் தீர்ப்பு கூறினார்

அச்சுதனின் கொட்டம் அடங்கியது.

மீண்டும் பஞ்சாயத்தார், "அனந்தா...! உன்னுடைய மௌனம் உனக்கு வெற்றியைத் தேடித் தந்துவிட்டது. நீ மகிழ்ச்சியுடன் வீட்டுக்குப் போ...!" என்றும் கூறினர்.



வறுமைப் புலி!


ஒரு புலவர், வேட்டையில் தீவிரப் பற்றுக்கொண்ட ஜமீன்தாரிடம், "எஜமான் அவர்கள் வேட்டையாடிப் புலிகளைக் கொன்று மக்களைக் காப்பாற்றுகிறீர்கள். என்னை இம்சிக்கும் வறுமைப் புலியையும் தாங்கள் வேட்டையாடி அருளவேண்டும்!" என்றார்.

"அப்படியா? சேவகா! இந்த மனிதருடைய துணியைப் பிடுங்கி என் எதிரே வை!" என்று புலவரின் கிழிசல் துணிகளைச் சுட்டிக் காட்டினார் ஜமீன்தார். புலவருக்குக் கிலி பிடித்துக் கொண்டது.

ஆனால் ஜமீன்தாரோ புலவரின் வறுமைக்கு எடுத்துக்காட்டான கிழிசல் துணிகளைத் துப்பாக்கியால் சுட்டு எரித்தார்.

"இனி உம்மைத் துரத்திய புலி இறந்து விட்டது!" என்று சொல்லி, புலவருக்குப் புத்தாடைகளைக் கொடுத்து அணியவைத்து, நிறையப் பொருளும் கொடுத்து அனுப்பினார் ஜமீன்தார்.

—தமிழ்த் தாத்தா
உ. வே. சாமிநாதய்யர்



காசி யாத்திரை!

முற்காலத்தில் காசிக்குச் செல்வது மிகவும் சிரமம். மாட்டு வண்டிகளில் பிரயாணம் செய்தால் பலமாதங்கள் ஆகும். திருமணம் ஆவதற்குமுன் பிரம்மச்சாரி மாப்பிள்ளை காசி யாத்திரை கிளம்புவது இந்துக்களின் ஐதீகம்!

இப்பொழுது ரயில் பிரயாணத்தில் துரிதமாகக் காசி யாத்திரை முடித்துவிட்டுத் திரும்பலாம். புனித நீர்க் கங்கையில் நீராடிவிட்டு வரவேண்டும் என்ற அவா ஒவ்வோர் இந்துக் குடும்பங்களிலும் நிலவுவதைக் காணலாம். காசியில் பல தீர்த்தக் கட்டங்களுக்குப் படகில் பயணப்பட்டு, முன்னோர்களுக்குத் திதிகளைச் செய்து குடும்பத்துக்கு க்ஷேமத்தைப் பெறுகிறார்கள் இந்துக்கள். காசிக்குப் போனால் கருமம் தொலையும் என்பது அவர்களது பூரண நம்பிக்கை! ●

விளையாட்டு குவிஸ்


1) 1980ஆம் ஆண்டு உலகின் மிகப் பெரிய செல்வர் என்ற புகழைப் பெற்ற வீராங்கனை யார்?

2) 1975ஆம் அண்டு கால் பந்தாட்ட மன்னர் பீலிக்கு, எந்தக் குழு அதிக அளவு பணத்தை வாரிக் கொடுத்தது?

3) மேற்கிந்தியத் தீவுக் குழுவில் சமீபத்தில் உலக சாதனை படைத்த ஆட்டக்காரர் யார்?

4) கபில்தேவ் எந்தத் தேசத்து ஆட்டக்காரரின் பௌலிங் சாதனையை முறியடித்தார்?

5) 1994 உலகக் கால்பந்தாட்டப் போட்டியில் திடீரென்று உச்ச நிலைக்கு வந்து, ஆட்டத்திலிருந்து துரத்தப்பட்டவர் யார்?



6) ஓஹியோ நதியில் தம் ஒலிம்பிக் தங்கப்பதக்கத்தை விட்டெறிந்த கலைஞர் யார்?

7) கிராண்ட்ஸ்லாம் வென்ற முதல் டென்னிஸ் பெண்மணி யார்?

விடை – 1. மார்டினா நவரத்திலோவா 2. நியூயார்க் காஸ்மாஸ் 3. லாரா 4. நியூசிலாந்துக்குழு ரிச்சர்ட் ஹாட்லி. 5. மாரடோனா 6. காஷியஸ் கிளே (முகம்மது அலி) 7. மௌரீன் கோனேர்லி. ●

படுபோக்கிரி!

ஷைக் சுலியா பணியாளாக மௌல்வி சாகேப்பிடம் பணி புரிந்தான். அவன் படுபோக்கிரி; புத்திசாலி. ஆனால் முட்டாள் போல் நடித்தான்.

மசூதிக்கு அருகிலுள்ள பள்ளியில் மௌல்வி சாகேப் ஆசிரியராகப் பணி புரிந்தார். மசூதிக்கு எப்பொழுதும் கிராமத்து மக்கள் வந்து கொண்டிருப்பார்கள். ஆசிரியர் ஏழையானாலும், தாம் பணக்காரரைப் போல் நடித்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் மௌல்வி சாகேப் பட்டினியால் தவித்துக் கொண்டிருந்தபோது, தம் மனைவியிடம், கஞ்சி தயாரானதும் பணியாள் ஷைக் சுலியாவிடம் சொல்லி யனுப்பக் கட்டளையிட்டிருந்தார்.

கஞ்சி தயாரானதும் ஷைக் சுலியா ஓடிவந்து, "மௌல்வி சாகேப்! கஞ்சி தயார்! வாருங்கள்!" என்று உரக்கக் கத்தினான். மௌல்வி சாகேப்பைச் சுற்றி நண்பர்கள் நின்றிருந்ததால் பணியாளின் கூவல் வெட்கத்தைத் தந்தது! பிறகு ஷைக் சுலியாவைத் தனியாக அழைத்து, "இனிமேல் எந்த விஷயம் சொல்வதானாலும் காதில் வந்து சொல்லவேண்டும். இப்படி உரக்கக் கத்தக் கூடாது!" என்று கட்டளை பிறப்பித்தார்.

சில நாள்களுக்குப் பிறகு மௌல்வி சாகேப்பின் வீடு தீப்பற்றி எரிந்தது. பணியாள் ஷைக் சுலியா மெதுவாக வந்து, அவரைத் தனியாக அழைத்துப் போய்க் காதில், "உங்கள் வீடு தீப்பற்றி எரிகிறது!" என்று நிதானமாகச் சொன்னான்.

ஆசிரியர் மௌல்வி சாகேப் வீட்டுக்கு ஓடியபோது, வெறும் சாம்பலைத்தான் பார்க்க முடிந்தது. ஷைக் சுலியாவைக் கண்டித்தபோது, "யார் முன்னாலும் உரக்கக் கத்தக் கூடாது' என்ற உங்கள் கட்டளையைத்தான் நிறைவேற்றினேன்" என்று கூறினான். என்ன செய்வது?



பிறகு, ஒருநாள் மூன்று லட்டுகளை வாங்கி வரும்படி ஆசிரியர் மௌல்வி பணியாளிடம் கட்டளையிட்டார். சிறிது நேரம் கழித்து ஷைக் சுலியா வெறும் கையுடன் வந்தபோது, "லட்டுகள் எங்கே?" என்று வினவினார் ஆசிரியர்.

"மூன்று லட்டுகளில், நீங்கள் எனக்கு ஒன்று தருவீர்கள் என்பதனால் அதைச் சாப்பிட்டு விட்டேன். நீங்கள் சாப்பிடும்போது எப்படியும் ஒரு லட்டை மீதம் வைப்பீர்களல்லவா? ஆகவே அந்த மீந்த லட்டையும் தீர்த்துக் கட்டினேன். ஒரு லட்டு மட்டும் மீதம் கொணர்ந்தால் அதை ஏற்க மறுப்பீர்கள். ஆகவே அதையும் தின்று முடித்துவிட்டேன்" என்றான் அதிபுத்திசாலிப் பணியாள்.

மௌல்வி சாகேப் இந்தப் போக்கிரியை அதற்குமேல் வீட்டில் வேலைக்கு வைத்துக் கொள்ள விருப்பமின்றி அடித்து உதைத்துத் துரத்திவிட்டார். ●

விஞ்ஞானம்

புத்தகப் பையை வேண்டா வெறுப்புடன் தூக்கிச் செல்வான் ஹம்ப்ரி டேவி. இயற்கை முறையில் கல்வி கற்கவே அவனுக்கு விருப்பம். ஏழைத் தச்சர் ஒருவருக்குப் பிள்ளையாகப் பிறந்தான். கல்வியை வேம்பாக மதித்த டேவி தாமாக விஞ்ஞானம் கற்று ரசாயன உண்மைகளைக் கண்டறிந்தார்! இவரது சொற்பொழிவைக் கேட்டே மைக்கேல் ஃபாரடே விஞ்ஞானத்தில் ஆர்வம் காட்டினார் என்றால் இவரது புலமையைக் கண்டறியலாம்.

சிறந்த படத்துக்குப் பரிசு!

உங்களுக்குப் பிடித்தமான வீட்டுப் பிராணியை வரைந்து, அதற்கு வண்ணமிட்டு (நாய், பூனை, பசு ஏதாவது ஒன்று) அனுப்பி வையுங்கள். சிறந்த படத்துக்கு ரூபாய் 25 பரிசு வழங்கப்படும்!

பணக்காரரின் சவால்!

ஒரு நாடோடிப் பாடகருக்கு ஒரே மகள். அவள் தந்தை ஆர்மோனியம் வாசிக்க, அவள் ஆடிப் பாடிக் குதிப்பாள். ஒருநாள், ஒரு செல்வர் அந்த முதியவரிடம் ஒரு சவால் விட்டார். அவர் விலையுயர்ந்த ஒரு வைரக்கல்லைத் தரையில் எறிந்து, "உனக்கு ஒரு போட்டி! நீ தரையைத் தொடாமல், உன் கைகளை விட்டு எடுக்காமல் ஒரு வைரக்கல்லை எடு, பார்ப்போம்!" என்றார்.



நாடோடிப் பாடகர் வைரக் கல்லை எடுக்க முயன்று தோல்வியுற்றார். ஆனால் அவரது மகளோ வைரக்கல் வரை சென்று இடுப்புக்குக் கீழ் குனிந்து, தன் பற்களால் தரையிலுள்ள வைரக்கல்லை எடுத்துவிட்டாள்! பணக்காரர் சவாலில் தோற்றுப்போய்த் தலை குனிந்து, விலையுயர்ந்த அந்த வைரக்கல்லை அந்த நாடோடிச் சிறுமிக்கே தந்துவிட்டார்.

தமிழில் தவறுகளை அறிவோம்

டாக்டர் தி. முத்து கண்ணப்பர்

ஆங்கில முறைப்படி, தமிழில் வழங்கிவரும் சில சொற்களும், தொடர்களும் அவற்றின் சரியான தமிழாக்கமும்

ஆங்கிலச் சொற்றொடர்களை அப்படியே தமிழில் பெயர்த்து எழுதுவது பலருக்கும் பழக்கமாகிவிட்டது. அவ்வாறு நேர் மொழிபெயர்ப்பு (literal translation) செய்வது பொருத்தமற்றதாகும்; தமிழ் மரபுக்கு முரணானதாகும். அவற்றைப் பின்வரும் சில எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

1) Win = (Won) இறந்த காலம் : வெல், வெற்றிகொள், தோல்வியுறச் செய் என்பன இந்த 'win' என்னும் ஆங்கிலச் சொல்லின் பொருள். 'He won the battle' என்றால் அவன் போரில் வெற்றி பெற்றான்/வெற்றியடைந்தான்/ வென்றான் என்பது பொருள். அப்படியானால், எதிரி தோற்றான், எதிரி தோல்வியடைந்தான் - என்பதுதானே பொருள்? ஒருவன் வென்றான் என்றால், அவனை எதிர்த்தவன் தோற்றுப் போனான். ஒரு குழு/ஒரு படை ஒரு கட்சி வென்றது என்றால் எதிர்த்த குழு/படை/ கட்சி தோற்றுப்போனது என்பதே பொருள்.

இப்பொழுது போட்டிகளில், பந்தயங்களில், விளையாட்டுகளில் பதக்கம், கோப்பை, பணமுடிப்பு முதலியன பரிசுப் பொருள்களாக வைக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட பந்தயங்களில் அல்லது போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்டு வென்றவர் உரிய பதக்கத்தையோ, கோப்பையையோ பிற பரிசுப் பொருள்களையோ அளித்துப் பாராட்டப்பெறுவர்.

இதனை 'He/they won the medal/cup' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அது அம்மொழி மரபு. அதை அப்படியே - நேர் மொழிபெயர்ப்பாகத் தமிழில், அவர்/அக்குழு/அக்கட்சி (தங்கப்) பதக்கத்தை/கோப்பையை வென்றது' என்று சொல்வது தமிழ் மரபுப்படி சரியன்று. வென்றது பதக்கத்தை அல்லது கோப்பையை அன்று. எதிர்த்தவரை வென்றார். அதன் பயனாக-பலனாக-பணயமாக/பரிசாக வைக்கப்பட்ட பதக்கத்தையோ/கோப்பையையோ வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டார். அது தானே சரியான பொருள்? இதை நன்கு சிந்திக்கவேண்டும்.

எனவே, போட்டிகளில்/பந்தயங்களில் பங்கேற்போர், திறமையால், வலிமையால் முயற்சியால் உடன்போட்டியிடுவோரை வென்று, அவ்வெற்றிக்குரிய பணயப் பொருளைப் (பதக்கம்/கோப்பை/பண முடிப்பு) பெற்று வெற்றிவாகை சூடிக் கொள்ளட்டும். தோற்றவர் சோர்வடையாமல், முயற்சியைத் தளரவிடாது, நம்பிக்கையோடு அடுத்து வரும் போட்டிகளில் எதிர்த்தவரை வென்று உரிய பதக்கங்களையோ/கோப்பைகளையோ பெற்று மகிழட்டும். 'பதக்கத்தை/கோப்பையை வென்றார்' என்பது பொருளற்றது.

'He won the admiration of the public' என்னும் ஆங்கில வாக்கியத்தை 'அவர் பொதுமக்களின் பாராட்டுதலை/புகழை **வென்றார்'** என்று மொழிபெயர்த்தல் சரியாகுமா?' அவர் பொது மக்களின் பாராட்டைப் **பெற்றார்'** அல்லது பொதுமக்களால் பாராட்டப்பெற்றார்/புகழ்ப் பெற்றார்'என்று தானே சொல்வோம்?

Take, took : 'took' என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழ்ப் பொருள் 'எடுத்தார்', 'எடுத்தது', 'எடுத்தன', 'எடுத்தனர்' - என்பன. இந்த 'took' என்னும் ஆங்கிலச் சொல்லை வைத்து 'took decision', 'took effort', 'took the class', 'took the oath' என்று பல சொற்கள் ஆங்கிலத்தில் வழங்குகின்றன. ஆங்கில மரபுப்படி அவை சரியாகலாம். ஆனால் அவற்றை அப்படியே தமிழில் நேர் மொழிபெயர்ப்பாக முறையே 'முடிவெடுத்தார்கள்' (took decision); என்றும், 'முயற்சியெடுத்தார்கள்' (took effort) என்றும், 'வகுப்பு எடுத்தார்கள்' (took the class) என்றும் 'உறுதி எடுத்துக் கொண்டார்' (took the oath) என்றும் எழுதுகிறார்களே/ பேசுகிறார்களே - அது சரியாகுமா? முடிவை, முயற்சியை, வகுப்பை, உறுதியை - எடுப்பதாவது? அவை கீழே சிந்திக் கிடக்கின்றனவா? மேலே தூக்கி எடுப்பதற்கு?

இவை நல்ல தமிழ்-மரபுப்படி முறையே முடிவு செய்தனர் (took decisions); முயன்றனர்/ முயற்சி செய்தனர்/ முயற்சி மேற்கொண்டனர் (took the efforts); வகுப்பு நடத்தினர் (took the class); உறுதி செய்தனர்/சத்தியம் செய்தனர்/ உறுதியளித்தார் (took the oath) என்று பேசுவதும் எழுதுவதும்தானே நல்ல தமிழ். இப்படியே எழுதியும் பேசியும் பழகிப்போனதால் சிலருக்கு

நம் திருத்தம் கேலியாகத் தோன்றும். ஏதோ உண்மை நிலையை - நல்ல தமிழ் முறையை - மரபைச் சொல்கிறோம். ஏற்பவர் ஏற்கட்டும்; மறுப்பவர் மறுக்கட்டும்.

2) **பேச்சுவார்த்தை நடத்தினர் :** இச்சொற்றொடர் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி முதலிய சக்திவாய்ந்த சாதனங்கள் வாயிலாக விரவிப் பரவி, இலக்கியத் தமிழிலும் எட்டிப் பார்க்கத் தொடங்கியுள்ளது. (They) conducted a discussion; they discussed: they had a discussion என்னும் ஆங்கிலத் தொடர்களின் மொழிபெயர்ப்புகளே இவை. இப்படியொரு தமிழ் இருக்க முடியுமா? பேச்சு, வார்த்தை - நடத்தல்? பேச்சையும் வார்த்தையும் நடத்துவதாவது? கூடிப் பேசினர். கலந்து பேசினர்; உரையாடினர்; விவாதித்தனர் - என்று சொல்வதுதான் நல்ல தமிழ் முறையாகத் தோன்றுகிறது.

3) **வெளிநடப்புச் செய்தனர் :** 'walk out' என்னும் ஆங்கிலத் தொடரின் நேர் மொழிபெயர்ப்பு இது. கட்டங்களினின்றும், சட்டசபை, பாராளுமன்றங்கள் முதலியவற்றினின்றும் உறுப்பினர், கூறப்படும் கருத்தை எதிர்த்து/மறுத்து அங்கிருந்து வெளியே வந்து விடுதலைக் குறிக்க ஆங்கிலத்தில் 'He-they staged a walk out' என்று சொல்வர். அது ஆங்கில மரபு. அதை அப்படியே தமிழில் 'வெளிநடப்புச் செய்தனர்' என்பது தவறன்றோ? 'வெளியேறிவிட்டனர்', 'வெளியே வந்து/சென்றுவிட்டனர்' என்பதுதானே நல்ல தமிழ்.

4) **சொந்தக் காலில் நிற்கவேண்டும் :** You should stand on your own legs - என்னும் ஆங்கிலத் தொடரின் நேர் மொழிபெயர்ப்பு இது. 'தன் கையே தனக்குதவி' என்பது தமிழில் நாம் கூறுவது அதே பொருளை உணர்த்தவில்லையா?

5) **'தேசிய நீரோட்டத்தில் கலந்து விட வேண்டும்' :** இது 'should join the national main stream' என்பதன் நேர் மொழிபெயர்ப்பு. 'தேசிய நீரோட்டம் என்றொரு நீரோட்டம் எங்குள்ளது? இது தமிழ் மரபுப்படி சரியாகாது. தேசிய உணர்வில்/தேசிய நோக்கில், தேசியப் போக்கில், தேசிய நெறியில், தேசியக் கருத்தில் இணையவேண்டும்; ஒன்ற வேண்டும் - இப்படிச் சொல்வதுதானே தமிழ் மரபு?

6) **'சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்' :** என்று 'should pay special attention' என்னும் ஆங்கிலத் தொடரைத் தமிழில் சொல்வது பொருந்துமா? கவனத்தில் சிறப்பு என்ன இருக்கிறது? அவ்வாறே 'special trains will be run' என்பதைச் சிறப்பு இரயில் விடப்படும் எனகிறார்கள். அந்த இரயில் அலங்கரிக்கப் பட்டிருக்கிறதா? 'special' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குத் 'தனியான', 'தனி', 'தனிப்பட்ட' என்னும் பொருள் உள்ளது என்பதை உணர்தல் வேண்டும். 'தனி' என்பதற்குப் பதில் 'சிறப்பு' என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? 'தனிக் கவனம் செலுத்தல் வேண்டும்', 'தனி இரயில் விடப்பட்டுள்ளது' என்பன அல்லவா பொருத்தமானவை? கிராம மக்கள் இன்றுங்கூடத் 'திருவிழாவுக்குத் **'தனி வண்டி'** விட்டிருக்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். உண்மையில் கிராம மக்கள்தான், நல்ல தமிழ், கலப்பில்லாத - பொருத்தமான தமிழ் பேசுகின்றார்கள் என்பதை மறத்தல் கூடாது. 'தமி' என்னும் சொல்லைப் பற்றிப் புலவர்களுக்குள் ஏற்பட்ட ஐயத்தைப் போக்கக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் கிராமத்திற்கு - (ஆயர்பாடிக்கு) அழைத்துப் போனதே சான்று.

7) **'உயர்மட்டக் குழு' :** 'High level committee' என்பது இவ்வாறு மொழிபெயர்க்கப்படுகிறது.

உயர் என்பதன் எதிர்ப்பதம் மட்டம். இது உயர்வானது; அது மட்டமானது என்று சொல்வதில்லையா? எனவே உயர்மட்டக்குழு என்று சொல்வது முரணானது; தவறானது. இதன் சரியான தமிழ்த் தொடர் 'உயர்நிலைக் குழு' என்பதுதான்.

8) 'They had three rounds of talks' என்னும் ஆங்கிலச் சொற்றொடர் தமிழில் 'மூன்று சுற்றுப் பேச்சு நடத்தினார்கள்' என்று வழங்கப் படுகிறது. அது 'மூன்று முறை கூடிப் பேசினார்கள்' என்பதல்லா நல்ல தமிழ்?

9) 'Good morning, Good evening, Good night' என்பவை I wish you a good morning, I wish you a good evening, I wish you a good night' என்னும் தொடர்களின் சுருக்கம். ஒருவரையொருவர் காணும்போது ஆங்கிலவர் கூறிக் கொள்ளும் உபசாரத் தொடர். அதை நாமும் பின்பற்றி வருகிறோம். தமிழ் மரபுப்படி 'வணக்கம்' என்னும் சொல் மிகச் சிறந்தது. ஒருவரை ஒருவர் காணும்போது 'வணக்கம்' என்று கூறி மரியாதையைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'வணக்கம்' தெரிவித்தலில் ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒத்த வயது, ஒத்த நிலை, ஒத்த பதவி முதலியவற்றில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் வணக்கம் செய்துகொள்ளலாம். ஆனால் சிறியவர்கள்

அல்லது மாணவர்கள் பெரியவர்களை, உயர் நிலையில் உள்ளவர்களை, ஆசிரியர்களைப் பார்த்து 'வணக்கம்' என்று சொன்னால், வணங்கினால் பெரியவர்களும் 'வணக்கம்' என்று சொல்வது அவ்வளவு பொருத்தமானதா? சிறியவர்கள்/மாணவர்கள் பெரியவர்களை வணங்கினால், அவர்கள் அவர்களை 'வாழ்க' என்று வாழ்த்துவது - ஆசி கூறுவதுதான் பொருத்தமானது.

10) 'Welcome' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு 'வருக! வருக!' என்பதுதான் பொருத்தமானது. 'நல்வரவு' என்னும் மொழிபெயர்ப்பு; தவறானது; பொருத்தமற்றது.

11) 'ஒருசில', 'ஒருசிலர்' : இவற்றை 'A few' என்பதன் தமிழ்ப் பொருளாகக் கொள்கிறார்கள். இது மிகப் பரவலாக வழங்கி வருகிறது. இது தமிழ் இலக்கண முறைப்படி தவறாகும். 'ஒரு' என்பது ஒருமை; 'சில', 'சிலர்' என்பன பன்மை. அப்படியானால் 'ஒருசில'வும், 'ஒருசிலரும்' எனக் கூறுதல் முறையாகுமோ? மேலும் இந்த 'a few' என்னும் ஆங்கிலச் சொல் அஃறிணைக்கும், உயர்திணைக்கும் பொதுவானது. ஆனால் தமிழில் 'சில' என்பது அஃறிணை, 'சிலர்' என்பது உயர்திணை. Few trees - சில மரங்கள்; few men - மனிதர் சிலர் இவற்றை முறையே 'மிகச்சில', 'சிற்சில' என்றும் 'மிகச்சிலர்' 'சிற்சிலர்' என்றும் சொல்வது அல்லவா நல்ல தமிழ்?

இவ்வாறு நூற்றுக்கணக்கான ஆங்கிலச் சொற்களும், தொடர்களும் தமிழில் அப்படியே நேர் மொழிபெயர்ப்பாகக் கொள்ளப் படுகின்றன. எடுத்துக்காட்டுகளாகச் சிலவே இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் எழுத்தாளர்கள் நன்கு சிந்தித்துப் பார்த்து, நல்ல தமிழ் வழக்கைப் பாதுகாப்பது தலையாய கடமை என்பதை உணர்ந்து உரியவாறு செயல்பட்டுத் தமிழ் அன்னையின் ஆசியையும் வாழ்த்தையும் பெறுவார்களாக!

இந்தியாவின் மிகப்பெரிய யூனானி அக்குபஞ்சர் மருத்துவமனை



100 படுக்கை வசதி கொண்ட இம்மருத்துவ மனையில் அனைத்து முறைகளைச் சேர்ந்த பிரபல டாக்டர்களின் குழு 500 வியாதிகளுக்கு இலவசமாக ஆலோசனை வழங்குகிறது. குறிப்பாக குடி, கஞ்சா, அபின், போதை ஊசி, ப்ரவுன் ஷுகர் பழக்கத்தை மறக்கடிக்க சிகிச்சை, மூட்டுவலி, சைனஸ், மூக்கடைப்பு, இடுப்புவலி, மூட்டு தேய்வு, அலர்ஜி, ஆஸ்துமா, வெண்குஷ்டம், தோல் வியாதிகள், இளம்பிள்ளைவாதம், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் கோளாறுகள் நீங்க சிகிச்சை, 500 வியாதிகளுக்கு 23 புத்தகங்கள் எழுதியவர், ஏழைகளுக்கு இலவச தங்கும் வசதி, இலவச அக்குபஞ்சர் சிகிச்சை அளிக்கும் டாக்டர் அக்பர் கவுஸரின் ஆலோசனை - இலவச புத்தகம் பெறக் கடிதம் எழுதலாம் அல்லது நேரில் வரவும்.

டாக்டர் அக்பர் கவுஸரின் மறுவாழ்வு மையம்

370, மசூதி வீதி, நியுடவுன், வாணியம்பாடி - 635752. வடஆர்க்காடு மாவட்டம்.

புதுவையில் சிறுகதை வளர்ச்சி

புலவரேறு அரிமதி. தென்னகன்

மூர்த்தியால் சிறிதாயினும் கீர்த்தியால் பெரிது' என்பது புதுவைக்கு வரலாற்றால் சேர்ந்த புகழாகும்.

எந்தத் துறையாயினும், அந்தத் துறையில் தகுதிமிக்க இடத்தைப் பெற்றுள்ள ஏற்றம் புதுவைக்கே உரிய தனித்தன்மை யாகும். அந்த நிலை, படைப்பிலக்கியத் துறையிலும் புதுவைக்குப் பொருந்துவதாகும்.

பாரதி, பாரதிதாசன் காலத்திலேயே சிறுகதைத் துறை, தன் போக்கில் ஒரு சமுதாய மாற்றத்தைத் தொடங்கி விட்டது எனலாம். தற்கால நிலையில் சிறுகதை என்ற உடனேயே 'பளிச்' செனச் சிலர் தம் நினைவு தானே வந்து முன் நிற்கும்!

'எண்ணிப் பார்ப்போமா' என்னும் போது மேலும், சிலரை நினைவிற்கொண்டு வர முடியும்.

'முயல்வோமே' என்னும் போது மேலும் சிலரை நினைவிற் கொண்டு வரமுடியும்.

'வேத'பித்து சிறுகதைத் தொகுதியைப் பார்த்தோமேல்...

1. சிறுகதைத் துறையில் வெற்றி பெற்றோர்.

2. கருவிகள் ஏந்திக் களத்தில் தயார் நிலையில் நிற்போர்க்கு இணையானோர்.

3. படைக்களம் நோக்கிப் பயணம் செய்ய விருப்பம் கொள்வோர்க்குச் சமமானோர் எனும் மூன்று நிலைப் போக்கினரையும் நம்மால் காண இயலும்.

புதுவையெனும் சிறுகதை வானில் சூட்டாலும்.... சுவையாலும்... கருத்தாலும்.... நடையாலும்... 'சூரியச் சந்திரனாக' விளங்கி வருபவர் 'பிரபஞ்சன்!'

அடுத்த நிலையில் நிற்பவர் சந்திர ஹரி 'ஒரு பக்கக் கதை'க்கு அணி சேர்த்து, புகழ் சேர்த்து வருபவர் இவர். ஏடுகள் நடத்தும் சிறுகதைப் போட்டியில் பெரும்பாலும் வெற்றி பெறுபவர் என்பது இவர்தம் தனித்திறம்! 'வெளியிடத் தகுதி பெற்றது' என்னும் அளவிலாவது – கலந்து கொள்ளும் போட்டிகளில் – வெற்றி பெறுவது இவர் சிறப்பு!

ப. முருகசேன் அவர்களையும் தங்க – சிவராசன் அவர்களையும், புதுவையைப் பொருத்த வரை – 'சிறுகதை இரட்டையர்' – என்றே கூறலாம்! பல நிலைகளில் இருவர்க்குமே பொதுவான சில தனித்தன்மைகள் உண்டு.

ஆசிரியப் பணி, மாணவர் சமுதாயம் போன்றவையே பெரும்பாலும் இவர்களின் கதைக் கருவின் களங்களாக அமையும்!

இருவருமே ஆசிரியர்கள். சமுதாயப் பார்வையே இருவர்க்கும் உயிர்ப்பு!

போட்டிகளில் பங்கு பெறுவது, வெற்றி பெறுவது, வெளியிடப் பெறும் சிறப்பினையாவது பெறுவது, இவர்களது வாடிக்கை.

எஸ். குமார கிருஷ்ணன், முன்னவர்களுக்கு இணையாக வளர்ந்து வருபவர்.

ஏடுகளுக்குத் துணுக்குச் செய்திகளைத், தந்து புதுவையின் சிறப்பினை, நாட்டிற்கு அறிவிக்கும் பணியில் முன் நிற்பவர் நித்திலன். முறையான – படிப்படியான வளர்ச்சியின் சின்னமாக நித்திலன் அவர்கள் அலுவலகம் சார்ந்த கருக்களைக் கதைகளாகத் தந்து வளர்ந்து வருகிறார்.

ரா.ரஜினி வளர்ந்து வரும் இளைய தலைமுறையில் குறிப்பிடத்தக்கவர். சிறுகதைத்துறையில் முத்திரை பதிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தோடு முன்னேறி வருபவர் இவர்.

ஏடுகளோடு தொடர்பு தொடர்பு கொண்ட மேற்கண்டவர்கள் அனைவருமே சிறுகதைத் தொகுதிகளை நூல்களாகவும் வெளியிட்டுள்ளார்கள்.

குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு இதழ்களோடு தொடர்பில்லா நிலையிலும் சிறுகதைத் துறையில் வெற்றி படைப்பவர்களும் உள்ளார்கள்.

பேராசிரியர்கள் சோதி, நாகப்பா –நாச்சியப்பன், எ.மு. ராஜன், சாயபு மரைக்காயர் மற்றும் தேவிதாசன், நா. ஜெயசீலன், மதகடிப்பட்டுக் கலைச் செல்வன் அ.கு. முரளி, தமிழமல்லன், பூதலூர் முத்து, சி.எஸ். முருகேசன், பரம சேது, அரிமதி தென்னகன் ஆகியோர் நூல்கள் படைப்பதன் மூலம் சிறுகதை வளர்ச்சிக்கு ஆவன செய்து கொண்டு வருகிறார்கள்.

பேராசிரியர் அ. பசுபதி, தமிழமல்லன் ஆகிய இருவரும் தனித் தமிழ் நோக்கோடு சிறுகதைகளைப் படைத்து வருகின்றனர்.

சோதி. நா. ஜெயசீலன், தமிழமல்லன், பூதலூர் முத்து, அரிமதி தென்னகன் போன்றோர் சிறுவர்க்கான சிறுகதைகளையும் படைத்து வருகின்றனர்.

'சிறுவர் இலக்கியச் சித்தர்' என்று பாராட்டும் அளவிற்குப் பேராசிரியர் சோதி அவர்கள் சிறுவர்க்கான சிறுகதைத் துறையில் புதுமை படைத்து வருகிறார்.

மேலும், பல இளைஞர்கள் சிறுகதைத் துறையில் ஆர்வம் பெற்றிருப்பதையும், இதழ்களில் இடம் பெற முயற்சி செய்வதையும், காண முடிகிறது.

புதுவை இஸ்லாமிய இலக்கிய வரலாறு

பேராசிரியர் மு. சாயபுமரைக்காயர்

பழைமைச் சிறப்பும் பண்பாட்டு நலமும் மிக்க புதுவை மாநிலம், பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் தமிழ்நாட்டின் ஒரு மாவட்டத்தை விடச் சிறியதாக இருப்பினும் இலக்கிய வளத்தில் ஈடிணையற்றது. மணித்தமிழுக்கு அணி சேர்த்த புதுவைப் புலவர்களுள் இஸ்லாமியப் புலவர்களின் பங்களிப்பும் மகத்தானது. புதுவை மாநிலத்தின் தமிழ்ப் பகுதிகளாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் எண்ணற்ற இஸ்லாமியப் புலவர்கள் வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றியுள்ளனர். அவர்களுள் சிலரை அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஜெய்னுலாபுதீன் சாயபு:

புதுவையில் கி.பி. 1872 இல் பிறந்த ஜெய்னுலாபுதீன் சாயபு சிறந்த நாடக ஆசிரியராகத் திகழ்ந்தவர். மகாகவி பாரதியார் புதுவையில் தங்கியிருந்த போது அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். தன்னைவிட வயதில் இளையவரான பாரதிதாசனாரோடும் நட்புறவு கொண்டிருந்தார்.

எத்தனையோ, புராணக் கதைகளை இவர் நாடகமாக்கியுள்ளார். அவற்றுள், "குலேபகாவலி", "சீதா கல்யாணம்", "நல்லதங்காள்", "வனமாலிகா" போன்றவை சிலவாகும். "மதிமிகு மகாராஜன் சரித்திரம்" என்ற நாடக நூலே இவர் எழுதியுள்ள நூல்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். கற்பின் பெருமையும், பக்தியின் உயர்வும் இந்நாடகத்தின் கதைப் பொருளாக உள்ளன.

இவர் எழுதிய "திருமண வாழ்த்துப் பாடல்கள்" தொகுப்பு ஒன்று கிடைத்துள்ளது. இத்தொகுப்பில் அடங்கியுள்ள எல்லாப் பாடல்களும் கிறிஸ்துவத் திருமணங்களில் பாடப்பட்டவையாகவே காட்சியளிக்கின்றன. மேலும், புதுவையின் பல்வேறு சிறப்புகளையும் இத்திருமண வாழ்த்துப் பாடல்களில் போற்றிப் புகழ்ந்துள்ளார் புலவர் ஜெய்னுலாபுதீன்.

'அமுதகவி' சாயபு மரைக்காயர்:

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி, இந் நூற்றாண்டின் இடைக்காலம் வரை வாழ்ந்த 'அமுதகவி' சாயபு மரையக்காயர், கி.பி. 1878 இல் காரைக்காலில் பிறந்தவர். சிறந்த மார்க்க அறிஞர்: கருநாடக இசையிலும் புலமை மிக்கவர்: பாரதியைப் போன்று பல்வேறு ராகங்களிலும் பாடல்களை இயற்றித் தாளக்குறிப்பும் தந்துள்ளார்.

"மஃபூபு பரபதக் கீர்த்தனம்", "உபதேசக் கீர்த்தனம்", "மனோன்மணிக் கும்மி", "மும்மணி மாலை", "சன்மார்க்க போதினி" முதலான 12 நூல்களை இவர் இயற்றியுள்ளார். இசையுடன் பாடுவதற்கேற்ற இனிய நூல்களை இயற்றித் தந்தமையால் புலவர் பெருமக்களாலும், பொதுமக்களாலும் "அமுத கவி" என்று பாராட்டப் பெற்றவர்.

"சாயபு மரைக்காயரின் பாடல்களைப் பார்க்கும்போது அவருடைய சமயப் பற்று, இசைத்திறன், இலக்கணப் புலமை, தமிழார்வம் அனைத்தும் நன்கு விளங்குகின்றன. தமிழர் இசைக்கு உதவிய பெரியவர்களில் இவரும் ஒருவர் என்று கருதுவதில் தவறில்லை. இந்நூற்றாண்டின் தொடக்க காலத் தமிழர் இசை பற்றி நன்கு அறிய இவருடைய பாடல்கள் சிறப்பாக உதவுகின்றன" என்று கலைமாமணி டாக்டர் ஏ.என். பெருமாள் பாராட்டியிருப்பது ஈண்டு குறிக்கத்தக்கது. ("தமிழர் இசை" பக்- 560) இஸ்லாத்துக்கும், இசைத்தமிழுக்கும் இணையற்ற தொண்டு புரிந்த "அமுதகவி" சாயபு மரைக்காயர் கி.பி. 1950 இல் இறையடி சேர்ந்தார்.

அல்லாமா ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி:

அரபி மொழியில் அருளப் பெற்ற திருக்குர்ஆனுக்குத் தமிழாக்கம் தந்த பெருமை காரைக்காலுக்கே உரியது. அல்லாமா ஆ.கா. அப்துல்ஹமீது பாகவி அவர்கள் 1926-ஆம் ஆண்டில் மொழியாக்கப் பணியைத் தொடங்கி, 1949 இல் திருக்குர்ஆன் முழுவதையும் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தார். "தர்ஜுமதுல் குர்ஆன்" என்னும் இவர் தம் மொழி பெயர்ப்பு, தமிழ் முஸ்லிம்களிடையே நன்கு பரவியுள்ளது.

ஏ. எம். அலி: பிரெஞ்சு மொழிப் புலமை மிக்கவராகிய இவர், பத்துக்கும் மேற்பட்ட பிரெஞ்சு நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். "மாப்பசான் கதைகள்", "ரயில் காதல்", "கோழித் திருடன்" போன்றவை இவர் தம் மொழி பெயர்ப்பு நூல்களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை. "சாந்தி விகடன்" என்

னும் மாத இதழை மூன்றாண்டுகளுக்கு இவர் நடத்தியுள்ளார்.

நாவலர் ஏ.எம். யூசுப் : நாற்பதாண்டுகளுக்கும் மேலாக "மறுமலர்ச்சி" என்ற வார ஏட்டை வெற்றிகரமாக நடத்தி வந்த இவர் அண்மையில் மறைவுற்றார். "மறைவழி கண்ட மாமன்னர் சேரமான் பெருமாள்", "இப்பி பக்கீர்", "மெஹர் நூர்" போன்ற சிறந்த வரலாற்றுப் புதினங்களை இவர் எழுதியுள்ளார்.

காரை–இறையடியான்: தலைசிறந்த மரபியற் கவிஞராகிய இவர்தம் இயற்பெயர் மு. முகம்மது அலி என்பதாகும். "பூஞ்சோலை" என்னும் தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழை ஒன்பதாண்டுகள் நடத்தியவர். பத்து நூல்களை இவர் இயற்றியுள்ளார். நபிகள் நாயகத்தின் பொன்மொழிகளை 2000 குறட்பாக்களாக இவர் எழுதியுள்ள "நபிமொழிக்குறள்" இவ்வாண்டு தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது.

பிற இஸ்லாமியப் புலவர்கள்: புதுச்சேரியில் வாழ்ந்த பிற, முஸ்லிம் புலவர்களுள் து.இ. மதார் சாயபு, ஒ.ப. காதர் முகையதீன், எம்.எச். ஷிகாபுதீன் போன்றவர்கள் குறிக்கத்தக்கவர்கள். அவ்வாறே காரைக்கால் புலவர்களுள் முகம்மது மீரா லெவ்வை மரைக்காயர், மு.செ. சுல்தான் அப்துல் காதர், ம. காதிறு கனி ஆகியோர் குறிப்பிட வேண்டியவர்கள். மேற்கூறிய புலவர்களே அல்லாமல் முகம்மது இபுராகீம்கான், காதர் மஸ்தான் சாயபு காதிரி, மு.வெ. அப்துல் அஜீஸ் மரைக்காயர், மு.முகம்மது, அப்துல்காதர், செ. முகம்மது மொய்தீன், காரை அலீம் முதலான காரைக்காலைச் சேர்ந்த இஸ்லாமியப் புலவர்களும் இலக்கிய வரலாற்றில் எண்ணத் தக்கவர்கள்.

தற்கால இஸ்லாமியத் தமிழறிஞர்கள்: தற்காலத்திலும், இஸ்லாமியத் தமிழ் வளர்க்கும் அறிஞர்களும், கவிஞர்களும் புதுவை மாநிலத்தில் வாழ்ந்து வருகின்றனர். "இஸ்லாம் எங்கள் வழி; இன்பத்தமிழ் எங்கள் மொழி" என்ற இலட்சிய கீதத்தை உருவாக்கிய இலக்கிய வாதியாகிய ஆ.கா.அ. அப்துஸ் ஸமத் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இவர் ஏற்றமிகு எழுத்து வேந்தர்; எழுச்சிமிகு இதழாசிரியர்; "மணிவிளக்கு" என்ற மாத இதழை நாற்பதாண்டுகள் நடத்திய இவர் தற்போது, "மணிச்சுடர்" என்ற நாளிதழின் ஆசிரியராகவும் திகழ்கிறார். "சிராஜுல் மில்லத் சிந்தனைகள்" என்னும் கட்டுரைத் தொகுப்பு இவர்தம் எழுத்தாற்றலுக்கோர் எடுத்துக்காட்டு!

பல்வேறு துறைகளிலும் 56 நூல்களை எழுதி வெளியிட்டுள்ள பல்கலைச் செல்வர் பேராசிரியர் மு. சாயபு மரைக்காயர், புதுவைக்குப் புகழ் சேர்க்கும் எழுத்தாளர்களுள் ஒருவராவார். இவர் தம் "இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு" விருது பெற்றது; "பாரதிதாசன் வாழ்விலே" "அறிவியல் அறிஞர்கள்" ஆகிய நூல்கள் ஏ.வி.எம். அறக்கட்டளையின் தங்கப் பதக்கங்களைப் பெற்றவை; "பாரதிதாசன் ஆய்வுக் கோவை" புதுவை அரசின் இலக்கியப் பரிசு ஐயாயிரம் ரூபாய் பெற்றது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். பத்துக்கும் மேற்பட்ட இவரது நூல்கள் யாவும் குறிப்பிடத் தக்கனவாகும்.

இவருடைய துணைவியாராகிய பேராசிரியை சா. நசீமா பானு, தமிழ் இலக்கிய ஆய்வில் நூலெழுதி வெளியிட்ட முதல் முஸ்லிம் பெண் எழுத்தாளர் என்ற சிறப்பு மிகு பெருமைக்குரியவர். மேலும் வெளிவந்துள்ள இவரது பல்வேறு நூல்கள் குறிக்கத்தக்கன.

மற்றும் முகம்மது ஆரிப் மியான் புதுவையில் வாழும் மற்றொரு தமிழறிஞர் ஆவார். "நாயகத் தமிழ்", "இஸ்லாமியத் தமிழ்", "கொஞ்சும் தமிழ்", "சீறாத் தமிழ்" போன்றவை இவர் தம் சிறப்பான நூல்களாகும்.

இவர்களேயன்றிப் பேராசிரியர் மு.இ. அகமது மரைக்காயர், பேராசிரியர் ஹ.மு. நத்தர்ஷா, புலவர் கமால் அப்துல் காதர், செ.மு. வாப்பு மரைக்காயர், நசீமா அகமது, மு.இ. முகம்மது ஹசன் மரைக்காயர் போன்றோரும் புதுவையில் இலக்கியப் பணி ஆற்றி வரும் முஸ்லிம் எழுத்தாளர்கள் ஆவர்.

தமிழ் வளர்த்த புதுச்சேரி

"அந்தாதி அரசு" ப.சு. அரியபுத்திரனார்.

ஆன மொழியாவும் ஆகும் முனம் தோன்றி
அன்னை எனும் பேரை அடைந்தவளே!
ஞான மிகுந்தோங்கும் மோன நிலைமேவும்
ஞானி அகத்தியனார் நன்கோம்பி
கான மிகுத்தோங்கு கன்னித் தமிழன்னை
கண்ணின் மணிபோலே காத்ததன்பின்
தேனின் இனித்ததமிழ்த் தேவி உனைவளர்த்த
சிறப்பு பெற்றதிந்தப் புதுச்சேரி.

கவிஞர் புதுவைச் சிவம்

புதுவை சிவ. இளங்கோ

இந்தாண்டுகளுக்கு முன்பு தனது 85ஆம் வயதில் காலமான கவிஞர் ச.சிவப்பிரகாசம், பாரதியார், பாரதிதாசனின் இணை காலத்தவர். பாரதிதாசனுடன் 1927 முதல் சீர்திருத்தப் பாதையில் இணைந்து பணியாற்றியவர். புரட்சிக் கனல் தெறிக்கும் இவருடைய பாடல்கள், தந்தை பெரியாரின் 'குடி அரசு', 'விடுதலை' இதழ்களிலும், அறிஞர் அண்ணாவின் 'திராவிடநாடு' இதழிலும் மிகுதியாக இடம்பெற்றன. இவரது பிரச்சாரப் பாடல்களும், சீர்திருத்த நாடகங்களும் இயக்க மேடைதோறும் பாடி, நடிக்கப்பட்டன.

'புதுவைச்சிவம்' என்ற புனைபெயரில் எழுதிவந்த ச.சிவப்பிரகாசம் 1930 இல் பாரதிதாசனுடன் இணைந்து 'புதுவை முரசு' என்னும் இதழை நடத்தினார். பின்னர் 1935இல் 'ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம்' என்னும் கவிதை இதழில் பாரதிதாசனுடன் கவிதைப் பணி புரிந்துவந்தார்.

மகாகவி பாரதியின் பேரில் பெரிதும் மதிப்புக் கொண்டவர். பாரதியாரை, சீர்திருத்த இயக்கக் கவியாக மட்டுமல்லாது சீர்திருத்த இயக்கத் தலைவராகவுமே 1950இல் வெளியிட்ட தனது 'மகாகவி பாரதியார்' என்னும் நூலில் சிவப்பிரகாசம் சித்திரித்து இருக்கிறார்.

பாரதிதாசனின் நெருங்கிய தோழராக விளங்கிய சிவப்பிரகாசம் பாரதிதாசன் பாடல்களைப் படி எடுத்து இதழ்களுக்கு அனுப்புவதை விருப்பப் பணியாக மேற்கொண்டார். பாரதிதாசனின் கவிதைகள் முதன் முதலில் நூல் வடிவம் பெற வைத்தார். 'புரட்சிக்கவி' முதலிய பல நூல்களை வெளியிட்ட சிவப்பிரகாசம், பாரதிதாசன் நூல்களுக்குச் சிறப்புரை எழுதிய பெருமை பெற்றவர். இருவரும் இணைந்து புதுவையில் ஆசிரியர் பயிற்சிக்கு நடத்தப்படும் 'பிரவே' என்னும் தேர்வுக்காகப் பயிற்சி வகுப்புகள் நடத்தி வந்தனர். 'இலக்கிய மன்றம்' எனும் அமைப்பின் மூலமாக பலருக்கும் கவிதை, பேச்சுப்பயிற்சிகள் நடத்தி வந்தனர். இவர்கள் நடத்திவந்த பல அமைப்புகளுக்கும் தலைவர் பாரதிதாசன்; செயலாளர் சிவப்பிரகாசம்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகிய தலைவர்களின் நெருங்கிய தோழராக விளங்கிய சிவப்பிரகாசம், அவர்களது நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தும் இருக்கிறார். முதன்முறையாக பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைக் கவிதை நூலாகவும், பெரியார் பற்றிய இந்தியத் தலைவர்களின் கருத்துத் தொகுப்பினையும் மேலும் பெண் விடுதலை, பொதுவுடைமை, சமதர்மம் ஆகியவற்றை வலியுறுத்தும் தனது கவிதைத்தொகுதிகள் பலவற்றையும், தனது 'ஞாயிறு நூற் பதிப்பகம்' வாயிலாக வெளியிட்டிருக்கிறார். இவரது பல நாடகங்கள் 1935-1960 கால கட்டங்களில் புதுவை, தமிழக மேடைகளில் மட்டுமன்றி இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் நடைபெற்றன.

தமிழிசைக்கு சிவப்பிரகாசம் ஆற்றிய தொண்டு மகத்தானது. தமிழிசைக்கு 1940களில் உரிய இடம் அளிக்க வேண்டும் என்று பல தமிழறிஞர்கள் தமிழ் இயக்கத்தைத் தொடங்கிய போது தனது பங்காக கீர்த்தனைக்கேற்றவாறு, பகுத்தறிவை வலியுறுத்தும் தமிழ்ப் பாடல்கள் பல இயற்றி 'தமிழிசைப் பாடல்கள்' என்ற தொகுப்பாக 1950இல் வெளியிட்டார். பல இசை அமைப்புகள் இந்தத் தமிழிசைப் பாடல்களை மேடை தோறும் பாடின. பேரறிஞர் அண்ணா இவரது கவிதையைக் கேட்டுப் பெற்று 'திராவிட நாடு' இதழில் வெளியிட்டார். அண்ணாவே சில கருத்துகளை எழுதி சிவபிரகாசம் அவர்களுக்கு அனுப்பி, அதைக் கவிதையாக மாற்றி அனுப்பச் சொல்லி வாங்கி, அக்கவிதை 'திராவிடநாடு' இதழில் வெளியானதும் உண்டு. இவரது பல கவிதைகளுக்கு அறிஞர் அண்ணா மதிப்புரை எழுதியதோடு புதுவைச்சிவம் கவிதைகளின் ஆய்வுக் கட்டுரையையும் 'திராவிடநாடு' ஏட்டில் எழுதி வந்தார்.

இவரது தமிழ்ப் பணிக்காக 1983ஆம் ஆண்டில் தமிழக அரசு இவருக்கு 'பாரதிதாசன் விருது' அளித்துக் கௌரவித்தது. பல தமிழ் அமைப்புகளும் / போற்றிப் பாராட்டிய பெருமை பெற்ற இவர் இறுதிவரை இலட்சியத்திற்காகவே வாழ்ந்தவர். மறுமலர்ச்சிக் கவிஞர், சுயமரியாதை வேர், பகுத்தறிவுக் கவிக்கோ என்றெல்லாம் பாராட்டப் பெற்ற சிவப்பிரகாசம் அவர்களைப் பற்றி 1944ஆம் ஆண்டில் பாவேந்தர் பாரதிதாசன் 'பெரியார் பெருந் தொண்டு' எனும் நூலின் முன்னுரையில் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"சிவப்பிரகாசம், இலக்கியம், இலக்கணம் முறையே படித்தவர்.. சிறு வயது முதல் நம் சுயமரியாதை இயக்கத்தில் பற்று மிக்குடையவர். அதனால் அவர், அந்நாள் முதல் இந்நாள் வரை உற்றுவரும் இன்னல்-எதிர்ப்பு-பன்னற்கரியவை. தம்மை விளம்பரப்படுத்திப் பிழைப்புக்கு வழி தேடாதவர்."

கன்னி - காளை உருவ மாற்றங்கள்: தொன்மம்

திருமதி ச.மதனகல்யாணி

நாட்டுப்புறப் பாடல்களில் ஒருதலைக்காமம் கொண்ட ஒரு காளை. அவனைவிட்டு விலகும் கன்னி பல உருமாற்றங்கள் ஏற்க, தானும் அதற் கேற்றாற்போல் உருமாற்றம் கொண்டு தன் காதல் உண்மையானது என்று வெளிப்படுத்தும் வகையில் தமிழிலும் பிரெஞ்சிலும் பாடல்கள் உள்ளன:

தமிழ்ப் பாடல்:

காளை: ஊரார் உறங்கையிலே
உற்றாரும் தூங்கையிலே
நல்லபாம்பு வேடங்கொண்டு
நான்வருவேன் சாமத்திலே

கன்னி : நல்லபாம்பு வேடங்கொண்டு
நடுச்சாமம் வந்தாயானால்
ஊர்க்குருவி வேடங்கொண்டு
உயரப் பறந்திடுவேன்

கா : ஊர்க்குருவி வேடங்கொண்டு
உயரப் பறந்தாயானால்
செம்பருந்து வேடங்கொண்டு
செந்தூக்காய்த் தூக்கிடுவேன்.

க : செம்பருந்து வேடங்கொண்டு
செந்தூக்காய்த் தூக்கவந்தால்
பூமியைப் பிளந்தல்லோ
புல்லாய் முளைத்திடுவேன்

கா : பூமியைப் பிளந்துநீயும்
புல்லாய் முளைத்திட்டால்
காராம்பசு வேடங்கொண்டு
கடித்திடுவேன் அந்தப் புல்லை

க : காராம்பசு நீயானால்
கழுத்துமணி நானாவேன்
நத்திவரும் மச்சானுக்கு
முத்துச் சரம் நானாவேன்

(முருங்கப்பாக்கம் சுற்று வட்டாரத்துப் பெண்கள் பாடியது)

பிரெஞ்சுப் பாடல்:

காளை: மார்க்கரேட் என்கண்ணே
என்சின்ன இதயமே
என்னை நீ ஏற்றுஇன்பம் தந்தால் - நான்
ஐந்நூறு காசு உனக்கு ஈவேன்.

கன்னி: ஐந்நூறு காசுநீ, எனக்கீந்தால் - நான்
"கன்னியஸ்திரியாய்" வேடங்கொண்டு
மடத்தில் சேர்வேன்
வாழ்நாள் முழுவதும் வருத்த மில்லாமல்
காலத்தைத் தள்ளிடுவேன்

கா : மடத்தில் நீ "கன்னிய ஸ்திரியாய்"
ஆகிவிட்டால்
பாதிரி யாராய் ஆகிடுவேன் நான்.
பாதிரி யாராய் மடத்துப் பெண்களுக்கு
பாவ மன்னிப்புத் தருவேன் நான்.

க : பாதிரி யாராய்நீ ஆனால் ரோசாச்செடியில்.
ரோசாவாய்ப் பூத்திடுவேன் நான்
எந்தக் காளையும் என்மனத்தில்
இடம்பிடிக்க இயலாது.

கா : ரோசாப் பூவாய் நீபூத்து இருந்தால்
தோட்டக் காரன் வேடங் கொண்டு
ரோசாப் பூவைக் கிள்ளிப் பறிப்பேன்

க : தோட்டக் காரன் நீயானால்
காடையாய் நானாவேன்
கடியநான் வயலில் பறந்து வருவேன்.
எந்தக் ...

கா : காடையாய் நீயானால்
வேட்டைக் காரனாய் நான்
வேடங் கொள்வேன்
வயலை வலம்வரும் காடையை
வேட்டை யாடுவேன்.

க : வேட்டைக் காரனாய் வேடங் கொண்டால்-
நான்
மீனாய் வேடங் கொண்டு ஆற்றில்
இருப்பேன்
எந்த ...

கா : மீனாய் வேடங் கொண்டு ஆற்றில்
நீயிருந்தால்
செம்படவ னாக வேடங் கொண்டு
வலைவிரிப்பேன்
வலைவிரித்து வளைத்துஉன்னைப்
பிடித்து விடுவேன்

க : செம்படவ னாகவேடங் கொண்டு
வலைவிரித்து
வளைத்துஎன்னைப் பிடித்தால் - நான்
மாய்ந்து மஞ்சத்தில் சாய்ந்திடுவேன்
எந்தக் ...

கா : நீமாய்ந்து பஞ்சத்தில் சாய்ந்து விட்டால்-
நான் சொர்க்கத்தில் செயிண்ட்பீட்டர்
ஆகிநிற்பேன்.
செயிண்ட்பீட்டர் ஆகிஎன் நண்பர்க்கு
மட்டுமே
சொர்க்கவாசல் திறப்பேன்.

க : நீ செயிண்ட் பீட்டர் ஆகி விட்டால் - நான்
நீலவானத்தில் நட்சத் திரமாய் மாறிடுவேன்
எந்தக் ...

க : நீ நில வானத்தில் நட்சத் திரவேடங் கொண்டால்
நான் வெள்ளை மேகமாய் வேடங்கொண்டு
நீலவான நட்சத் திரத்தைத் திரையிடுவேன்

க : நீ வெள்ளை மேகமாய் வேடங் கொண்டால்
என்வெளுத்த கரத்தைப் பற்றிடு வீரனே!
ஏனென்றால் அவ்விடத்தும் - நீ
என்னைப் பின்தொடர்ந்து வரத் துணிந்தாய்

இத்தகைய உருமாற்றப் பாடல்கள் இருமொழி களிலும் பல்வேறு விதமாய் வருகின்றன.

இப்பாடல்களின் பொதுமையால், கண்டம், நாடு, மதம், இனம், மொழி சமுதாயப் பண்பாடு முறைகள் ஆகியவற்றில் வேற்றுமைகள் இருப்பினும் பாடல் படைத்தோரின் இணையொத்த கண்டுபிடிப்புகள் கருத்தாக்கத்தில் ஒன்றியுள்ளன. இருவேறு பண்பாடுகள் நேருக்குநேர் இணைகின்றன. அவை:

1 ஒருதலைக் காமத்திற்குரியவனான காளை.

2 அவனின்று விலகும் கன்னியின் உருமாற்றங் கள். அவனை அடைய காளை ஏற்கும் உருமாற்றங்கள். இவ்விருவரின் உருமாற்றங்களின் இயல்பிறந்த ஆற்றல்.

3 காளையின் உள்ளத்தில் உள்ள உண்மையான காதலை அறிந்து அவனைக் கன்னி ஏற்றல்.

வேற்றுமைகளையும் காண்போம்.

1 காளையை ஏற்காத காரணம்.

பிரெஞ்சில்:

பண ஆதிக்கம்: பணக்கார இனத்தைச் சேர்ந்தவன் பணத்தைக் காட்டி அப்பெண்ணை மயக்க எண்ணுகின்றான். தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத் துறவறத்தையும் தேர்ந்தெடுக்கும் கன்னிப்பெண்.

தமிழில்:

சமுதாயச் சட்ட முறையின் ஆதிக்கம்: உற்றார் உறவினர் போட்ட தடைகளை மீறமுடியாத பெண்ணை அடைய நல்ல பாம்பாகச் சீற்றம் கொண்டுவரும் காளை.

2 உருமாற்றங்கள்:

பிரெஞ்சில்

ஆண்:	பெண்:
பாதிரியார்	கன்னியாஸ்திரீ
தோட்டக்காரன்	ரோசா
வேட்டைக்காரன்	காடை
செம்படவன்	மீன்
செயின்ட் பீட்டர்	பிணம்
மேகம்	விண் மீன்

தமிழில்

பெண்: கன்னி
ஊர்க்குருவி
புல்
கழுத்துமணி
முத்துச்சரம்

ஆண்: நல்லபாம்பு
செம்பருந்து
காராம்பசு
காராம்பசு
மச்சான்

பிரெஞ்சுப்பாடலில் வரும் ஏழை இனத்தைச் சேர்ந்த கன்னியின் "வேடங்கள்" அல்லது அவதாரங்கள் அண்டகோளத்தில் ஐக்கியமாகும்படி மலர்ச்சியைத் தோற்றுவிக்கின்றன. மானுடம் - தாவரவினம் - விலங்கினம் - மரணம் - அண்டகோளம் காளையோடு மனிதனாகவே இருந்து தேவநிலை அடைந்து அண்ட கோளம் நோக்கிப் பாய்கின்றான். இந்த ஐக்கியமே இக்கன்னியையும் காளையையும் இத்தரையில் ஒன்றாய்ச் சேர்க்கின்றது.

தமிழில் வரும் கன்னியின் அவதாரங்கள் மேல் நோக்கிச் சென்றாலும் பின் பூமிக்கே திரும்பி, உயிரற்ற உயர்ந்த விலை மதிப்பற்ற சடப்பொருளாய்க் காளையின் கழுத்தை வளைத்திருக்கின்றாள். சமூகத்தடையை நல்ல பாம்பு சீற்றத்தால் எதிர்த்த காளையின் கடுமையைத் தணிக்கின்றன, அப்பெண் ணின் அவதாரங்கள். அவனைக் காராம்பசுவாக, மானுடத்தை வாழவைக்கும் தெய்வத்தன்மை தாங்கிய பசுவாக மாற்றுகின்றன. அந்தச்சாந்த சக்தி முன் அவள் பணிந்து உயர்ந்து நிற்கின்றாள். அவன் அன்பில் ஒடுங்குபவளாய் ஆகின்றாள். தமிழ்ப்பாட்டில் இந்த அன்பின் ஒடுக்கத்தை ஒரு குறியீட்டால் பாமரமக்கள் முடிக்கின்றனர்.

உருமாற்றத் தொன்மம்:

இப்பாடல்களின் வாயிலாக உலகளாவிய பண்பாட்டுப் படி மலர்ச்சிக்கோர் எடுத்துக்காட்டாய் அமைகின்றது உண்மைக்காதலின் வெளிப்பாடு மனித நேயத்தின் அடிப்படையாக மலர்கின்றது.

ஆனந்தரங்கம் பிள்ளை:-
ஆனந்தரங்கம் பிள்ளை, பிரஞ்சு அரசில் கணக்குப்பிள்ளையாகப் பணிபுரிந்தவர். திறமை மிக்கவர், இவர் எழுதிய நாட்குறிப்பே புதுவை சரித்திரத்தின் இன்றைய ஆதாரமாக விளங்குகின்றது

மதுக்கடல்:-
புதுவை என்றவுடன் கவிஞர்கள் புகழ் நினைவுக்கு வருவது போல் மதுவும் நினைவுக்கு வரும், இங்கு தொழிற் சாலைகளும் கடைகளும் ஏராளமாய் உள்ளன.

குயில் தோப்பு:-
பாரதியார் கவிதை வடித்த குயில் தோப்பு சுவாமி சித்தானந்த சாமி கோயில் அருகில் உள்ளது.

முத்தரையர் பாளையம்

—புலவர் சீனு. இராமச்சந்திரன்

வேகத் திரைகளினால் வேதப்
பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை."

என்று பாரதியாரும்—

"நல்லோர் வாழ் எம்புதுவை
நல்லவூர்."

என்று பாவேந்தர் பாரதி தாசனாரும், போற்றிப் புகழ்ந்த புதுவை என்னும் புதுச்சேரி, உலக வரலாற்றில் உயர்ந்த இடத்தைப் பிடித்த ஓர் உன்னத நகரமாகும். அப்புதுவையைச் சார்ந்த பல ஊர்கள் வரலாற்றில் நிலைத்த புகழைப் பெற்று விளங்குகின்றன.

முத்தரையர்பாளையம் அவ்வூர்களுள் தனி இடத்தைப் பெறும் தகுதியுடையது. முத்தரையர்பாளையக் குடிநீருக்கு ஈடு, இணை கிடையாது. அவ்வூர் புதுவை நகருக்கு மேற்கே ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அங்கே, ஆயி குளம் என்று ஒன்றுளது.

ஆயி என்னும் அறச் செல்வியால் அக்குளம் தோண்டப்பட்டுக் குடிநீருக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. அவளுக்கென்று ஒரு தனி மண்டபம் கலை நுட்பத்தோடு, வெள்ளை மாளிகை போன்று, புதுவை ஆளுநர் மாளிகைக்கு எதிரில், பெரிய பூங்காவின் நடுவில் பார்ப்பவர் கண்களுக்குப் பெருவிருந்தளித்து இன்றும் காட்சி தருவதைப் பார்க்கின்றோம். அம்மண்டபத்தின் மேற்கே தமிழிலும் தெற்கே இலத்தீனிலும் **உக்கிரமூர்த்தி ஆசாரி** என்னும் கல்தச்சர் எழுதிய கல்வெட்டொன்று காணப்படுகின்றது. அக்கல்வெட்டுச் செய்தியிலிருந்து—

"தென்னாட்டை ஆண்ட கிருஷ்ணராயரும், அவரின் அமைச்சர் அப்பாசியும் நகர்வலம் வரும் போது, உய்ய கொண்ட விசுவராயரின் உடலில் உண்டான புதுமையைக் காண விழைந்தது, மாலையில் முத்தரையர்பாளையம் வழியாக உழவர் கரை வந்தனர். முத்தரையர் பாளையத்தில் வாழ்ந்த ஆயி என்னும் விலைமகள் மன்னரை வரவேற்க, தான் குடியிருக்கும் மாளிகையை விளக்கொளியால் அலங்கரித்தாள். அதனைக் கோயில் எனக்கருதி, மன்னரும் அமைச்சரும் வணங்கினர்.

அங்கிருந்தோர் அது விலைமகள் வீடென்று கூற, அவ்விருவரும் வெட்கித் தலைகுனிந்து, அவளின் மாளிகையை இடித்து அவ்விடத்தில் குளமும், கிணறும் தோண்டி மக்களுக்குக் குடிநீர் வழங்குமாறு ஆணையிட்டனர்.

அச்செய்தி கேட்ட ஆயி, அவர்களின் காலில் விழுந்து பாவ மன்னிப்புக் கேட்டு, "அத்திருப் பணியை என் பொருட் செலவில் நானே செய்து முடிக்கிறேன்" என உத்தரவு பெற்றுத் தன் வீட்டைத் தானே இடித்துக் குளமும் கிணறும் தோண்ட குடிநீர் வழங்கினாள்.

அவளின் இம்மேலான செ கைக்குப் புதுவை நகரில் ந் ஊற்று மாளிகை அமைத் **"ஆயி மண்டபம்"** என்னு நினைவுச் சின்னத்தை, பிரெஞ் நாட்டு அரசர் மூன்றாவது நெ போலியன் தந்தருளினார்" என் விவரங்கள் தெரிய வருகின்றன

ஆயி என்பவளைப் பற் செவிவழிச் செய்தியாகப் ப கதைகளும் கூறப்படுகின்றன **ஆயி, ஊசி** என்ற அக்கா, தங் இருவர் வாழ்ந்தனர் என்று அக்கா ஆயி குளத்தை வெட் னாள் என்றும், தங்கை ஊ ஏரியைக் கட்டினாள் என்று பேசப்படுகின்றன.

அதனால் **ஆயி** குள என்றும், **ஊசியிட்ட ஏரி** என்று இரண்டு இடங்கள் வழங்க படுகின்றன.

விலைமகள் குலத்தில் பிறந் கலைமகள் மாதவி பெரும்புக பெற்றது போல், அருங்கலை செல்வி ஆயி, குடிக்க நன்னீ நல்கி, பிறந்து வாழ்ந்த மு தரையர் பாளையத்திற்கு வ லாற்றுச் சிறப்பேற்றி அறச் செ வியாக வாழ்ந்திருக்கிறாள்.

அந்நல்லாளை வாழ்த் வோமாக.

குறிப்பு: 6.5.94 அன்று புதுவை வானொ மில் வரலாற்றின் வரலாறு என்ற தலை பில் ஆற்றிய உரை, கட்டுரையாகத் தர பட்டுள்ளது.

பிரஞ்சு நினைவுச்சின்னம்:

புதுவை பிரஞ்சு ஆதிக்கத்தில் இருந் விடுதலை அடைந்த பகுதி. அந்த போரில் மரித்த வீரர்களின் நினைவுக் எடுத்துக்காட்டான நினைவுதான் மண்டபம் புதுவை கடற்கரையி உள்ளது. அருங்காட்சியகம், புகழ் பெற் பல்லாயிரக்கணக்கான நூல்களை கொண்ட ரோமன் ரோலண்ட் நூ நிலையமும் உள்ளன. சட்ட சபை எதிரே, அம்பேத்கர், பாரதியார் பாவேந்தர், குபேர், சிலைகள் மி அழகாய் உள்ளன.

தில்லை கூத்தரசன்

கலவை சுப்புராய செட்டியார்

கல்வே. எஸ். சதாசிவம்


"இன்னறுங்கனிச் சோலைகள்
செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்
கெழுத்தறிவித்தல்."

என்றார் பாரதியார்.

அவர் தம் கூற்றுப்படி கல்விப் பணி மிகச் சிறந்த பணி என்றாகிறது. இன்று, புதுவை நகரத்தில் நடுவில் காமாட்சியம்மன் கோயில் வீதி, அரவிந்தர் வீதி கட்கிடையில் மாதா கோயில் தெருவில் மேற்குத்திசை நோக்கி கம்பீரமாக விளங்கிக் கொண்டிருக்கும் 'கலவைக் கல்லூரி' என்னும் கல்வி நிறுவனம் கலவை சுப்புராய செட்டியார் அவர்களால் கட்டப் பெற்றது.

பள்ளிக் கட்டடம் அமைக்கப் படுவதற்கு முன்னர், கல்லறை இருந்து வந்தது. செட்டியாருக்கு பிரெஞ்சுக்காரரிடத்தில் நல்ல செல்வாக்கு இருந்தது. செட்டியாரிடத்தில் பிரெஞ்சுக்காரரும் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். இந்த நல்லதொரு நிலையைப் பயன்படுத்தி செட்டியார் அவர்கள் பிரெஞ்சு ஆட்சியிடம் அனுமதி பெற்று கல்லறையை அவ்விடமிருந்து அகற்றி, அந்த இடத்தில் கல்விச் சாலையை நிறுவினார். அதுவே, இன்றைய கல்வே. சுப்புராய செட்டியார், மேநிலைப் பள்ளியாக விளங்குகிறது.

இப்பள்ளிக்கூடம் பிரெஞ்சு அரசாங்கத்திற்கு 1885 - ஆம் ஆண்டு நன்கொடையாக அளிக்கப்பட்டது. கல்லூரியின் முகப்பில் கலவை. சுப்புராய செட்டியாரின் சிலை உள்ளது. 1978-ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்பெற்றது. அப்போது செட்டியாரின் வழித் தோன்றல் எனது தகப்பனார் கல்வே. சாம்பசிவ செட்டியாரும் அப்போதிருந்த புதுவை முதல் வர் திரு. இராமசாமி அவர்களால் பொன்னாடை போற்றப் பெற்றுச் சிறப்பிக்கப் பெற்றனர். புரட்சிக் கவிஞர், பாரதி தாசனார், சர்வோதய இயக்கத் தலைவர், திரு. எஸ்.ஆர். சுப்ர மணியம், கம்யூனிஸ்ட் தலைவர் திரு. வ. சுப்பையா ஆகியோர் இப்பள்ளியின் மாணவர்களே. மத்திய அமைச்சராகவும், புதுவை முதல்வராகவும் இருந்த வருமான திரு. பாரூக் அவர் களும் இங்கு படித்தவரே. புதுவையில் 'கலவை. சுப்புராய செட்டியார் வீதி, என்று செட்டி யார் அவர்கள் பெயரால் ஒரு முக்கிய வீதியும் இருக்கிறது.



நான் ஒரு ரப்பர்மரம்

நான் ஒரு ரப்பர்மரம்
சமுதாய பாதிப்பின் கீறலில்
மன விகாரங்கள் திரிவினால்
அநுபவப் பாலாய்க் கசிகிறேன்.

அப்படி அநுபவங்கள் கசியும்போது
இயல்பான கவிஞானம்-
பிறப்பால் எப்படிச் சேருகிறது?

சுருதியும் லயமும் சேர்ந்தாற் போல்
கவிநயமும், அநுபவமும்- நீர்வீழ்ச்சியாய்
தாளக்கட்டோடு வருவதாலேயே
ஒரு கவிஞன் உருவாகிறான்.

நான்
கொஞ்சமாய் முணுமுணுப்பாய்
கொஞ்சவே விரும்புகிறேன்.
அதனால்
கஞ்சனல்ல...

வாழ்க்கை நெடும்பயணக் கதை
எழுதச் சோம்பேறியாகிறேன்
என்பதுமல்ல...
சிறிய வைரக்கல்லின்
ஒளிக் கீறலாய்-, உன் கண்ணில்
ஜொலிக்க நினைக்கிறேன்.

சாலிவாகனன் எம்.ஏ.

தீராத் தேடல்

ராஜேந்திரகுமார்

6

வெறித்துப் பார்த்துக் கொண்டே நின்றான். நின்று கொண்டேயிருந்தான்.

"என்ன பார்க்கிறே? கமான். டேக் இட் மேன்! இந்தக் கேவலமான பணத்துக்காகத் தானே என் பொண்ணோட எதிர்காலத்தைப் பணயம் வைக்கிறே? எடுத்துக்க! போ வெளியே!"

சற்றே குனிந்து செக்கை வாங்கி வெளியேறிப் போனான். அவன் போன சில விநாடிகளில் கையில் டி.ரேயும் காப்பிக் கோப்பைகளுமாக வந்தாள், அனாமிகா.

பார்வையால் துழாவி அவனைத் தேடினாள்.

"என்ன தேடறே, மகளே?"

"அவர்... அவர் எங்கேப்பா?"

"ப்ளாங்க் செக் சைன் பண்ணிக் கொடுத்தேன். வாங்கிட்டுப் 'போறேன்'னு ஒரு வார்த்தையும் கூடச் சொல்லாமல் போயிட்டான்".

"ஏறிட்டுப் பார்த்தாள், கேள்வியாக!

"இப்பவாவது தெரிஞ்சுக்க. அவன் தேவை நீ இல்லை. என் பணம், இந்த பங்களா வாசசுகம்".

"நம்பமாட்டேன். நான் நம்பமாட்டேன். நீங்க... நீங்கதான் அவர் மனசைப் புண்படுத்தி அனுப்பி இருக்கீங்க. எனக்கு அவரைத் தெரியும். அவரோட தன்மானமும் புரியும். சொல்லுங்க. எந்தச் சொல்லாலே அவரைத் துடிக்க விட்டுத் துரத்தினீங்க? சொல்லுங்கப்பா".

"ஸாரி! இப்ப நீ இருக்கிற நிலையில் யார் குற்றவாளின்னு சொன்னாலும் உன்னால் நம்ப முடியாது. போ". அலட்சியமாகச் சொன்னார்: "போய் ரெஸ்ட் எடு. அவனை மறந்துடு".

"ஏன்?"

"ஏன்னா அவன் உன்னை மறந்துட்டதாகச் சொல்லித்தான் செக்கை வாங்கிட்டுப் போனான்".

"நான் அவரை விசாரிக்கிறேன். அவர் சொன்னால்தான் நம்புவேன்".

அவர் பதில் சொல்ல முயலும் முன் ஃபோன் ஒலித்தது. பறித்து எடுத்தார். "ஓ! நீதானா! சொல்லு. செக் அமௌண்ட்டை எழுதிட்டியா?"

ஃபோனைப் பிடுங்கிக் கொண்டாள். "சொல்லு. சொல்லு சஞ்சீவி! தொகையை ஃபில்லப் பண்ணிட்டியா?"

அந்த ஃபோன் குரல் "ஆமாம்" என்றதும் –

நிமிர்ந்தாள் –

"சஞ்சீவிதானே பேசறது?"

"நானேதான் பேசறேன். ஸாரி டியர்! இனிமேல் நான் உன்னையோ, நீ என்னையோ சந்திக்கக் கூடாது. இது உன் அப்பாவுக்கும் எனக்குமுள்ள ஜென்டில்மேன் ஒப்பந்தம்".

"துரோகம். எத்தனை பெரிய துரோகம். "பாவி! உன்னைக் காதலிச்சேன். ஏமாற்றம். உன்னை விரும்பினேன். ஏமாற்றம். உன்னைச் சுற்றி என் கல்யாணக் கனவுகளைப் படர விட்டேன். ஏமாற்றம். உன்னைப் பற்றி நினைக்கவே எனக்குக் கூசுது. அப்ப என் அப்பா சொன்னதாகச் சொன்னே. இப்ப நான் சொல்றேன். என்னைப் பார்க்காதே. என்னோட பேச முயற்சி பண்ணாதே. கடந்த காலக் காதலை ஒரு கனவாக நினைச்சு மறந்துடு. ஏன் தெரியுமா? ஐ ஹேட் யூ. ஐ ஹேட் யூ. டாம் இட்".

ஃபோனை அப்பாவிடம் வீசி எறிந்துவிட்டு விறுவிறுவென உள்ளே போய்விட்டாள்.

மதிய உணவு வேளையில் சொன்னார், "இதபார் மகளே! நான் பார்த்த உலகத்தை நீ இன்னமும் பார்க்கலை. உலகத்தைப் புரிஞ்சுக்க... உனக்கு வயது போதாது. அதனால் தான் அவனை நாள் கணக்கில் பழகியும்

உன்னால் புரிஞ்சுக்க முடியலை. ஆனால் நான் பார். பார்த்த பத்தாவது நிமிஷமே அவன் யார்? என்ன அவன் எதிர்பார்ப்பு? என்ன அவன் தேவைன்னு கண்டுபிடிச்சிட்டேன்".

மௌனமாக சாதத்தைப் பிசைந்து கொண்டிருந்தவளைப் பார்த்து -

"ஒண்ணு மட்டும் தெரிஞ்சுக்க, நான் உன் அப்பா..."

பட்டென்று சொன்னாள்: "தெரியும்".

"உனக்கு நல்லது எது, கெட்டது எதுன்னு என்னாலதான் தீர்மானிக்க முடியும்னு நம்பறியா?"

"நம்பறேன்" கண்ணீருடன் பார்த்தாள். "தோத்துட்டேன். நான் தோத்துட்டேம்பா. நீங்க பார்க்கிற மாப்பிள்ளை, அது யாராக இருந்தாலும் கல்யாணம் பண்ணிக்கத் தயாராக இருக்கேன்".

"இப்பத்தான் நீ என் மகள்" என்றார் பூரிப்பாக.

பொரித்த அப்பளத்தைக் கொண்டு வந்த ராஜாத்தி கேட்டாள், "என்னம்மா இது? இன்னும் நீங்க சாப்பிடவே ஆரம்பிக்கலையா? ரசம் சாதத்துக்கு அப்பளமில்லாமல் சாப்பிட மாட்டிங்களேன்னு கொண்டு வரப் போனேன். நீங்க இன்னும் மீன் குழம்பு சாதத்தையே தொடாம - அப்படி என்னம்மா யோசனை?"

"அதை எடுத்துடு" என்று பாதாம் அல்வாவைச் சுட்டிக் காட்டினாள், "இனிமேல் மறந்துகூட என் இலையில் வைக்காதே".

வெள்ளி ஸ்பூனால் அள்ளி ஒரு வெள்ளித் தட்டில் போட்டுக்கொண்டு போனாள் ராஜாத்தி. 'எப்பவும் பிரியமாகச் சாப்பிடுவாங்க. இன்னைக்கு மட்டும் என்னாச்சு இவங்களுக்கு?' என்று நினைத்துக் கொண்டாள். மெல்ல எட்டிப் பார்த்தபோது -

சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் அனாமிகா - அமைதியாக.

மீண்டும் வராந்தாவுக்கு வந்து தங்க நிற சிகரெட் பெட்டியைப் பிளந்து சிகரெட்டை உருவி உதட்டில் பொருத்தி பெட்டியிலேயே இருந்த லைட்டரை இயக்கி ஜுவாலைக்கு நடுவில் சிகரெட்டை முங்கிய பின் அணைத்த சஞ்சீவி, "அது சரி" என்ற வார்த்தைக்குத் திரும்பிப் பார்த்தார்.

அங்கே மகள் நின்றிருந்தாள் - இடுப்பைத் தாங்கிக் கொண்டு இருந்தாள். கேள்வியாகப் பார்த்தார்.

"சாப்பிட்டதும் கொஞ்ச நேரம் காலை நீட்டி ஹாயாகப் படுக்காமல் உடனே வராண்டாவுக்கு ஓடி வரணுமா? அப்படி என்னதான் இருக்கு இங்கே?"

"அமைதி. நீண்ட நாளைக்குப் பிறகு நகரத்துப் பரபரப்பு, கூச்சல், இரைச்சல், எதுவுமில்லாமல் மனசுக்குள்ளே ஒரு தனி அமைதி வருகிறதும்மா".

"உங்களைப் பார்த்தா அமைதியாயிருக்கிற மாதிரி தெரியலை. அமைதியைத் தொலைச்சவர் மாதிரிதான் தெரியுது".

அவளை நெருங்கி வந்து அவளது கோபமான கன்னத்தில் லேசாகத் தட்டினார். "சில விஷயங்கள் உனக்குப் புரியாது. புரிஞ்சுக்கவும் முடியாது".

அவள் தோளில் கைபோட்டு கைப்பிடிச் சுவருக்குப் பக்கத்தில் அழைத்துப் போனார். தொலைவில் கடல் பக்கமாகச் சுட்டிக் காட்டியவர்,

"அதோ பார். என்ன தெரியுது உனக்கு?"

"என்ன? ஒரு நாட்டுப் படகு கரைக்கு வந்துட்டிருக்கு".

"உன் பார்வைக்கு அது மட்டுந்தான் தெரியுது. தனிப் படகு. அறைகிற அலைகளை எதிர்த்து எதிர்நீச்சல் போட்டு, கரைக்கு வர எத்தனை சிரமப்படுது பாரு. உன் கண்ணுக்கு அந்தப் படகு மட்டும்தான் தெரியுது. என் கண்ணுக்கு அந்தப் படகை ஓட்டி வருகிறவர்கள் படுகிற பாடு தெரியுது. அவதி புரியுது. கரையில் காத்துக்கிட்டிருக்கிற அவங்க குடும்பத்தைப் பற்றிய கவலை தெரியுது. எப்பவும் தனிமை என்ன பாடு படுத்தும்னு நினைச்சுப் பார்த்தா அதுவும் ஒரு சங்கடமாகவே தெரியுது". தொடர்ந்தார்.

"இப்ப நானிருக்கிற நிலையிலே அவனுக்கு உதவு முடியாதுதான். ஆனாலும் அவன் கரை சேருகிறதைப் பார்க்கும் ஆசை என்னை அசையவிடலை".

"ஐயாம் ஸாரிப்பா! நம்ம ஊர் ஜே. கிருஷ்ணமூர்த்திலேர்ந்து சீனத்து மாவோ தத்துவம் வரை எல்லாம் படிச்சு சுலபமா அர்த்தம் புரிஞ்சுகிட்டவ நான். ஆனா உங்க ஃபிலாஸபிதான், ஸாரி... எனக்குக் கொஞ்சம்கூடப் புரியலை".

கையைச் சுரீரென்று சுட்டுவிட்ட சிகரெட்டை எறியும்போதுதான் கவனித்தார்.

மரப்படிகளில் ஏறி வந்து கொண்டிருந்தவர்தான் மானேஜராக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

உண்மை!



"நான்தான் இங்கே மானேஜர்" என்று நட்புடன் கை குலுக்கிக் கொண்டார் வந்தவர்.

"சொல்லுங்க. என்ன விஷயம்? அட்வான்ஸா?"

"அதில்லை. வசதி எல்லாம் எப்படி இருக்குன்னு கேட்டுட்டுப் போக வந்தேன். இது ஒரு சம்பிரதாய சந்திப்பு".

"எல்லாம் வசதியாக இருக்கிறது. நன்றி".

"சாப்பாடு?"

"வந்தது. ஜஸ்ட் ஃபண்டாஸ்டிக். உங்க ரெஸ்டாரெண்ட் சமையல்காரரைப் பாராட்டினதாகச் சொல்லுங்க".

"அவசியம். இந்தாங்க" என்று ஒரு சின்ன டப்பாவை நீட்டினார். "மேடம் கொடுக்கச் சொன்னாங்க".

வாங்கித் திறந்து பார்த்தார்.

பாதாம் அல்வா!

("ஏய். அந்த பாதாம் அல்வாவை இப்படித் தள்ளு".

"உனக்கு வேணும்னா கேளு. இன்னொன்று வாங்கித் தரேன். என் எச்சிலை எதுக்குக் கேட்கறே?"

"பழகிக்கறேன். தவிர, எனக்கு பாதாம் அல்வான்னா உயிர்!")

சட்டென்று கேட்டார், சஞ்சீவி. "உங்க மேடம் பேர் அனாமிகாவா?"

"ஆமாம். உங்களுக்கெப்படித் தெரியும்?"

அவருக்குப் பதில் சொல்லாமல் உள்ளே போனவர் சற்றுப் பொறுத்து ஒரு நீளமான கவரைக் கொண்டு வந்து நீட்டினார். "இதை உங்க மேடம் கிட்டே கொடுத்திடுங்க".

"என்ன இது? ஏதாவது புகாரா?"

"இல்லே. செக்".

"ஸாரி. நாங்கள் செக் வாங்கறதில்லை. கேஷ் டீலிங்தான்!"

"பரவாயில்லை. கொண்டு போய்க் கொடுங்க. பில்லுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை. இது வேறு விஷயம்".

புரியாமல் பார்த்தார் மானேஜர்.

"நீங்க கொடுங்க. இல்லேன்னா அவங்க என் கண்ணில் படும்போது நானே கொண்டு போய்த் தர்றேன்".

கொஞ்சமாகப் பயந்து பிறகு வாங்கிக் கொண்டார்.

"நானே தரேன்" என்று சொல்லும்போதே வரிசையாக கார் ஊர்வலம் ஒன்று வந்தது.

"எட்டிப் பார்த்த ஒருவர், "மானேஜர் ஸார்! எங்க காட்டேஜ் ஃப்ரீதானே? நம்ம ஆள் அங்கே அட்வான்ஸ் தர நிக்கறார். போப்பா" என்று டிரைவரிடம் சொல்ல -

கார் வரிசை நகர்ந்தது.

"வேலை வந்துவிட்டது. சினிமாக்காரங்க. மெட்டுக்குப் பாட்டு எழுத வந்திருக்காங்க".

"அப்ப ராத்திரி நாங்க தூங்க முடியாதுன்னு சொல்லுங்க".

மானேஜர் சிரித்தார். "கவலைப்படாதீங்க. வந்த அதே வேகத்திலே கிளம்பிப் போயிடுவாங்க. தவிர, தயாரிப்பாளர் ஒரு லேடி. அதனால் நியூசன்ஸ் எதுவும் இருக்காது".

மீண்டும் படியிறங்கிப் போய்விட்டார்.

அந்த மானேஜர் ரிசப்ஷனுக்குப் போகும் போது அனாமிகா இறங்கி வந்திருந்தாள். தயாரிப்பாளரம்மாவும் அவர் கணவரும் அவளிடம் பாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"உன்னைப் பார்த்தா எங்க மகள் மாதிரியே இருக்குடி குழந்தே" அம்மாள் சொன்னார். "அதனாலதான் மெட்ராஸை விட்டு இவ்வளவு தூரம் சின்ன வேலைன்னாலும் முனுக்குன்னு கிளம்பி வந்துடறோம். இருக்கிற ஒண்ணு இரண்டு நாளாவது பெத்த பொண்ணுகிட்டே பழகற மாதிரி ஒரு நினைப்பு வருது. ஆமா, அதென்ன இப்படி இளைச்சுப் போயிட்டே?"

"வேலைப் பளு அம்மா" என்றாள் வாய் நிறைய. "நீங்க ரெண்டு பேரும் இங்கே பங்களாவிலேயே தங்கலாமே?"

"எங்களுக்கும் ஆசைதான்..." பெரியவர் சொன்னார். "ஆனா அங்கே பக்கத்திலே இல்லேன்னா யூனிட் ஆளுங்க ஆளுக்கொரு சிலுமிஷம் பண்ணி வைப்பாங்க. காட்டேஜ்ல இருந்தா என்ன? இங்கே இருந்தால் என்ன? மக உயிரோட இருந்திருந்தா, இப்ப உன்னை மாதிரியே இருந்து இருப்பா. அந்த அல்ப சந்தோஷம் எங்களுக்குப் போதும். ஊர் திரும்பற வரைக்கும் உன்னையே எங்க மகளாக் கொண்டாடறதில உனக்கு ஆட்சேபனை இல்லையா?"

"சந்தோஷம் என்னோடது. அப்புறம் காட்டேஜுக்குப் போனதும் டிரைவரை அனுப்புங்க. ஒரு புது குக்கரும், சமையல் பாத்திரங்களும் அரிசி, பருப்பு, காய்கறிகளும் வாங்கி வைச்சிருக்கேன். அனுப்பறேன். நீங்களே மடிச்சமையல் பண்ணிக்குங்க. போன தடவை வந்தப்ப ரெஸ்டாரெண்ட் ஆளுங்க சமையலைச் சாப்பிட நீங்க பட்ட அவஸ்தையைத் தெரிஞ்சு அப்பவே வாங்கி வைச்சுட்டேன்".

"ரொம்ப சிரமம் எடுத்துக்கறியேடி குழந்தே!"

"அம்மா! பெத்தவங்க இல்லாம அநாதையாயிருக்கேன். உங்களை இரவல அப்பா - அம்மாவா நினைச்சுச் செய்யற சேவை. இதிலே எனக்குத் திருப்தி வருது. அதை மறுக்காதீங்க. ப்ளீஸ்".

மனம் நெகிழ்ந்து போனார்கள். அம்மாள் மட்டும் கண் கலங்கினார். "செத்துப் போகலை. என் மக கல்யாணி சாகலைங்க. இதோ இருக்கா".

அவர்கள் போனதும் அட்டகாசமாக உள்ளே வந்தாள். அந்த அம்மாள்.

"அம்மாடி அனாமி! நல்லா இருக்கியா?"

முகம் திருப்பிக் கொண்டாள் அனாமிகா. "என்ன வேணும்? யார் நீங்க?"

"என்னடியம்மா அப்படிக் கேட்டுட்டே? உங்க சித்தியோட மச்சினருக்கு ஒண்ணுவிட்ட அத்தைப் பொண்ணு".

"புரியலைதான். ஆனாலும் சொல்லுங்க. என்ன விஷயம்?"

"எங்க ஊர்ல மாரியம்மன் கோயில் திருவிழா. பத்து நாளைக்கு ஊர்ல ஒரு வீடு கூட உலை வைக்காது. அம்புட்டுப் பேருக்கும் கோயில்லே தான் சாப்பாடு. நாலு வகை நாயனம், தெருக் கூத்து. கரகம்னு ஊரே அமர்க்களப்படும். பத்துநாள் செலவு மட்டும் லட்ச ரூபாயைத் தாண்டிடும்".

"செய்யுங்க".

"உடனே விரட்டி விட்டா எப்படி? எப்பவும் உங்க வீட்டுக்காரர்தான் எல்லாச் செலவும் ஏத்துக்குவார்".

"ரொம்பவும் தாமதமாக வந்திருக்கீங்க. அவர் போய் ரொம்பக் காலமாச்சு".

"தெரியும். ஆனா, இப்ப நீ இருக்கிற லட்சணத்தைப் பார்த்து அவர் செத்ததுகூட மறந்து போச்சு. ஒரு விதவையின் கோலமா இது?"

"ஷட்டப்" என்று அதட்டி விட்டு மானேஜரிடம் சொன்னாள், "கோயிலுக்கு நன்கொடை கேட்டு வந்திருக்காங்க. பத்து ரூபாய் கொடுத்து அனுப்புங்க".

"பத்து ரூபாயா?" வந்த அம்மாள் அதிர்ந்தார். "ஏண்டி இந்தப் பிச்சைக்காசுக்கா செலவு பண்ணி தஞ்சாவூர்லேர்ந்து வந்தேன்?"

"அது என் தப்பில்லே. நானா கூப்பிட்டேன்? லட்ச ரூபாயா? லட்சத்துக்கு எத்தனை சைபர்னாவது தெரியுமா உங்களுக்கு? மானேஜர்... இவங்களை ஸ்டேஷனுக்குக் கொண்டு விட்டு தஞ்சாவூருக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொடுத்துட்டு வந்துடுங்க".

"ஏண்டி திமிரா பிடிச்சு அலையறே? வந்தவளை வான்னு சொல்லாம, ஒரு வாய் காப்பி கூட கொடுக்காம துரத்தறியா? ஊருக்குப் போய், தமுக்கடிச்சு நாறடிக்கறேண்டி உன் பெயரை. நீ செத்தாலும் எந்த உறவுக்காரங்களும் வந்து பார்க்காம பண்றேன், இரு!"

"செய்யுங்க. அதுதான் எனக்கு வேணும். புருஷன் போய், பிள்ளைகளும் இல்லேன்னு ஆனப்ப எட்டிப் பார்க்காது தனியா, தன்னந்தனியா ஒரு தனி மரமாயிருந்து பழகிட்டேன். செத்தப்புறம் மட்டும் ஏன் இந்த இடத்துக்கு வரணும்? சொல்லிடுங்க மானேஜர். சொன்னதைச் செய்யுங்க!" என்று அதிகாரமாகச் சொல்லிவிட்டு வெளியேறிப் போனாள் கம்பீரமாக.

ரிஸோர்ட்டின் பதினாறாவது காட்டேஜின் வராந்தாவில் - பக்கத்துக் கேரளாவில் அடாது பெய்யும் மழையில் நனைந்த காற்று. குளிரைக் கொண்டு தாக்கியது.

வராந்தாவில் அமர்ந்து இரண்டு இரண்டாகப் பங்கு வைத்த மல்லி மொக்குகளை எடுத்து லாகவமாக நாரில் தொடுத்துக் கொண்டிருந்த இனியா - தன் எதிரில் நீண்டு வந்த நிழலுக்கு நிமிர்ந்து பார்த்து வியந்தாள்.

அனாமிகா படியேறி வந்து கொண்டிருந்தாள்.

"உங்கப்பா இல்லையா?"

"இல்லே!" எழுந்து நின்றாள். "பொழுது போகலை. மீன் பிடிக்கப் போறேன்னு சொல்லிக் கிளம்பிப் போனார். என்னையும் வரயான்னு கேட்டார். மாட்டேன்னுட்டேன். போர் அடிக்கும். அவர் மட்டும் தூண்டில் எடுத்துட்டுப் போயிருக்கார். உள்ளே வாங்க".

"என்ன புஸ்தகம் அது? ஷெல்லியா?"

"இல்லே. ஹெரால்ட் ராபின்சன்!" அச்சமாகச் சிரித்தாள். "என்னதான் ஆபாசமானாலும் அவர் கதை சொல்கிற பாணி எனக்குப் பிடிக்கும்".

"என்ன கோர்ஸ் படிக்கிறே?"

"படிச்சு முடிச்சாச்சு. எம்.ஏ.,எம்.எல் பிராக்டீஸ் பண்ணிட்டு இருக்கேன்". தயக்கமாகப் பார்த்துக் கேட்டாள். "கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே! கோவிச்சுக்க மாட்டீங்களே!"

"எனக்குக் கோபமே வராது. அதுவும் குறிப்பாக உங்கிட்டே!"

"எங்கப்பாவை உங்களுக்கு முன்னமே தெரியுமா?"

மெல்லத் திரும்பிப் பார்த்துச் சிரித்தாள். "ஏன் அப்பா சொல்லலையா?"

"என்னன்னு?"

"காலம் அனுமதிச்சிருந்தா இந்நேரம் நீ என் மகளாக இருந்து இருப்பாய் என்று".

சட்டென்று நிமிர்ந்தாள் இனியா.

—தொடரும்

தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில்...

வித்யா சுப்பிரமணியம்

'தொப் தொப்'பென்று கூழாங்கற்களை ஓடும் ஆற்றில் விசையோடு விட்டெறிந்து கொண்டிருந்தேன். ஆற்றின் அடியில் அவை படிந்து அமர்ந்தன. இக் கற்களைப் போலவே சுரணையற்றவனாய் நானும் இருந்திருக்க வேண்டும். கல்லுக்கு ஏது வேதனை? ஏது துக்கம்? ஏது உணர்ச்சி? நான் ஏன் மனிதனாய்ப் பிறந்தேன்? இந்தக் கணம் என்னைப் பார்க்கும் புதியவர் எவரும் பதறிப் போய் முகம் சுளித்துக் கண் மூடி, முகம் திருப்பி 'அட, கடன்காரா' என்று முணுமுணுத்தபடிதான் செல்வார்கள். இந்த ஊர்க்காரர்களுக்கு என் கோலம் பழகிவிட்டது. உடம்பில் பொட்டுத் துணியில்லாமல் ஒருவன் ஊரில் அலைந்தால் யார்தான் முகம் சுளிக்க மாட்டார்கள்? என்னைப் பைத்தியம் என்கிறது, ஊர்! உண்மையில் நான் பைத்தியமல்ல. பைத்தியமாக மாறி நான் அனைத்தையும் மறந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! எதையும் மறக்க இயலாமல் நடந்து போன அந்தக் கொடுமையின் விளைவாய் இன்னும் நடமாடிக் கொண்டிருக்கிறேன், பொட்டுத் துணியின்றி!

ஏன் துணியின்றி...? முதன் முதலில் நான் துணி களைந்த போது அதிர்ச்சியடைந்தது, ஊர் கல்லால் அடித்து என்னைக் காயப்படுத்தியது. எதற்கும் நான் அசையவில்லை. எதற்கு ஆடை; மானம் மறைக்கத்தான் ஆடை என்றால் கௌரியின் ஆடையை ஏன் களைந்தார்கள்? அதை நினைத்த போது என் உடம்பு திடீரென்று தூக்கிப் போட்டது, உதடு கோணித் துடித்தது. வெறி பிடித்தவன் போல் என் கண்கள் சிவந்தன. வருஷம் இரண்டாகப் போகிறது. நேற்றுதான் நடந்தது போல்... நான் ஆற்றங்கரையில் இருந்து எழுந்து கால் போன போக்கில் நடந்தேன். ஊர்ப் பொது மைதானத்தின் நடுவில் ஓங்கி உயர்ந்திருந்தது, கொடி மரம்! சுதந்திர தினம், குடியரசு தினங்களில் காற்றில் அலை அலையாய் அழகாய் அதன் உச்சியில் தேசியக் கொடி பறந்து கொண்டிருக்கும். கொடிமரத்தையே நான் உற்று நோக்கிக் கொண்டிருந்தேன்.

"மா மா... ஆஆஆ...!" என்ற கௌரியின் அலறல் காதுகளில் எதிரொலிக்க சட்டென்று காதுகளிரண்டையும் கைகளால் பொத்திக் கொண்டேன். கண்ணீர் கசிந்து வழிந்த வாயில் உப்புக் கரித்தது. 'கௌரி... கௌரி..!' என்று உள்ளம் கதறியது. இதயத்தில் இரத்தம் பிரளயமாய்ப் பொங்குவது போல் துடித்தது.

துரியோதனனின் சபையில் பாஞ்சாலியின் மானம் மறைக்கப் பரந்தாமன் முடிவில்லா ஆடை வழங்கினது போல் என் கௌரியைக் காக்க எந்தப் பரந்தாமனும் வரவில்லை. அப்போது என் ஒருவனால் அந்தப் படையைச் சமாளிக்க இயலாத நிலையில் என் கௌரி தன் மானம் காத்துக் கொள்ள தானே தனித்துப் போராடி, ஓடி ஓடிக் களைத்துக் கடைசியாக இந்தக் கொடி மரத்தின் அடியில்தான் வந்து நின்றாள்.

"மாமா! வாயத் திற!"

"எதுக்கு புள்ள?"

"திறயேன், சொல்றேன்!"

"ஆ...!"

"யம்மாடியோவ்... இதென்ன வாயா? குகையா? இம்புட்டு பெரிசாவா திறப்பாக?"

"பின்ன..?"

"தம்மாத்தூண்டு கடல உருண்டைக்கு எதுக்கு இம்புட்டு பெரிசா?"

"என்ன புள்ள விசேஷம்? கடல உருண்ட தர்றே?"

"எனக்குக் கண்ணாலம்...!"

"அடிச்சிறுக்கி மவளே! இன்னா தெகிரியம் இருந்தா, எங்கிட்டவே வந்து கண்ணாலம்னுவ!"

"பின்ன உங்கிட்ட சொல்லாம ஆரண்ட சொல்லுவாக?"

"அடியேய்...! நான் யாருன்னு தெரியுமில்ல?"

"தெரியாம என்ன? நம்ம கருப்பண்ண சாமியும் நீயும் ஒண்ணுதான்?"

"ஓஹோ? என்னைய விட செவப்புத் தோலா உங்காத்தா பாத்து வச்சிருக்கறாளா?"

"அப்படித்தான் வெச்சுக்கயேன்..!"

"ஓஹோ! அப்ப சரி புறப்படு! எங்கயோ போ! ஒழிஞ்சு போ! எம்முகத்துல முளிக்காத!"

"அய்ய... கோவத்தப் பாரேன். கறுப்பு முகம்கூட சிவந்து போச்சே...!"

".....!"

"மாப்பிள்ள யாருன்னு கூட கேக்க மாட்டியா?"

"எந்த கட்டேல போறவனா இருந்தா எனக்கென்ன?"

கௌரி பாய்ந்து வந்து என் வாயை மூடினாள். "அப்டி சொல்லாத மாமா...!" என்றவள், கண்களில் கண்ணீர் பளபளத்தது.

"ஏன் சொன்னா என்னவாம்? துடிக்குதோ?"

"நீதாம் மாமா, மாப்பிள்ள! உன் வாயாலே நீயே அபசகுனமா சொன்னா எனக்கு துடிக்காம என்ன செய்யுமாம்?"

கௌரி திரும்பிப் பார்க்காமல் ஓடி விட்டாள். நான் மரம் போல்

திகைப்போடு நின்று விட்டேன். என் விருப்பப்படி நான் கௌரியோடு வாழப் போகிறேனா? அக்காவும் மாமாவும் கௌரியை எனக்குக் கட்டித் தர மாட்டார்கள் என்று நினைத்தேன். கௌரி படித்தவள். பள்ளியிறுதி என் பதே எங்கள் ஊரில் பெரிய விஷயம்தான். நான் மூன்றாவது வகுப்புகூட தாண்டவில்லை. 'எப்படி அவர்களிடம் சம்மதம் வாங்கினாள் கௌரி!' என்று வியந்தேன்.

என் சந்தோஷம் எல்லாம் இரண்டு நாள்கூட நிலைக்கவில்லை.

திருமணத் தேதி நிச்சயமானதும் என் வகையாக கௌரிக்குப் புடைவை, நகை வாங்குவதற்காக அக்காவையும் கௌரியையும் அழைத்துச் செல்வதற்காக, நான் அக்கா வீடு சென்ற போது அங்கு வேறு சிலர் உட்கார்ந்திருக்கக் கண்டு தயங்கி நின்றேன். அக்காவின் முகத்தில் கவலை. உள்ளே அடுக்களைக் கதவின் பின்னால் நின்றிருந்த கௌரியின் முகத்தில் பயம்.

"என்ன சொல்றீங்க, கந்தசாமி? பெரிய இடத்துப் புள்ள! எம்.எல்.ஏ. மவன்னா சும்மாவா? உங்க பொண்ணைப் பள்ளிக்குப் போகும்போது பாத்திருக்கானாம். கட்டிக்கறேன்னு சொல்றார்!" வந்தவர்களில் ஒருவர் கேட்டார்.

"அதான், சொல்லிட்டேனில்ல? ஏற்கெனவே கல்யாணமான ஒருத்தருக்கு ரெண்டாந்தாரமா கொடுக்கவா எம் பொண்ணை கிளி மாதிரி வளர்த்து வெச்சிருக்கேன்? அதுவுமில்லாம எம்.எல்.ஏ. குடும்பத்தோட சம்பந்தம் வெச்சுக்கவும் முதலாவதா எனக்கு இஷ்டமில்ல!"

"வேணாம், கந்தசாமி! எம்.எல்.ஏ.வைப் பகைச்சுக்காதீங்க! உங்களுக்கு அது நல்லதில்ல. சொல்லிட்டேன்!"

"அட.. போங்கய்யா...! நல்லதும் கெட்டதும் செய்ய எம்.எல்.ஏ. என்ன ஆண்டவனா?"

மாமா துண்டை உதறித் தோளில் போட்டபடி எழுந்து கொண்டார். 'இதற்குமேல் பேச நான் தயாராக இல்லை. நீங்கள் வெளியே போகலாம்' என்று சொல்வது போலிருந்தது, அவர் செய்கை. வந்தவர்கள் முகத்தில் பாம்பும் புலியும் தெரிந்தன. என்னை விழித்துப் பார்த்தபடி எழுந்து சென்று விட்டார்கள்.

மறுநாள் பொழுது மாமாவுக்கு சரியாக விடியவில்லை. விடிந்த சில நாழிகையில் நாலைந்து போலீஸ்காரர்கள் திமுதிமுவென்று வீட்டுக்கு வந்தார்கள். 'என்ன, ஏது' என்று கேட்கும்முன் மாமாவைக் கழுத்தில் கை கொடுத்து தள்ளிச் சென்றார்கள்.

'அய்யோ... அப்பா...! எங்கப்பாவை எதுக்கு அடிச்சுக்கிட்டுப் போறீங்க? என்ன தப்பு செய்தார், அவரு?'

கௌரி அலறினாள்; அக்கா கதறினாள். அவர்கள் எந்த பதிலும் சொல்லாமல் அழைத்துச் சென்று விட்டார்கள்.

விடிந்தால் சுதந்திர நாள். முதல் நாள் மாமாவைக் காரணமின்றி கைது செய்தது, நம் ஜனநாயக நாட்டுக் காவல்துறை. கேள்வி கேட்பாரில்லை. நான் காவல் நிலையத்திற்கு ஓடினேன்.

"எதுக்கு எங்க மாமாவை உள்ளார அடச்சு வச்சிருக்கீங்க? என்ன குத்தம் பண்ணினார் அவர்?"

"உம், மாமாவா..? எம்.எல்.ஏ.வைக் கொல்லப் பார்த்திருக்காரு. கண்ணால பார்த்ததுக்குச் சாட்சியிருக்கு!"

"இல்ல... எம் மாமா ஈ, எறும்பைக் கூட கொல்லத் தெரியாதவர். நீங்க பொய் சொல்றீங்க. அராஜகம் செய்யறீங்க..."

"டேய்.. கலாட்டாவா செய்ய வந்த? அதுவும் போலீஸ் ஸ்டேஷன்லயே. ஒழுங்கா திரும்பிப் போயிடு. இல்லாட்டி உன்னையும் தூக்கி உள்ளார வெச்சுடுவேன், ஜாக்ரதை!"

நான் மிரண்டு போனேன். செய்வார்கள் இவர்கள். எதுவும் செய்வார்கள். நானும் உள்ளே அடைக்கப்பட்டால் மாமாவை யார் மீட்பது? கௌரிக்கும் அக்காவுக்கும் யார் காவல்? நான் மௌனமாய் காவல் நிலையத்தை விட்டு வெளியேறினேன். அப்போது அக்கா அங்கே வந்தாள்.

"இன்ஸ்பெக்டரய்யா... எம்புருஷனை விட்டுருங்கய்யா...!" என்று கெஞ்சினாள்.

"அப்டின்னா உம் பொண்ணை ஒருநாள் எம்.எல்.ஏ. வீட்டுக்கு அனுப்பி வை! விட்டுர்றோம்...!"

"என்னடா சொன்ன...?" நான் ஆத்திரத்தோடு பாய்ந்து சென்றேன். அவன் அலட்சியமாய் என்னைத் தடுத்து என் பிடரியில் கை வைத்துத் தள்ளினான்.

"ரெண்டாந்தாரம்னா என்ன? பெரிய எடத்து சம்பந்தம்னா கசக்குதோ? ஒழுங்கா கல்யாணம் கட்டிக்கறேன்னு சொன்னா சம்பந்தம் வச்சுக்க இஷ்டமில்லன்னா சொல்றான், உம் புருஷன்? இப்ப பார் கல்யாணமும் கட்டிக்க மாட்டேன், அதே நேரம் உம் பெண்ணைக் கெடுக்காமலும் விட மாட்டேன்னுட்டார் எம்.எல்.ஏ. மவன்! உம்பொண்ணு ராத்திரி அங்க போனா உம்புருஷன் விடிஞ்ச பிறகு பத்திரமா வீட்டுக்கு வருவான். என்ன சொல்ற?"

அக்கா துடிதுடித்து அழுதாள்.

தமிழ்நாட்டின் மூலையில் எதோ ஓர் உள்ளடங்கிய குக்கிராமத்தில் அநியாயத்தைத் தட்டிக் கேட்க தைரியமும் இல்லாமல், உதவுவதற்கு நல்ல மனிதர்களும் இல்லாமல் நாங்கள் தவித்தோம். நீதிக்குத் தலைவணங்க வேண்டிய காவலர்களே அநீதிக்குத் துணை செல்ல முடிவு செய்து விட்டனர்.

அக்கா துவண்டு போய் வீடு செல்ல நான் விரக்தியில் கால் போன போக்கில் சென்றேன். ஊர்ப்பெரிய மனிதர்களிடம் உதவும்படி கெஞ்சினேன். 'எம்.எல்.ஏ.வைப் பகைத்துக் கொள்ள முடியாது' என்று கூறி விட்டார்கள், அந்தப் 'பெரிய' மனிதர்கள். நான் அடுத்த ஊருக்கெல்லாம்கூட இது விஷயமாக அலைந்தேன். அதற்குள் அன்றிரவு சில நரிகளும் வேட்டை நாய்களும் மாமா வீட்டுக்குள் நுழைந்து கௌரியை வேட்டையாடத் தொடங்கின. நான் இரவு வெகு நேரம் கழித்து வந்த போது மாமாவின் வீடு களேபரமாக இருந்தது. கௌரி அந்த நாய்களோடு போராடிக் கொண்



டிருந்தாள். வெட்கம்! அப்பனும் மகனும் சேர்ந்து கௌரியைக் கற்பழிக்க முயன்று கொண்டிருந்தார்கள். அதற்கு, சில காவலர்களும் உதவிக் கொண்டிருந்தார்கள். அக்கா, மண்டையில் அடிபட்டு ரத்தம் பெருக்கெடுக்க விழுந்து கிடந்தாள். கௌரி புடைவையைப் பறிகொடுத்து விட்டு உள்ளாடைகளோடு அந்தப் புலிகளுக்கு மத்தியில் புள்ளிமான் போல் மானம் காத்துக் கொள்ளப் போராடிக் கொண்டிருந்தாள்.

"டேய்... டேய்...! பாவிங்களா... விடுங்கடா... விட்ருங்கடா, அவளை...!"

நான் பாய்ந்து செல்ல, காவலர்கள் என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள நான் திமிறினேன். அவர்களிடமிருந்து விடுபட முயன்றேன்.

"இவளைக் கட்டிக்கப் போறவன் நீதானா? நல்லதாப் போச்சு. தாலிய நீ கட்டிக்கோ! மிச்சத்த நாங்க பாத்துக்கறோம்! என்னடா முறைக்கற? உன் கண் எதிர்க்க எங்களோட இவளுக்கு முதலிரவு. அப்பறம்தான் உன்னோட கல்யாணம். சரியா..?" எம் எல்.ஏ. பெரிதாக சிரித்தார். அவர் மகன் எம்பிப் பாய்ந்து கௌரியின் ஜாக்கெட்டையும் டர்ரென்று கிழித்துக் கழற்றினான். கௌரி மார்பைக் கைகளால் பொத்தியபடி அலறினாள். அதே நேரம் எம்.எல்.ஏ. அவள் பாவாடை நாடாவைச் சுண்டியிழுக்க... நான் கண்களை மூடிக் கொண்டேன்.

கௌரியின் அலறல் பல மிழுந்து தேய்ந்தது. எல்லாம் முடிந்து விட்டது.

"எந்திரிடி! எழுந்து ஓடு...!"

கௌரியை எம்.எல்.ஏ. வெளியே விரட்டினார். கௌரி ஓடினாள். உடல் தள்ளாட ஓடினாள், உடம்பில் துணியின்றி. நாய்கள் கை கொட்டிக் குரைத்துச்

சிரித்தன. நானும் விடுபட்டு வேகமாக ஓடினேன்.

"கௌரி... கௌரி...!" என்று கத்தினேன். கௌரி பைத்தியம் பிடித்தவள் போல் ஓடினாள். இந்த அமர்க்களங்களை எல்லாம் ஊர்முழுக்க ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தது. இதற்குள் பொழுது பொல பொலவென்று விடிந்து விட்டது. இன்று சுதந்திர நாளாம். கௌரி ஓடி ஓடி இறுதியில் கொடி மரத்தினடியில் வந்து நின்று மயங்கி விழுந்தாள். கொடி மரத்தில் எம்.எல்.ஏ.வின் ஆள் ஒருவன், எம்.எல்.ஏ. கொடி ஏற்றி சுதந்திர தினம் கொண்டாடுவதற்கு வசதியாகக் கொடியில் பூக்கள் வைத்து சுருட்டிக் கட்டிக் கொண்டிருந்தவன், ஆடையின்றி கௌரி கீழே விழ, அரண்டு போனவனாய் அவளையே வெறித்துப் பார்த்தான். ஊர் முழுக்க வேக வேகமாக எங்களை வெறித்துப் பார்க்கப் புறப்பட்டது. நான் என் வேட்டியை அவிழ்த்து அவள் மானம் காக்க நினைத்து இடுப்பைத் தொட்டதும்தான் உணர்ந்தேன் என் இடுப்பிலும் வேட்டியில்லை. என் போராட்டத்தில் அது ஏற்கெனவே அவிழ்ந்து எங்கோ விழுந்திருந்தது. வெறும் நிஜார் மட்டுமே என் உடலிலும். சட்டென்று பாய்ந்தேன். கொடி மரத்தை நோக்கிக் கட்டி வைத்திருந்த தேசியக் கொடிக்கு விடுதலை அளித்து கௌரியின் உடம்பில் போர்த்தினேன். அப்போதுதான் கவனித்தேன். கௌரி செத்துப் போயிருந்தாள்.

சுதந்திர தினத்தன்று ஏற்றுவதற்காக கட்டி வைத்திருந்த தேசியக் கொடியை அவிழ்த்த குற்றத்திற்காக என்னைக் கைது செய்தது போலீஸ். நான் சிறையிலேயே என் துணியைக் கழற்றிவிட்டு நிர்வாணமாக அலைந்தேன், என் எதிர்ப்பைத் தெரிவிக்க! ஆனால் சட்டம் என்னைப் பைத்தியம் என்றது. என்னைச் சிறைப்படுத்திய சட்டத்தின் பிடியிலிருந்து அக்கிரமக்காரர்கள் மட்டும் எப்படியோ தங்கள் பண பலத்தினால் தப்பித்துக் கொண்டார்கள். ஒரு கட்டத்தில் மனநிலை சரியில்லாதவன் என்று என்னை விடுதலை செய்தார்கள். வெளியில் வந்தும் என் நிர்வாண நிலை தொடர்ந்தது.

> தற்கால ஆகாய விமானங்களின் இறகுகளைப் பார்க்கும் போது, அவை மிக லேசாக இருப்பதுபோலத் தோன்றுகின்றன. ஆனால் அவை 16 சதுர அங்குலத்துக்கு பதினெட்டு டன் எடையைத் தாங்கக் கூடிய உறுதி வாய்ந்தவை. அதாவது அந்த இறகுகளின் ஒவ்வொரு சதுர அங்குல இடத்தையும், நான்கு யானைகள் ஏறி மிதித்தால்கூட இறகு உடையாது.
>
> ☼

விடிந்தால் மீண்டும் சுதந்திர தினம். என் கௌரி துடிதுடிக்க செத்துப் போன தினம். கொடி மரத்தினருகிலேயே படுத்துக் கொண்டேன். விடிந்தபிறகு எம்.எல்.ஏ.வின் ஆள் வந்தான். தேசியக் கொடியை வழக்கம் போல கட்டி விட்டுப் போனான். நான் அதையே வெறித்துப் பார்த்தேன். இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டதா? யோசித்தேன். எங்கே கிடைத்திருக்கிறது? அன்று அந்நியன் ஆண்டான். இன்று நம்மவன் ஆள்கிறான் என்பதைத் தவிர என்ன பெரிதாக வித்தியாசம்? அன்று போலவே இன்றும் காரணமின்றி அடிக்கிறார்கள்; சிறையில் தள்ளுகிறார்கள்; கற்பழிக்கிறார்கள்... இதெல்லாமா சுதந்திரத்தின் அடையாளங்கள்? அதுவும் வேலியே பயிரை மேயும் கதையாக தண்டிக்க வேண்டிய காவல் துறையே தவறு செய்யும் போது சுதந்திரத்தின் அர்த்தம் தான் என்ன? எதற்காக சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார், அந்த காந்தி? ஒவ்வொரு தனி மனிதனும் தன் உரிமைகளை அனுபவிக்கவும், சுதந்திரத்தைப் பரிபூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முன்னேறவும்தான் என்றால், இன்று அந்த சுதந்திரம் முழுக்க முழுக்கப் பயன்படுவது யாருக்கு? பணக்காரர்களுக்கும் அக்கிரமக்காரர்களுக்கும்தானே?

கிராமங்கள்தான் நாட்டின் இதயங்கள் என்று காந்தி சொன்னதை யார் மதிக்கிறார்கள்? கிராமத்து மக்கள்தானே அடக்கியாளப்படுகிறார்கள்! காவல்துறை இவர்களிடமல்லவா தங்கள் பலங்களை எல்லாம் காட்டுகிறது? அப்படியிருக்க இது சுதந்திர நாடு என்றால் அது வேடிக்கையாக இல்லையா? நான் கொடிமரத்தை உற்றுப் பார்த்தேன். நாட்டின் சுதந்திரச் சின்னம், புனிதமான தேசியக் கொடி ஒரு கயவனால் இன்னும் சில நாழிகையில் ஏற்றப்படப்போகிறது! ஒரு பெண்ணின் மானத்துக்கு உத்தரவாதமில்லாத இந்த தேசம் விடுதலையடைந்து விட்டதைக் குறிக்க இது கொடி மரத்தின் உச்சியில் ஒரு கயவனின் கையால் ஏற்றப்பட்டுப் பறக்கப் போகிறதா! என்ன நியாயம்? இது சுதந்திர தினமல்ல! என் கௌரி மானமிழந்து மாண்டு போன சோக தினம். 'தனி மனிதனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடு' என்ற பாரதியாரின் வாக்கு இதற்கும் பொருந்தும். தனி மனிதனின் சோகம் இந்த தேசத்தின் அவலம்! ஜனநாயகம் என்ற அழகான ஒரு பெண்ணை, ஓட்டு வாங்கி ஜெயித்து நாட்டை ஆள்கிறோம் என்ற திமிரில் சில கயவர்கள் சிதைத்துச் சின்னாபின்னமாக்கி விட்ட சோக தினம். இந்த நாட்டுக்கு இன்னும் பரிபூரணமாக சுதந்திரம் கிடைக்கவில்லை. நீரிலிருந்து நெருப்புக்குள் குதித்திருக்கிறது, நாடு. நம்மவனிடமிருந்து இந்த நாட்டுக்கு என்று விடுதலை கிடைக்கும்?

ஆம்! மீண்டும் ஒரு முறை அந்த மகாத்மா பிறந்து வர வேண்டும். இந்தத் தேசத்துக் கயவர்களிடமிருந்து மீண்டும் ஒரு முறை சுதந்திரம் பெற்றுத்தர வேண்டும். அது வரை இது அடிமை நாடுதான். அது வரை இந்த தேசியக் கொடியும் அரைக் கம்பத்தில் பறக்கட்டும். நான் கொடிக்கயிற்றை இழுத்தேன். இந்த நாட்டில் அராஜகங்களும் அக்கிரமங்களும் செய்பவர்களுக்கு எதிராக, கௌரி போன்ற அநீதி இழைக்கப்பட்ட அத்தனை பெண்களின் சார்பாகவும் தேசியக் கொடியைப் பறக்க விட்டேன், அரைக்கம்பத்தில்...

உறவு

உஷா மைக்கேல்



ஜில்லென்று வீசிய தென்றல் காற்றும், அருகில் ஒடிய வாய்க்காலின் நீரால் ஒலித்த சப்தமும் அப்பெரியவரைத் தாலாட்டின. அவர் எவ்வளவு நேரம் தூங்கினாரோ தெரியாது; திடீரென்று கண்விழித்துப் பார்த்தபோது பறவைகள் தங்கள் கூட்டினை நோக்கி விரைந்து கொண்டிருந்தன. அதை அவர் ரசிக்கும் மன நிலையில் இல்லை.

பறவைகளுக்கும், அடைக்கலம் அடைய 'கூடு' என்று ஒன்றுள்ளது. ஆனால் நான் அதற்குக்கூடத் தகுதியில்லையே என்று வருந்தினார். எழுந்து வாய்க்காலில் இருந்த நீரால் முகத்தை அலம்பி, தோளில் இருந்த துண்டால் துடைத்துக் கொண்டார். பிறகு கால்போன போக்கில் நடக்கத் தொடங்கினார்.

மிகவும் சோர்வாக இருந்ததால் ஒரு வீட்டின் திண்ணையில் உட்கார்ந்தார். 'எங்கே போவது? பசி வேறு கண்ணை அடைக்கிறதே என்ன செய்வது?' என்று புலம்பியவாறு இருந்தார்.

தன் மனைவியை நினைத்துக் கொண்டதும் கண்ணும் மனதும் கலங்கின. மனைவி இறந்து பத்து வருடமாகிறது. இந்த பத்து வருடத்தில் அவர் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

"அவள் இருக்கும்வரை நான் எப்படி இருந்தேன்? எந்தக் கவலையும் எனக்கு வராமல், எல்லாவற்றையும் தானே ஏற்றுக் கொண்டு, என்னை ஒரு குழந்தையைப் போல பாதுகாத்தாளே! அவள் இருந்தால் இப்படி நடுத் தெருவில் நிற்கும் நிலை வருமா? எல்லாம் என் தலையெழுத்து" என்று புலம்பினார்.

"தாத்தா!' உங்க பக்கத்திலிருக்கிற பந்தை எடுத்துப் போடுங்களேன்!" என்ற குரலைக் கேட்டு நிமிர்ந்தார். சிறுவனிடம் பந்தைக் கொடுத்ததும் அவன் விளையாடச் சென்று விட்டான். சிறிது நேரத்தில் வீட்டிலிருந்த பெண்மணி வெளியே வந்து 'குமார்' என்று குரல் கொடுத்தவள், அப்போது தான் பெரியவரைப் பார்த்தாள்.

"என்னப்பா! யாரைப் பார்க்கணும்?" என்று பெரியவரைக் கேட்டாள்.

அப்பா என்ற சொல்லைக் கேட்டதும் அவர் கலங்கினார்.

"இல்லையம்மா! மிகவும் களைப்பாய் இருந்தது. இப்படியே திண்ணையில் உட்கார்ந்து விட்டேன். கொஞ்ச நேரத்தில் போய் விடுவேன்!" என்றார்.

அவள் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வீட்டிற்குள் சென்று விட்டாள்.

சிறிது நேரம் சென்றது. வேலைக்குச் சென்ற கணவர்

திரும்பி வரும் நேரமாதலால் வீட்டிலிருந்து வெளியே வந்தாள். மறுபடியும் பெரியவரைப் பார்த்தாள். பெரியவர் மிகவும் சோர்ந்து இருந்தார். என்ன நினைத்தாளோ தெரியவில்லை. வீட்டிற்குள் சென்றவள் கையில் ஒரு டம்ளர் நிறைய காபியுடன் வந்தாள். அவர் கையில் கொடுத்து குடிக்கச் சொன்னாள். அவர் மறுத்தும் கேட்காமல், வற்புறுத்திக் குடிக்கச் சொன்னாள்.

காபியைக் குடித்ததும் புத்துயிர் வந்தது போலிருந்தது, பெரியவருக்கு.

"அம்மா! ஏதாவது வேலை கிடைக்குமாம்மா? என் மகன் என்னை இப்படி விரட்டுவான் என்று நினைக்கலைம்மா! அவன் என்னை ஓர் அடிமைபோல, வேலைக்காரனைப் போல வைத்திருந்தான். அவன் தன் மனைவியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு ஒரு பிச்சைக்காரனைவிட கீழ்த்தரமாக என்னை நடத்தினான். வயதாகி விட்டதாலே நான் பாரமாக இருப்பதாக நினைத்தானோ என்னவோ என்னை விரட்டி விட்டான்! பாழும் இந்த சாண் வயிற்றுக்காக நான் உழைத்துத்தானே ஆகணும்?" என்றார்.

அவள், பெரியவரையே சிறிது நேரம் பார்த்தாள்.

"என்னம்மா, அப்படிப் பார்க்கிறே? இந்தக் கிழவனால் என்ன வேலை செய்ய முடியும் என்றா நினைக்கிறே? உடம்பிலேதான் வயசாச்சே தவிர, மனதுக்கு ஆகலை. எந்த வேலை கொடுத்தாலும் செய்வேனம்மா!" என்றார்.

அவளிடம் பேசிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் அவள் கணவர் வந்து விட்டார். தன் கணவருடன் அவள் வீட்டிற்குள் சென்று விட்டாள்.

'என் மேல் பரிதாபப்பட்டாள் என்பதற்காக நான் பிச்சை கேட்கலாமா? இந்த நிலைமைக்கு வந்த பிறகும் நான் உயிர் வாழத்தான் வேண்டுமா?' என்று நினைத்து நினைத்து வேதனைப்பட்டார் பெரியவர்.

அச்சமயம் அவள் தன் கணவருடன் வந்தாள். இருவரும் கைத்தாங்கலாக அவரை அழைத்துச் சென்றார்கள். அமரவைத்து உணவு பரிமாறினர்.

பெரியவர் இருவரையும் பார்த்துக் கைகூப்பி வணங்கினார்.

"இவள் என் மனைவி! பெயர் மல்லிகா. நான் காட்டிலாகா அதிகாரி! எனது பெயர் கிருஷ்ணன். எங்களின் இரு பிள்ளைகளும் பள்ளியில் படிக்கச் சென்று விடுவார்கள். நீங்கள் என் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பாகவும், தோட்டத்தைப் பார்த்துக் கொண்டும் இங்கேயே இருந்து விடுங்கள். எங்கும் போக வேண்டாம்" என்றார்.

"அம்மா! நீங்கள் இருவரும் என் தெய்வங்கள்! இவ்வளவு நாள் நான் ஏன் உயிர் வாழணும் என்றிருந்தேன். ஆனால் இனி மேல்தான் நான் உயிர் வாழணும். என் பிள்ளை விரட்டி விட்டான். இந்தப் பிள்ளை என்னை வாழ வைத்த தெய்வம்!" என்று நெகிழ்ந்தார்.

அவரை பாஸ்கர் ஆதரவாகத் தழுவி அணைத்துக் கொண்டார். ✿

அமுதசுரபி –

பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்

இணைந்து அளிக்கும் இலக்கியப் பரிசு

சிறந்த புதினத்திற்கு ரூ. 5000/–

1. 250 பக்கங்களுக்கு மேற்படாமல் (முழு பக்கத்தாளில்) கையெழுத்துப் பிரதி இருக்க வேண்டும். தட்டச்சாக இருந்தால் 100 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். 2. எழுத்தாளரின் சொந்தக் கற்பனையாக அமைய வேண்டும். 3. சமூக, வரலாற்று நாவலாக இருக்கலாம். 4. நடுவர்கள் குழு சிறந்த ஒரு நாவலைத் தேர்ந்தெடுக்கும். தேவைப்பட்டால் பரிசு இருவருக்குப் பிரித்துத் தரப்படும். 5. பரிசு பெற்ற நாவல் அல்லது நாவல்கள் அமுதசுரபியில் தொடராக வெளியிடப்படும். அல்லது நூலாக வெளியிடப்படும். 6. நூலாக முதற் பதிப்பு வெளியிடும் உரிமை ஸ்ரீராம் டிரஸ்ட் நிறுவனத்தினுடையது. 7. பரிசுக்கு ஏற்கப்படாத கையெழுத்துப் பிரதிகளைத் திரும்பப் பெறப் போதிய தபால் தலை இணைக்கப்பட வேண்டும்.

கையெழுத்துப் பிரதிகள் 15.10.94-க்குள் அமுதசுரபி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அமுதசுரபி

த. பை. எண். 5043, 145, லிங்கச் செட்டி தெரு, சென்னை –600 001.

சங்கடமான சந்தோஷம்

—புதுவை நித்திலன்

ஜிப்மர் நோக்கிப் போகிற காமராஜ் சாலை கொஞ்சம் போக்குவரத்து நெரிசல் மிக்கது. அதில் சாரம் பக்கம் அமைந்திருந்தது அந்த சேமிப்பு வைப்பு நிதியகம்.

காலை மணி பத்தை அடித்து ஓய்ந்தது அலுவலகக் கடிகாரம். முன்னதாக உள்ளே நுழைந்தார் 'சாய்' என்கிற சாய் ஜெயராம். அலுவலகப் 'பளு' அவருக்கு அதிகமோ இல்லையோ, ஆக்கப்பூர்வமாய் வருபவர்களின் குறையைத் தீர்க்கும் மனவலிமை அவருக்கு அதிகம். எனவே காலை வேளை அவருக்கு அதிவேகமாகவே புலரும்.

மனதிற்குப் பயப்படும் மனிதர்களின் வேலை ஒரு போதும் வீணாகாது என்பதற்கு அவரே எடுத்துக்காட்டு. குறையைத் தட்டிக் கேட்பதிலும், அதனை ஆக்கப்பூர்வமாய்க் களைவதிலும் கெட்டிக்காரர் 'சாயி'. அதனால்தானோ, என்னவோ அவரை எல்லார்க்கும் பிடிக்கும். ஒவ்வொருவராய் உள்ளே வரத் தொடங்கினர்.

"ஹலோ... சாய்" என்றார் ஒருவர்.

"ஹலோ ... எப்படி இருக்கீங்க? அம்மாவுக்குத் தேவலாமா?" – இது சாய்.

"ஓ... கே! சார். எல்லாம் உங்க தயவுதான்".

சிரித்துக் கொண்டார் சாயி. இது மட்டுமே அவர் மேனரிசம். அதில்கூட எத்தனைத் தெளிவு, அழகு! ஏனெனில் அது எதிர் பார்ப்பற்ற புன்னகை.

"வணக்கம், சார்!" மற்றொரு குரல்.

"வணக்கம்மா. எப்ப ஜாயின் பண்ணீங்க...? வீட்ல அவர் எப்படி இருக்கார்?"

"எல்லாரும் நல்லா இருக்கோம் சார்! நீங்க இருக்கும்போது எங்களுக்கு என்ன சார் குறைச்சல்?"

"போச்சுடா..." என்றபடி அதற்கும் ஒரு சிரிப்புதான் சாயியின் பதிலாய் இருந்தது.

அலுவலகத்தின் பிரிவுகள் எல்லாம் அவரைச் சார்ந்திருப்பது போலவே தோன்றும். ஏனெனில் அவர் எல்லாருக்கும் நண்பர். தலைமை ஏற்காத தகைமை! இதுதான் சாயி!

பொதுமக்கள் தங்கள் கணக்கில் கடன் கேட்க ஒருவர்பின் ஒருவராய் அலுவலகம் வரத் தொடங்கினர்.

"சார்! இந்தக் கணக்கில் எவ்வளவு பணம் இருக்குன்னு பாருங்க!" – இது ஒருவர்.

"எனக்கு ஆயிரம் ரூபாய் வேணுங்க. இருக்கான்னு கொஞ்சம் பார்த்துச் சொல்றீங்களா?" – மற்றொருவர்.

"சார்... ஒரு லோன் அப்ளிகேஷன் தர்றீங்களா?" இப்படி ஒருவர்.

எல்லாரையும் முகம் சுளிக்காமல் அணுகி, சமாளித்தார் சாயி!

"ஏங்க... அந்தப் பக்கம் ஒரு சாரு இருக்காரில்ல... அவர்கிட்டே கேட்டதுக்கு உங்களைத்தான் பாக்கணுங்கறாரு... எங்களை ஏன் அலையவுடுறீங்க?" என்று கோபமாய்க் கேட்ட அந்த அம்மையாரை அழைத்துக் கொண்டு போய், அந்தப் பிரிவிலுள்ள தன் நண்பரிடம் விவரம் அறிந்து கூறி அனுப்பிவிட்டு, தன் இருக்கையில் வந்தமர்ந்தார் சாயி.

"அலுவலகம் என்றால் அப்படி – இப்படின்னு இருக்குந்தான். இதெல்லாம் சகஜங்க... விடுங்க! வந்தோமா... நம்ம காரியத்தைப் பார்த்தோமா... உடனே போனோமான்னுதான் இருக்கணும். குறையெல்லாம் பேசிக்கிட்டு இருக்கக் கூடாதுங்க..." என்றார் அனுபவமிக்க ஒருவர்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சாயி, கேட்டார்.

"என்ன வேணுங்க?"

"சார்! என் கணக்குல எவ்வளவு இருக்குன்னு சொல்லுங்க. புள்ளைங்களுக்குப் பீஸ் கட்டணும்" என்றார்.

வந்தவரின் முகம் சோகத்தைச் சுமந்தபடியிருந்தது.

"இதுக்கு முன்னாடியே நீங்க ரெண்டு தரம் எடுத்திருக்கீங்க போலிருக்கே?" – இது, சாயி!

"ஆமாங்க... வேற வழியில்லை. இன்னும் கேஸ் முடியலைங்க! பசி – பட்டினி பார்த்துக்கிட்டு புள்ளைங்க படிப்ப வீணாக்க நான் விரும்பல" என்றார் வந்தவர்.

சாயிக்கு நன்றாய்த் தெரியும், அவர் கணக்கில் பணம் அவ்வளவு இருக்காதென்று. அதனை அவரிடம் காட்டிக் கொள்ளாமல் பக்கத்து சீட் உமாவிடம் தந்து பார்த்து வரச் சொன்னார். அவரும் எழுந்து போய், கணக்குப் பேரேட்டில் பார்த்து விட்டு வந்து முன்னூறு ரூபாய் மட்டுமே இருப்பதைக் கூறினார். இதைக் கேட்டதும், 'பூத்து வாடிய பூவரசம் பூ போல்' ஆகியது வந்தவரின் முகம்.

"என் நிலைமையைப் பாருங்க சார்! இந்த மாசத்திலே மூணு புள்ளைங்களை ஸ்கூல்ல சேத்தாகணும். எனக்குன்னு இருக்கிற ஒரே

வழி இதுதான். இதுவும் இப்படி வறண்டு போயிருக்கு. உதவின்னு போய்க் கேட்கக்கூட இதுக்குமேல யாருமில்லைங்க. யார் வூட்டு வாசல்ல போயும் நிக்க முடியாதுங்க" என்று பேசப்பேச அழுகையின் அவலம் மேலோங்கியது.

ஆபீசே சாயியையும், உமாவையும் பார்த்தது.

'சாயி' வந்தவரைச் சமாதானப்படுத்தி, உட்கார வைத்தார்.

"சார்... அழாதீங்க! முதல்ல கண்ணீரைத் தொடைச்சுக்கங்க" என்றார்.

நின்று கொண்டிருந்தவரை உட்காரச் சொன்னாள் உமா. பெண்ணுக்கென அவர் மனம் இரங்கியதோ என்னவோ, அவள் காட்டிய இடத்தில் அமர்ந்தார்.

விசும்பல் மட்டும் ஓய்ந்தபாடில்லை. அவரைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. மனிதர்கள் எவ்வளவு வித்தியாசமானவர்களாய் இருக்கிறார்கள்! தானே அழத்தொடங்கிய மனிதர்கள் தங்கள் மனதிற்குப் பிடிக்கும்வரை அழுதபின்னர்தான் நிறுத்துகிறார்கள். இதுவும் ஒரு சுகந்தான். ஏனெனில் பாரம் மனதிற்குத்தானே தவிர மனிதனுக்கல்லவே என்பது போலிருந்தது வந்தவரின் செய்கை.

அவரையே பார்த்துக் கொண்டிருந்த சாயி சற்றும் எதிர்பாராமல் சொன்னார் :

"சார்... உங்க நிலை எனக்குப் புரியுது. புள்ளைங்க படிக்கணுங்கறத்துக்காக நீங்க கஷ்டப்படுறது எனக்கென்னமோ போலிருக்கு. நான் வேணும்னா ஒரு புள்ளைக்குப் பீஸ் கட்டிடுறேன்".

இதைக் கேட்டதும், எழுந்து நின்று 'சாயி' கையைப் பிடித்துக் கொண்டார். அவர் மனது நெகிழ்ந்தது நிம்மதி முகத்தில் தெரிந்தது.

உமாவும் உடனே சொன்னாள் -

"நான் வேணும்னா ஒரு புள்ளைக்குப் பீஸ் கட்றேங்க!"

இருவரையும் மாறி - மாறிப் பார்த்தபடி, மெதுவாய் எழுந்து வெளியேறினார், வந்தவர்.

அலுவலகம் என்றால் நாலு பேரும் நாலுவிதமாகத்தான் இருப்பார்கள். இது எங்குதான் இல்லை? அப்படித்தான் இருந்தது 'சாயி'யின் அலுவலகம்.

சிலர் அவர் செய்கையை வெறுத்தனர். பலர் அதிலுள்ள யதார்த்தத்தை வரவேற்றனர்.

அப்போது -

"ஆமாம்... அந்த ஆளுக்கு வேற வேலையில்லே! ஆபீஸ் வந்தோமா... வேலை செஞ்சோமா... வீட்டுக்குப் போனோமான்னு இல்லாமே... ஹெல்ப் பண்றாராம்... ஹெல்ப்!" என்று கிண்டலடித்தார் ஒரு சீனியர்.

இதையெல்லாம் காணாதது போல் இருந்தார் சாயி!

"சூப்பர் தலைவா! செய்யணும்னு மனசிருந்தா போதாது. செய்து காட்ட வழி தேடிக்கிட்ட பாரு!... அங்கதான் நீ உயர்ந்திட்ட..." என்றார் சாயியின் நண்பர்.

மாலைப் பொழுதுவரை அவரவர்களுக்கும், அவரவர் பங்குக்குச் சாயியையும், உமாவையும் புகழ்ந்தனர். அலுவலக அதிகாரி வராத குறைதான். அலுவலகமே பூரித்துப் போனது போலிருந்தது. சமீபத்தில் கட்டிய தோரணங்களும், காகிதப் பூக்களும் அவர்களுடன் சேர்ந்து தங்கள் பங்கிற்குச் சலசலத்தன!

சாயி! அலுவலகத்தில் தனிப்பட்ட செல்வாக்கு ஒரு பக்கம் இருந்தாலும், எல்லார்க்கும் எளிதில் இரங்கும் மனம் படைத்தவர் என்பதே அவரைப் பற்றிய மதிப்பு உயர்வதற்குக் காரணமாயிருந்தது.

அலுவலக நண்பர்களின் பேச்சு சாயிக்கு என்னவோ போல இருந்தது.

'அப்படி என்ன பெரிய காரியம் செய்திட்டதா நினைத்துக் கொண்டு இவர்கள் நம்மைப் பேசுகிறார்கள்? கஷ்டத்தில் ஒருத்தர்க்கு உதவுறது அவ்வளவு பெரிய விஷயமா?' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார் சாயி!

திரும்பியவர் பார்வையில் உமா. நம்மோடு சேர்ந்து, இவரும் இப்படி ஆகிவிட்டாரே என்று நினைத்தாரோ, என்னவோ - கேட்டார் :

"ஏங்க... நான்தான் அவருக்கு உதவணும்னு செஞ்சேன். நீங்க வேற இந்தச் சுமையை குடும்பச் செலவோடு ஏன் ஏத்துக்கிட்டீங்க?"

"என்ன சார் நீங்க... இப்படிப் பேசுறீங்க? இந்தக் காலத்துல நம்ம ஒரு புள்ளைய பீஸ் கட்டி ஸ்கூலுக்கு அனுப்புறதிலேயே பாதி சம்பளம் போயிடுது' என்றார் உமா.

"யதார்த்தம் என்கிற பேரால... ஒருத்தர் விமர்சனத்துக்கு ஆளானாலே போதும். இந்த ஆபீஸ்ல நாம இப்ப ரெண்டு பேராயிட்டோம்" என்று கூறியபடி மனம் விட்டுச் சிரித்தார் சாயி. உமாவும் அவரோடு கலந்து கொண்டாள்.

நாளை கட்டாயம் தலைமை அதிகாரியிடம் சாயியின் பெருந்தன்மை பற்றிக் கூறிட வேண்டுமென அலுவலர்கள் கூடி முடிவெடுத்துக் கலைந்தனர்.


மறுநாள் காலை.

வழக்கத்திற்கு மாறாக அதிகாரி மணி பத்தாவதற்கு முன்பே வந்து விட்டிருந்தார். சம்பந்தப்பட்ட துணை அலுவலர்களிடம் கூறி காலையில் ஒரு பத்து நிமிட 'மீட்டிங்'கிற்கு ஏற்பாடு செய்யச் சொன்னார்.

மீட்டிங் ரூமில் அனைவரும் ஆஜராயிருந்தனர். ஒவ்வொருவரும் 'சாயி' பற்றியும், உமா பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். 'சாயி'க்கு இனம் புரியாத ஒரு சங்கடமான சந்தோஷம். செய்தது பெரிதாகத் தெரியாததாலோ என்னவோ அவருக்கு அப்படி ஒரு நிலை!

அதிகாரி வந்தார். பரஸ்பர வணக்கங்கள் பரிமாறியபின் அவரே எழுந்து பேசினார். ஏனெனில் அது அவரின் விஷயதானமாயிருந்தது. சொன்னார் :

"ஃப்ரண்ட்ஸ், கொலிக்ஸ்...



உங்களோடு நேரடியாக இப்படி அவசரமா நான் பேசறதுக்கு ஒரு ரீசன் இருக்கு. நீங்கல்லாம் என்னைத் தப்பா நினைக்கக் கூடாது. ஏன்னா... நான் சொல்லப் போற விஷயம் அப்படி! நம்ம ஆபீஸப் பொறுத்தவரை நம்ம எல்லார்க்கும் ஈவு-இரக்கம் ஜாஸ்தி. எப்படின்னா நம்மைத்தேடி வர ஒவ்வொருத்தருக்கும் அவங்களை அலைக்கழிக்காம உதவுறோம். அப்புறம் என்ன? அது போதாதா? பின்னே – ஏன் நாம் அவங்களுக்கு சொந்தப் பணம் தந்து உதவணும்? ஸோ.... அதெல்லாம் வேண்டாம். நீங்க... ஒவ்வொருத்தரும் உங்க கடமையை மட்டும் செஞ்சா போதும்... நீங்க இரக்கப்பட்டு உதவணும்னு நினைக்கிறீங்க... அதை உணர்கிற மனப்பக்குவம் அவங்களுக்கும் இருக்கணும் தானே? அதுதானே முக்கியம்? அப்படி இல்லாதவர்களுக்கு நாம உதவினா என்ன ஆகும்னு நினைக்கிறீங்க? நேத்து என் ரூமுக்கு ஒருத்தர் வந்தார். லோன் கேட்டாராம். அவர் கணக்கில் பணம் இல்லேன்னு சொல்லிட்டு உங்களில் ஒருத்தர் உதவுறதா சொன்னீங்களாம். அவர் என்ன நினைத்தாரோ தெரியாது. கேட்டாரு 'நான் என்ன பிச்சைக்காரனா? எனக்குன்னு ஒண்ணும் இல்லியா? எனக்குள்ளதைக் கொடுத்தா போதாதா'ன்னு. அவரைப் பற்றிய விமர்சனம் இப்போ நமக்குத் தேவையில்லை. என்ன நடந்ததுன்னு இப்ப நாம விமர்சிக்க வேண்டியதில்லை. என் விருப்பம் எல்லாம் இதுதான். நீங்க... உங்க கடமையைச் செய்யுங்க. அது போதும். உங்க யாரையும் குறை சொல்ல நான் விரும்புல... இக்னோர்த... ஃபாஸ்ட்! தேங்க்ஸ் ... டு... ஆல்!"

அலுவலகமே ஸ்தம்பித்துப் போயிருந்தது. எல்லார் முகமும் சந்தோஷ சாயலுக்கு எதிராயிருந்தது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டு தங்கள் சீட்டுக்குச் சென்றனர்.

மனதில் கனமும், முகத்தில் சோகமுமாய் தன் சீட்டில் வந்து அமர்ந்தாள் உமா.

யதார்த்த புருஷர்களுக்குச் சங்கடமும் சந்தோஷம்தான் போலும்! எவ்வித மனக்கிலேசமும் இன்றி தன் வேலையில் வழக்கம்போல் ஈடுபட்டிருந்தார் சாயி ஜெயராம்!

ஆயுத அழுக்கு

தி.கோவிந்தராசு

மனிதனே
உன்னுள் இருக்கும்
நீ எங்கே?

வரலாறு
விம்மிக்கிடக்கிறது
அதன் அகராதியில்
யுத்தத்திற்கு மட்டும்
விடுமுறை கிடையாதாம்!

அணு ஆயுதங்களை
அழித்து விடுவதாய்
சபதம் ஏற்றோம்!

ஆனால்
மனித மூளையில்
மண்டிக்கிடக்கிறது
ஆயுத அழுக்கு!

உலகத்தின் திசைகளில்
நிறவெளி நினைவுகள்!

தென்னாப்பிரிக்க மண்ணில்
நிறவெறி இருட்டு
இப்போதுதான்
விரட்டப்பட்டுள்ளது.

அந்த
ஜீவபோராட்டம்
சாகாத சரித்திரம்!

சிறைச்சாலையின் இலக்கியத்தில்
எழுதப்பட்ட
ஒரு மாமனிதனின்
காவியம்!

சத்தியம் சாகாது என்பதின்
சாத்தியம் தான்
அவன் சகாப்தம்!

மகாத்மாவின் சிந்தனைகளே
மண்டேலாவின்
பாதையின்
மறுமலர்ச்சிக்கு
முன்னோடி. முத்திரைகள்!

இன்று
நெல்சன் மண்டேலாவால்
உலகமே
மகுடம் அணிந்து மகிழ்கிறது!

காலம் தந்த
கௌரவம் தான்
அவனது ஆட்சி!

அவன் சரித்திரத்தின்
ஆரம்பத்தைப் போல.

உலகத்தின் திசைகள்
உசுப்பப்படவேண்டும்.

நிறவெறி இருட்டு
முற்றிலுமாகப்
பொசுக்கப்பட
வேண்டும்!

மண்குதிரை

வர்ண ஜொலிப்பு
வாண வேடிக்கைகளோடு
பிரதிஷ்டை செய்யப்பட்டது
மண்குதிரை.

இது-
காவல் தெய்வங்களின்
புறப்பாட்டிற்கானது.

இதன்மீது ஏறித்தான்
கூட்டணியில் தெய்வங்கள்
வேட்டைக்குப் போகும்.
புலிகளை விடுத்து
எலிகளை வேட்டையாடும்.

கடமையை மறந்த
காவல் தெய்வங்கள்
தங்களுக்குள் இட்டுக்கொள்ளும்
குடுமிபிடிச் சண்டையில்
குதிரையின் பாகங்கள்
உதிர்ந்த ரோமங்களாகும்.

தெய்வங்கள்
பதவி இழக்கும்.
மூடக் குயவர்கள்
மறுபடியும் ஒன்றுகூடி.
குதிரை செய்வார்கள்.

புதுவை மகரந்தன்

இந்நாடே

சீரார் வங்கத் திரைமுத் தொதுங்க
கன்னலுஞ் செந்நெலுங் கவினுற ஓங்க
வாழையுந் தாழையுந் தென்னையு நற்கமுகும்
மாவும் பூத்துக் குலுங்க வேதம்
பரவுதலால் வேத புரியும் இந்நாடே
முன்னாள் நாட்டு நடப்பை இந்நாள்
மக்கள் இனிதே உணர நாட்குறிப்
பெழுதிய ஆனந்த ரங்க அண்ணல்
நலமுற வாழ்ந்ததும் இப்பொன் னாடே
துறந்து நல்லின்பம் துய்த்திட அறியா
திறந்தும் பிறந்தும் இடர்பல உழக்கும்
சழக்கார் உய்ய தத்துவ விளக்கம்
செய்த சுடர்விடு ஞானச் சூடாமணி
அரவிந்தர் வாழ்ந்து உயர்ந்ததும் இந்நாடே
செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே எங்கள்
தந்தையர் நாடெனும் போதினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே என முழங்கிய
தேசியக் கவியாம் பாரதி உலவியது இந்நாடே
உயர்தமிழ்த் தாய்இந் நிலத்தில் அடைகின்ற
வெற்றி யெல்லாம் உன்றன் வெற்றியே
என்றே சாற்றிய புரட்சிக் கவிஞராம்
பாரதிதாசனார் பிறந்ததும் இந்நாடே.
பாரோர் போற்றும் பற்பல சித்தரும்
முத்தரும் பன்னலம் மிகுந்த பாவலர்
நாவலர் பண்புடை யாளர் தண்டமிழ்
நூலோர் நன்புடன் உறைவதும் இந் நாடே.

வித்துவான்: நல்லாசிரியர்

பா.சு.கோவிந்தராஜுலு



← புதுவைப் பூங்காவின் நடுவே காணப்படும் ஆயி மண்டபம் பிரெஞ்சுக் கலையின் ஓர் அம்சம்.

நேரு மைதானம், காந்தி சிலை, போர் நினைவுச் சின்னம், பழைய கலங்கரை விளக்கம், குழந்தைகள் பூங்கா, டூப்ளே சிலை.

ஆங்காங்கே பிரெஞ்சுக் கலாசாரம் பிரதிபலிக்கிறது.

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் திரண்டு வந்து ஸ்ரீ அரவிந்தர் – அன்னை சமாதியை வழிபட்டுச் செல்கின்றனர்.

கடல் சவாரி

புதுச்சேரி. எங்கும் அமைதி. எல்லாமே அழகு. ஸ்ரீ அரவிந்தர் – அன்னை சமாதி. ஒழுங்கான வீதி. நீண்ட கடற்கரை. அழகிய பூங்கா. பூங்காவின் நடுவே ஆயி மண்டபம். கவர்னர் மாளிகை, அருங்காட்சியகம்.




நீண்ட அழகான கடற்கரைச் சாலை




புதுச்சேரியை நிர்மாணித்த டூப்ளே சிலை



• கடல் சவாரிக்குத் தயார். இங்கிருந்துதான் சவாரி தொடங்குகிறது.



• கடல் ஓரக் கட்டுமரத்தில் சிறு வலைகளின் உதவியுடன் மீன்பிடிப்பு.



கடலிலிருந்து புதுச்சேரி.

மனித நேயம் ஆரோவில் நகரில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

புதுச்சேரி அரசு, சுற்றுலாவிற்குத் தொழில் அந்தஸ்து கொடுத்த பிறகு, புதுவைக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை 33% அதிகரித்துள்ளதற்குக் காரணம், பாண்டிச்சேரி சுற்றுலா மற்றும் போக்குவரத்து வளர்ச்சிக் கழகத்தின் சலியாத முயற்சியும் உழைப்பும்தான். அரை நாளில் புதுச்சேரியைச் சுற்றிப் பார்க்க பாண்டிச்சேரி சுற்றுலா மையத்திலிருந்து காலை 8.00 மணிக்குப் புறப்படும் பேருந்து ஸ்ரீ அரவிந்தர் - அன்னை ஆசிரமம், அன்னையின் கனவில் உருவான ஆரோவில் நகரம், சுண்ணாம்பாறு படகுத்துறை, பொட்டானிகல் கார்டன், அருங்காட்சியகம், சுருதி டெக்ஸ் டைல் ஷோரும் என்று சுற்றிவிட்டு 1.00 மணிக்கு வருகிறது. இதற்கான கட்டணம் நபருக்கு ரூ. 25/-. மீண்டும் 2 மணியில் இருந்து 5.30 மணி வரை அடுத்த சுற்று; இருபத்தைந்து ரூபாய்க்கு இன்பமான பயணம். உடல் உபாதையற்ற சொகுசான சுற்றுலா.


புதுச்சேரியைப் பார்த்துவிட்ட இன்பம் இத்துடன் முடிந்து விடுகிறதா? இல்லை, இதற்கு மேலும் ஒரு பேரின்பம் இருக்கிறது. அது தான் கடல் சவாரி. ஆங்கிலத்தில் ஸீ - க்ரூஸிங். உல்லாசக் கப்பல் பிரயாணம்; கடல் உலா எனலாம்.

அந்தக் கடல் சவாரிக்கு ஸீ-க்வீன் (கடல் ராணி) என்கிற 12 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஃபைபர் படகை, சென்ற ஆண்டு முதல் விட்டிருக்கிறது புதுச்சேரி சுற்றுலாத் துறை.

காலை 8.30 மணிக்கு துணை சுற்றுலா அதிகாரி திரு. எஸ். விஜயகுமார் நம்மை அழைத்துச் சென்றார். ஸீ-க்வீனின் ஓட்டுநர் திரு. மாரிமுத்துவிற்கு அறிமுகப் படுத்தினார்.


திரு. மாரிமுத்துவின் தொழிலும் - பிறப்பும் மீனவ சமுதாயத்தில் என்பதால் அதற்கேற்ப ஆள் திடகாத்திரமாய் மீசையுடன் மிளிர்ந்தார்.

இன்ஜின் ஓடத் தொடங்கியது. படகு லேசாய் அசைந்து கயிறுகள்



...ரவிந்தர் - அன்னை ஆசிரம நுழைவாயில்.

புதுவையிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆரோவில் நகரம். உலகத்தின் பல்வேறு பகுதிகளி லிருந்து இங்கு வந்து வசிக்கும் மக்கள் மனித நேயத்தை வளர்க்கிறார்கள். பலநாட்டு மன்றும், தியான மண்டபமும் ஆரோவில் நகரத்தின் தனிச் சிறப்பு. →







புதுவை அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சொகுசு பேருந்து.

20 லட்ச ரூபாய் மதிப்புள்ள சொகுசுப் பேருந்தின் உட்புறத் தோற்றம்

வில்லியனூரில் உள்ள அருள்மிகு கோகிலாம்பிகை ஸமேத திருக்காமீஸ்வரர் கோயில். கோயிலிலுள்ள திருத்தேர் தென்னிந்தியாவில் உயரமான இரண்டாவது தேராம். புதுவையிலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வில்லியனூரின் மாதா கோயிலும் பிரசித்தமானது.





17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டில் ...டப்பட்ட புனித இருதய ஆண்டவர் ...லயம்.

அவிழ்க்கப்பட்டு செயற்கையாக உருவாக்கப்பட்ட 3 கி.மீ. கால்வாயில் மிதந்து - சின்னச் சின்ன கட்டு மர - மீன் பிடிப்புப் படகுகளைக் கடந்து கடலில் சேரும் போது சின்னஞ்சிறு அசைவுகள்.

கடலில் சேர்ந்து விட்டோம்.

அலையின் வேகம், காற்றின் வேகம், நீரோட்டத்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்து எட்டு நாட்டிக்கல் மைல் வேகத்தில் படகு விரைந்தது.

கொஞ்சம் கொஞ்சமாய் புதுச்சேரி நம்மை விட்டு விலகியது. அலைகளின் ஆர்ப்பாட்டம் அதிகமாயிற்று. நீல வண்ணத்தில் பார்த்த கடல், வெளிர் பச்சை நிறத்தில். தூரத்தில் படகின் நேர் எதிரே கடலைத் தொடுகிற வானம்.

படகின் வேகம் சீரானபோது முன் பக்கம் அமிழ்ந்து பின் பக்கம் உயர்ந்தது. பின் பக்கம் அமிழ்ந்த போது பின்பக்கம் அமர்ந்திருந்த - அந்தமானில் இருந்து படகில் நம்முடன் பயணப்பட்ட - பள்ளி மாணவர்கள் மனேஷும், ஐயந்தரும் பக்கவாட்டு இருக்கைக்கு வந்தார்கள்.



படகுப் பயணத்தில் அந்தமான் பயணிகள்.

முன்பக்க, பின்பக்க ஆட்டங்கள் ஓய்கிற நேரத்தில் இடப்பக்கம் உயர்ந்து - வலப்பக்கம் தாழ்ந்தது. மாணவிகள் ஜான்சியும், ரீனாவும் தலையைத் தாழ்த்திக் கொண்டார்கள்.

தூக்கி வீசப்பட்ட கடல்நீர் புகைப்படக் கலைஞரைக் குளிப்பாட்டியது.

உள் அறையில் இருந்து குரல் கொடுத்தார் மாரிமுத்து. "இன்றைக்கு ஸீ ரஃப்பாக இருக்கிறது. வியாழனில் மோதும் வால் நட்சத்திரத்தின் காரணமே இது" என்றார்.

"என்ன ஸார் பயமாயிருக்கா?"


"உம்.. செம... த்ரில்..."

"பயப்படாதீங்க. காப்பாளர்கள் ஐந்து பேர் இருக்கிறார்கள். பாது காப்புக் கருவிகளும், மீட்பு இயந்திரங்களும் பயணிகளின் பாதுகாப்





கடலில் டால்பின்கள்



கன்னாம்பாறு படகுத்துறையில்

பிற்குத் தயாராக இருக்கும். முதல் தடவையா வர்றீங்களா?"

"ஆம்" என்றோம்.

"அதான். திரும்பிப் போகும் போது இன்னொரு தடவை எப் போது போகலாம் என்று யோசிப் பீர்கள் பாருங்கள்" என்றார் துணை சுற்றுலா அதிகாரி.

எதற்கு இந்தக் கடல் சவாரி?

கூட்டம் கூட்டமாக வரும் டால்பினைப் பார்க்க.

புதுச்சேரி கடற்கரை ஓரங்களில் அவ்வப்போது எட்டிப் பார்க்கும் டால்பின் கூட்டம் கடலுக்குள் 7 அல்லது 8 கி.மீ. தூரத்தில் நிரந்தர வாசிகளாகிவிட்டன. நீர் மட்டத்திற்கு மேல் படகு செல்லும் வேகத்தில் பயணப்படுகின்றன. புதுச்சேரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்புக்கு டால்பின வழிவகுக்கின்றன.

8 கி.மீ. தூரத்தைக் கடலி கடந்த பிறகு சூரியன் நீரி தெறித்து கண்களைக் கூச வை தான். டால்பின்? ஒன்று பார் தால் கூடப் போதும். ஊ முழுக்கச் சொல்லிவிடலாம் வெளியே வந்தால்தானே?

முன் பக்கம் நின்றிருந்த பா காவலர் கடலைக் கூர்மையா ஆராய்ந்து கொண்டிருந்தார்.

பேச்சு கொடுத்தோம். இர டடி எடுத்து வைக்க இருபது இட களைப் பிடிக்க வேண்டியிருந்தது

"என்னங்க டால்பினைப் பார்க்கறீங்களா?"



"இல்லை ஸார். குரூப் ஃபி (Group Fish) வருகிறதா என்று பார் கிறேன்".

"நாம் டால்பினைத் தானே பார்க்க வந்தோம்?"

"குரூப் பிஷ் இருக்கிற இடத்தி தான் ஸார், டால்பின் வரும்".

"வந்தாச் சொல்லுங்க!"

"டால்பின் தானே?"

"இல்லை குரூப் பிஷ்!"

பேசிக் கொண்டிருந்தபோதே கரையை விட்டு படகு, 13 கி.மீ தூரத்தைத் தாண்டியிருந்தது கொஞ்ச நேரத்தில் –



○. தனித்தீவில் உல்லாச விடுதியைக் கட்டப்போகிறது சுற்றுலா வளர்ச்சிக் கழகம். அதற்கான இடம் தயார்.



படகுத்துறை நிர்வாகிகள்.



சுண்ணாம்பாறு ஹைட்ரோ பிளேன் படகு



பாதுகாவலரின் கண்கள் கூர்மையாயின. "ஸார்! குரூப் பிஷ்!"

"எங்கே?"

"இதோ போகுதே கூட்டங் கூட்டமாய்".

ஒன்றும் தெரியவில்லை நமக்கு.

"எங்கே?"

"அதோ போயிடுச்சு ஸார்!"

"டால்பின் வருமில்லே?"

"நிச்சயம்".

வந்தன. சாம்பல் கலரில் முதுகைக் காட்டின. திடீரென்று பத்து... பதினைந்து முதுகுகள். படகு வேகத்தை நிறுத்த - அருகில், மிக அருகில் நீருக்கு மேலே துள்ளித் துள்ளி அமிழ்ந்தன.

ஐந்தடி நீளத்தில் வரிசையாய் வலம் வந்தன.

பதினைந்து நிமிடங்கள். ஏதோ வெளி கிரகத்தில் இருக்கிற உணர்வு.

போதும் என்று சொல்ல முடியாத உணர்வு.

அப்படியே இன்னும் 2 கி.மீ. பயணம். கூடவே டால்பின் கூட்டம், கூர்மையான மூக்குடன் வழுவழுப்பாய்... மினுமினுப்பாய்...

உலகில் எப்படியெல்லாம் அழகு கொட்டிக் கிடக்கிறது! என்ஜின் படகைத் திசை திருப்பிச் சென்று 15 கி.மீ. தூரத்தை மீண்டும் கடக்க - நினைவெல்லாம் டால்பின்!

அதே ஆர்ப்பாட்டம். அலைகளின் வேகம் படகைப் பாடாய்ப் படுத்தினாலும், அதிலும் ஒரு சுகம். உணர்ந்த - ஆனால் சொல்ல முடியாத - சுகம்.

புதுச்சேரி சுற்றுலாத்துறை இந்த சுகத்திற்கு வசூலிக்கும் கட்டணத் தொகை மிகச் சொற்பமே. அதாவது ஒரு மணி நேரத்திற்கு நபருக்கு ரூ. 25/-தான். தனிப்பட்டவர்கள் மிகச் சுகமாய்ச் செல்ல மொத்தமாய் மணிக்கு ரூ. 250/- வசூல் செய்கிறது.

"இந்தப் பயணம் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை வெகுவாகக் கவர - விரைவில் ஒரு சொகுசுப் படகும் கடலுக்குள் செல்ல இருக்கிறது. டீப் பிஷ்ஷிங்



வெளிநாட்டுப் பயணியரையும் கவர்ந்திருக்கிறது புதுச்சேரி.

முறையை அமலாக்க இருக்கிறோம். ஓராண்டில் 40% வளர்ச்சியைக் கண்டுள்ளோம். இன்னும் 60% வளர்ச்சியை எட்ட அதிக நாள் ஆகாது" என்றார் சுற்றுலா வளர்ச்சிக் கழக இயக்குநர் வி.சிவசண்முகம்.

"பக்கத்தில் சுண்ணாம்பாறு படகுத்துறை இருக்கிறது. போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்" என்றார்.

சென்ற இடத்தில் நம்மை வரவேற்றவர் துறையின் மேலாளர் திரு. சாந்தகுமார்.

கடலுக்கு உட்புறம் மூன்று கி.மீ. தூரத்தில் சுண்ணாம்பாறு படகுத்துறை. 4 மோட்டார் படகுகள், 5 பெடல் படகுகள், துடுப்பு – கயாக் படகுகள் 10 – சுறுசுறுப்பாய் நீரில் மிதந்தன.

40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மோட்டார் படகில் அமர்ந்தோம். ஆர்ப்பாட்டமில்லாத அசைவு. அதே நேரத்தில் வேகம். எதிரே 'விர்'ரென்ற வேகத்தில் ஒரு படகு. "அது ஹைட்ரோ பிளேன் படகு. மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் செல்லலாம்" என்றார் சாந்தகுமார். பின்புறம் பெரிய விசிறிகளுடன் பறந்து மறைந்தது.

நம் படகு இருபது நிமிட ஓட்டத்திற்குப் பிறகு மணலைத் தட்டியது. இறங்கினோம். சுற்றிலும் நீர் நடுவே மணல் மேடு.

"இந்த இடத்தை பிக்னிக் ஸ்பாட்டாகச் செயல் படுத்துகிறோம். நல்ல வரவேற்பு இருக்கிறது" என்றார்கள்.

திரும்புகிற வழியில் மீன் பிடிப்பு வலைகள். ஓரங்களில் தென்னை மரம், முன் பக்கம் பாலம். பின் பக்கம் கடல்.

தரை இறங்கி – பேருந்தில் ஏறி – ஸீகல்ஸ் என்ற உணவகத்தை அடைந்தோம்.

அங்கு காத்திருந்தார் நிர்வாக இயக்குநர் வி. சிவசண்முகம்.

"எப்படி இருந்தது பயணம்?"

"புதுச்சேரியின் மறுபக்கத்தை மிகத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அன்னை ஆசிரமம், கடற்கரை, கோயில், பார்க் புதுச்சேரியின் பெருமையைச் சேர்க்க – புதுச்சேரிக்கு வரும் சுற்றுலாப் பயணியருக்கு இந்தக் கடல் சவாரி சிகரமாக இருக்கும்" என்றோம்

"ஸீ கல்ஸ் உணவகம், சுற்றுலாப் பயணிகளுக்குப் பிரத்யேகமாகச் செயல்படுகிறது" என்றார்.

சுத்தமாய் இருந்தது. வெளிநாட்டுப் பயணிகள் கடலைப் பார்த்தபடி பீர் குடித்தனர். குறைவான விலையில் நிறைவான உணவு; உபசரிப்பு.

"மிதக்கும் உணவு விடுதி" ஒன்றிற்கான திட்டம் இருக்கிறது. விரைவில் செயல்படுத்துவோம். நீர் விளையாட்டு, தங்குவதற்கு இன்னும் சிறப்பான வசதிகள், நீச்சல் வகுப்பு போன்ற திட்டங்களைத் தீட்டியுள்ளோம்" என்று நிர்வாக இயக்குநர் சொல்லச் சொல்ல நம் கண்முன்னே அனைத்தும் முடிந்துவிட்ட நிலையுடன் கூடிய பிரமை.

இதோ – சென்னையில் இருந்து 166 கி.மீ. தூரத்தில் இருக்கும் புதுச்சேரி வந்தவரையெல்லாம் வியக்க வைத்துக் கொண்டிருக்கிறது – சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சீரிய பணிகளால்.

5.1.95 முதல் 7.1.95 வரையில் சர்வதேச யோகா விழாவை, புதுவையில் கொண்டாட இருக்கிறது புதுச்சேரி சுற்றுலாத் துறை. மிகக் குறைந்த செலவில் –

– சுண்ணாம்பாற்றில் படகுச் சவாரி செய்ய,

– சரித்திரப் புகழ் வாய்ந்த சுற்றுலா இடங்களைக் கண்டு களிக்க,

– கடலில் உல்லாசப் பயணம் செய்து டால்பின்களைக் கண்டு மகிழ,

– கடலோர 'ஸீகல்ஸ்' உணவு விடுதியில் உண்டு திளைக்க

நீங்களும்தான் வாருங்களேன், ஒருமுறை!

— நாகராஜகுமார்

படங்கள் : யோகா

17-9-1994 முதல் 16-10-1994 வரை

கிரக மாறுதல் :

21-9-1994 முதல் துலா - புதன், 23-9-1994 முதல் கடக - செவ்வாய், 9-10-1994 முதல் புதன் - வக்கிர ஆரம்பம், 13-10-1994 முதல் சுக்கிரன் - வக்கிர ஆரம்பம்.

உங்கள் ராசி பலன்

வித்வான் வே. லட்சுமணன்

கிரக பாதசாரம் :

சூரியன் - உத்திரம் - 2, சந்திரன் - அவிட்டம் - 2, செவ்வாய் - புனர்பூசம் - 2, புதன் - சித்திரை - 1, குரு - சுவாதி - 4, சுக்கிரன் - சுவாதி - 3, சனி - சதயம் 3 (வக்.), ராகு - விசாகம் - 2, கேது - பரணி - 4.

	கேது		செவ்
சனி-வ	இம்மாத கிரகநிலை		
		குரு, சுக் ராகு	சூரி புத

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)

குரு, செவ்வாய், சனி ஆகிய முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். பிரச்னைகள் என்பவை அகலும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு வியாஜ்ஜியங்களிலும் அனுகூலமான போக்கு தென்படும். இயந்திரப் பணியாளர்களுக்குச் செழிப்பான பாதை புலப்படும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அனுகூலம் உண்டாகும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். அரசியல்வாதிகள் தங்கள் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். வியாபாரம் அபிவிருத்தி பெறும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள்.

கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் அனுகூலம் உண்டாகும். அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். தொழிலாளர்களது இலட்சியம் ஈடேறும். கறுப்பு நிறப் பொருட்கள் ஆதாயம் கொண்டுவரும். பயணத்தால் குறிப்பிட்டதொரு காரியம் நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பு நலம் தரும். தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு கூடும். மக்கள்நலம் சீராக இருந்து வரும். 21 ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு வளர்ச்சி தடைப்படும். வாழ்க்கைத்துணைநலனில் கவனம் தேவைப்படும். 23 ஆம் தேதி முதல் அலைச்சல் அதிகரிக்கும். ராசிநாதன் செவ்வாய் 4 இல் பலவீனம் பெறுவதால் உங்கள் உடல் ஆரோக்கியம் ஒருநாள் போல் மறுநாளிராது. ஓரிரு இடையூறுகள் அவ்வப்போது ஏற்படக்கூடுமாதலால் விழிப்புடன் இருப்பது நல்லது. பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. செப்டம்பர் 17,18,22,23,25,26,27,29 அக்டோபர் 6,7,13,14,15,16 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத் திசைகள் நலம் தரும். மிதுன, துலா, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,5,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : (கிருத்திகை 2 ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2 ஆம் பாதம் முடிய)

குரு 6-லும், செவ்வாய் 2-லும் உலவுவது அனுகூலமான நிலை ஆகாது. இதனால் உங்கள் பொருளாதாரநிலை சரிவுக்கு ஆட்பட நேரும். எதிர்பாராத செலவுகளைச் சந்திக்க வேண்டிவரும். அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கு இடமிராது. பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்காமல் இருந்தால் குடும்பத்திலும், வெளிவட்டாரத்திலும் உங்கள் மதிப்பைக் காத்துக் கொள்ள முடியும். வீண் சண்டை, சச்சரவுகளில் ஈடுபட வேண்டாம். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கைக் காண்பது அரிது. 10 இல் சனி உலவுவதால் எதையும் சுபலமாக நிறைவேற்றிவிட இயலாது. கடுமையாகப் பாடுபட்டே பயன்பெற வேண்டிவரும். உடன் பணிபுரிபவர்களால் ஓரிரு தொல்லைகளுக்கு ஆட்பட நேரும். 21 ஆம் தேதி முதல் புதபலம் கூடுவதால் கணிதத்துறையாளர்கள், எழுத்

தாளர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் மந்தநிலை அகலப் பெறுவார்கள்.

மாணவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் செழிப்பான பாதை புலப்படும். 23 ஆம் தேதி முதல் செவ்வாய் 3 ஆமிடம் மாறுவதால் உங்கள் சுயபலம் கூடும். சங்கடங்களைச் சமாளிக்கிற சக்தியைப் பெறுவீர்கள். நிலபுலங்கள் லாபம் தரும். பொறியியல்துறை ஆக்கம் தரும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். திரவப் பொருட்கள் ஆதாயம் தரும். பிறமொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உங்களுக்கு உதவ முன் வருவார்கள். ஏற்றுமதி, இறக்குமதி இனங்கள் லாபம் தரும். அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு ஓரிரு சோதனைகள் சூழும். இறைவழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. அதன்மூலம் மனத் தெளிவு பெறமுடியும். நல்லவர்களின் நட்புறவை வளர்த்துக் கொண்டு நல்லவர் அல்லாதவர்களை விட்டு விலகுவது நல்லது. செப்டம்பர் 17,18,22,23, 25,26,27,29 அக்டோபர் 6,7,13,14,15,16 தேதிகள் சிறப்பானவை. வடக்கு, தென்மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கன்னி, துலா, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,5,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3 ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3 ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் புதன் 4 இல் பலமுடன் சஞ்சரிப்பதாலும், குரு, சுக்கிரபலம் கூடியிருப்பதாலும் உங்கள் அறிவாற்றல் பிரகாசிக்கும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். எண்ணங்கள் இனிது நிறைவேறும். நல்லவர்களின் நட்புறவால் நலம் பல பெறுவீர்கள். உற்றார், உறவினர்கள் தொடர்பு ஆக்கம் தரும். பெண்களுக்கு உற்சாகமான போக்கு நிலவிவரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடை போடுவார்கள். சமுதாயநலப் பணியாளர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள். வியாபாரம் வளர்ச்சி பெறும். புதிய துறைகளில் ஈடுபடவும், அதன்மூலம் வருவாய் கூடப் பெறவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள்.

மாணவர்களது நிலை உயரும். ஆசிரியர்கள் மதிப்பு உயரப் பெறுவார்கள். தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு கூடும். கணவன், மனைவியிடையே களிப்புறவு கூடும். மக்களால் ஓரிரு எண்ணங்கள் ஈடேறும். வேலையில்லாதவர்களுக்குத் தகுந்ததொரு வேலை கிடைக்கும். ஏற்கெனவே வேலை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் ஆகியவற்றைப் பெறுவார்கள். அயல்நாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். பணநடமாட்டம் கூடும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடிவரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் – வாங்கல் இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். நூதன பொருள் சேர்க்கை நிகழும். செவ்வாய்பலம் சீராக இல்லாததால் எதிலும் பதற்றத்திற்கு இடம் தராமல் பொறுமையுடன் ஈடுபடுவது நல்லது. செப்டம்பர் 18,22,23,25,26,27,29 அக்டோபர் 6,7,15,16 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. கன்னி, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,5,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : (புனர்பூசம் 4 ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

சுக்கிரன் 4 இல் உலவுவதால் உங்கள் மனதில் உற்சாகம் பிறக்கும். கேளிக்கை உல்லாசங்களில் ஈடுபாடு கொள்வீர்கள். புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். நெருங்கிய நண்பர்கள், உற்றார், உறவினர்களால் நலம் பெறுவீர்கள். கணவன், மனைவி இடையே களிப்புறவு கூடும். மாணவர்களது நிலை உயரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு நலம் பெறுவீர்கள். செய்துவரும் தொழிலில் சீரான வளர்ச்சி உண்டாகும். 3 இல் சூரியன் உலவுவதால் சங்கடங்களைச் சமாளிக்கும் சக்தி பிறக்கும். உடன்பிறந்தவர்களால் உங்களுக்கும், உங்களால் அவர்களுக்கும் அனுகூலங்கள் உண்டாகும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிப்படிகளில் முன்னேறுவார்கள்.

தோற்றப்பொலிவும் வசீகரச் சக்தியும் கூடும். நிர்வாகத்திறமை பளிச்சிடும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் முன்னணிக்கு உயருவார்கள். குரு, சனி, செவ்வாய் ஆகியோரது சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாததால் இடையிடையே சிறுசிறு சலசலப்புகள் உண்டாகும். பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. மக்கள்நலனில் கவனம் செலுத்த வேண்டிவரும். அலைச்சல் கூடும். எடுத்த காரியத்தை நிறைவேற்ற அரும்பாடுபட வேண்டிவரும். வீண்சண்டை, சச்சரவுகளில் பிரவேசிக்கலாகாது. உடன் பணிபுரிபவர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றிவருவது அவசியமாகும். கிரக வழிபாட்டிலும், தெய்வ வழிபாட்டிலும் கவனம் செலுத்தினால் அமைதி காணலாம். செப்டம்பர் 22,23,25,26,27,29 அக்டோபர் 6,7,8,11,13 தேதிகள் சுமாரானவை. தென்கிழக்கு, கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. கன்னி, துலா, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,5,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம் முடிய)

3 இல் உள்ள ராகுவும், 11 இல் உள்ள செவ்வாயும் உங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவார்கள். பிரச்னைகளைச் சமாளிக்கும் சக்தி உண்டாகும். பேச்சுவன்மையும், செயல் திறமையும் கூடும். குடும்பத்தில் அமைதி காண்பீர்கள். கடிதப் போக்குவரத்து நற்செய்தி கொண்டுவரும். பண நடமாட்டம் சீராக இருந்துவரும். நிறுவன,

நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். கணிதம், விஞ்ஞானம், வியாபாரம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான சூழ்நிலை உதயமாகும். இஞ்சினீயர்கள் பாராட்டப்படுவார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். பெண்களுக்குச் சுபிட்சம் கூடும்.

கணவன், மனைவியிடையே சலசலப்புகள் குறையும். செந்நிறப் பொருட்கள் லாபம் தரும். 21 ஆம் தேதி முதல் பணநடமாட்டம் சற்று குறையும். கடுமையாகப் பாடுபட வேண்டிவரும். மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்துவது நல்லது. 23 ஆம் தேதி முதல் செவ்வாய் விரயம் புகுவதால் எதிலும் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது அவசியமாகும். வீண் சண்டை, சச்சரவுகளில் பிரவேசிக்க வேண்டாம். பெற்றோர் நலனில் கவனம் தேவைப்படும். நிலபுலங்கள் சம்பந்தப்பட்ட பணிகளை ஒத்திப்போடுவது நல்லது. வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கைக் காண்பது கடினம். வெளிநாட்டுத் தொடர்பால் அதிகம் அனுகூலத்திற்கு இடமிராது. தீயவர்களின் தொடர்பை விட்டு விலகி, நல்லவர்களின் நேசத்தை வலுப்படுத்திக் கொள்வதன் மூலம் சங்கடங்களுக்கு ஆளாகாமல் தப்பலாம். செப்டம்பர் 17,18,23,25,26,27,29 அக்டோபர் 6,7,13,14,15,16 தேதிகள் சிறப்பானவை. வடக்கு, தென்கிழக்கு, தென்மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கன்னி, துலா, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,5,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கன்னி : (உத்திரம் 2ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் முடிய)

உங்கள் ராசிநாதன் ராசியிலேயே வலுத்திருப்பதாலும், குரு, சனி, செவ்வாய் ஆகியோரது பலம் திருப்திகரமாக இருப்பதாலும் உங்கள் எண்ணங்கள் இனிது நிறைவேறும். மதிப்பும், அந்தஸ்தும், புகழும் உயரும். புத்திசாலித்தனம் பிரகாசிக்கும். எடுத்த காரியங்களை இனிதாக நிறைவேற்றி மற்றையோரது பாராட்டுகளைப் பெறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். பேச்சில் இனிமை தவழும். தோற்றப் பொலிவு கூடும். குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் வருவாய் கிடைத்துவரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். பொன், வெள்ளி, இரத்ன வியாபாரிகள் ஆதாயம் கூடப் பெறுவார்கள்.

தொழிலாளர்களது திறமை பளிச்சிடும். அலுவலகங்களில் பணி புரிபவர்கள் தங்கள் நிலைமையில் அபிவிருத்தி காண்பார்கள். வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஏற்கெனவே வேலையில் இருப்பவர்கள் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறுவார்கள். நிலபுலங்கள் அனுகூலம் தரும். மாணவர்களது திறமை பளிச்சிடும். ஆசிரியர்கள் போற்றப்படுவார்கள். சட்ட வல்லுநர்கள், அரசியல்வாதிகள், பேச்சாளர்கள், ஆன்மிகவாதிகள் ஆகியோர் தங்கள் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். வங்கிப் பணியாளர்களுக்கும், பொருள் நடமாட்டம் உள்ள இடங்களில் பணிபுரிபவர்களுக்கும் செழிப்பான பாதை புலப்படும். கலைஞர்கள், பெண்கள், இயந்திரப் பணியாளர்கள், சமுதாய நலப்பணியாளர்கள் ஆகியோர் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். புதிய பொருட்களின் சேர்க்கை நிகழும். செப்டம்பர் 17,18,25,26,27,29 அக்டோபர் 6,7,8,11,13,14,15,16 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, கும்ப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,5,6,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம் : (சித்திரை 3ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் முடிய)

கோசாரப்படி ராசிநாதன் சுக்கிரன் ஒருவரே பலம் பெற்று இருக்கிறார், ஏனைய கிரகங்கள் அனுகூலமாக உலவவில்லை. இதனால் நீங்கள் விசேடமான நன்மைகளைப் பெறத் தடையிருந்து வரும். அலைச்சல் அதிகரிக்கும். பொருள் வரவு சீராக இருக்குமென்றாலும் செலவுகள் கூடும். அரசாங்கத்தாராலும், தந்தையாலும் ஓரிரு உபத்திரவங்கள் ஏற்படும். பயணத்தால் அதிகம் நன்மையை எதிர்பார்க்க இயலாது. மக்கள்நலம் கவனிப்பின்பேரில் சீராக இருந்துவரும். 7இல் கேது அமர்ந்தாலும் சுக்கிரபலம் கூடியிருப்பதால் கணவன், மனைவி உறவுநிலை சீராகவே இருந்து வரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் தகுதிக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள்.

பெண்களுக்கு உற்சாகமான பாதை புலப்படும். சமுதாய நலப்பணியாளர்கள் பாராட்டுகளுக்கு உரியவர்களாவார்கள். 21ஆம் தேதி முதல் தெய்வ காரியங்களிலும், தரும காரியங்களிலும் ஈடுபாடு கூடப் பெறுவீர்கள். மற்றையோரால் புகழப்படவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். உடல் ஆரோக்கியம் சீர் பெறும். மனதில் நல்ல எண்ணங்கள் உருவாகும். அயல்நாட்டுத் தொடர்பால் அனுகூலம் உண்டாகும். 23ஆம் தேதி முதல் செவ்வாய் 10ஆமிடம் மாறுவதால் செய்தொழிலில் ஓரளவு வளர்ச்சி ஏற்படும். சங்கடங்கள் என்பவை குறையும். பொறியியல் துறை ஆக்கம் தரும். குரு, சனி ஆகியோருக்குப் பிரீதி, பரிகாரங்கள் செய்வது நல்லது. தெய்வ வழிபாட்டில் கவனம் செலுத்துவதன் மூலம் மன அமைதி காணலாம். செப்டம்பர் 17,18,22,23,29 அக்டோபர் 6,7,8,11,13,14,15,16 தேதிகள் சுமாரானவை. தென்கிழக்குத் திசை அனுகூலமானது. 6ஆம் எண் அதிர்ஷ்டமானது. கும்ப, மேஷ, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள்.

விருச்சிகம் : (விசாகம் 4ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை (முடிய)

ராசிநாதன் 8இலும், சனி 4இலும், குரு 12இலும் உலவுவது அனுகூலமான நிலையாகாது. இதனால் உங்கள் குடும்பத்தில் சலசலப்புகள் உண்டாகும். பணநடமாட்டம் குறைந்து, செலவுகள் கூடும்.

ஸ்பெகுலேஷன் கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபடலாகாது. மக்கள் நலனில் கவனம் தேவைப்படும். அலைச்சலும், உழைப்பும் கூடும். எண்ணங்கள் ஈடேறத் தடைகளும், குறுக்கீடுகளும் முளைக்கும். எதிர்ப்பாளரின் கரம் வலுத்திருக்கும் நேரமிது என்பதால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. பயணத்தின் போதும், இய்ந்திரங்களின் பக்கம் நெருங்கும்போதும் பாதுகாப்புத் தேவை. நூதனமான முயற்சிகளை ஒத்திப் போடுவது நல்லது. உடல் நலனில் கவனம் தேவைப்படும்.

அந்தஸ்தும், மதிப்பும் சாதாரணமாகவே இருந்துவரும். உடன்பிறந்தவர்களுக்கும், உங்களுக்குமிடையே கருத்து வேறுபாடு கூடும். 6இல் கேது உலவுவதால் ஞானமார்க்கத்தில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மனத்தெளிவு பிறக்கும். 11இல் சூரியனும், புதனும் உலவுவதால் பிரச்னைகள் கட்டுக்குள் அடங்கியிருக்கும். அரசாங்கத்தாரால் ஓரிரு நன்மைகளை எதிர்பார்க்கலாம். மேலதிகாரிகளின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாக முடியும். வியாபாரம் வளரும். சுக்கிரன் ஆட்சி 12 இல் நிலைபெற்றிருப்பதால் நற்காரியங்களுக்காக ஓரிரு செலவுகள் ஏற்படும். கலைத்துறையினருக்கும், பெண்களுக்கும் மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சங்கடங்கள் குறைந்து, ஓரிரு நன்மைகள் உண்டாகும். இறை வழிபாடு மூலமாகவும், நல்லவர்களின் அறிவுரைகளை மதித்து நடப்பதன் மூலமாகவும் நலம் பெறமுடியும். செப்டம்பர் 17,18,22,23,25,26 அக்டோபர் 6,7,8,11,13,14,15,16 தேதிகள் சுமாரானவை. கிழக்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. மேஷ, கன்னியா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,5,6,7 எண்கள் நலம் தரும்.

தனுசு :(மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம் முடிய)

3,10,11ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உங்கள் சுயபலத்தைக் கூட்டுவார்கள். புத்திசாலித்தனமும், தோற்றப்பொலிவும் பளிச்சிடும். மனதில் உற்சாகம் கூடும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். எதிரிகள் விலகிப் போவார்கள். சமுதாய நலப் பணியாளர்கள், அரசியல்வாதிகள், ஆன்மிகவாதிகள், ஆசிரியர்கள் ஆகியோர் தங்கள் செல்வாக்கும், மதிப்பும் உயரப் பெறுவார்கள். மாணவர்களது திறமை பிரகாசிக்கும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். பெண்களது குறிக்கோள் நிறைவேறும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பம் உண்டாகும். தொழிலாளர்களது கோரிக்கை நிறைவேறும்.

எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் வரவேற்பு கூடப் பெறுவார்கள். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். தெய்வப்பணிகளிலும் தருமப்பணிகளிலும் ஈடுபாடு கூடும். வேலையில்லாதவர்கள் தகுந்ததொரு வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். ஏற்கெனவே பணிபுரிபவர்கள் தங்கள் கோரிக்கை நிறைவேறப் பெறுவார்கள். கணவன், மனைவி உறவு நிலை திருப்திகரமாக இருந்துவரும். பொன்நிறப்பொருள்கள் லாபம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். பொன், வெள்ளி, ரத்தின வியாபாரிகள் லாபம் கூடப் பெறுவார்கள். பணநடமாட்டம் திருப்தி தரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடிவரும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடப் பெறுவீர்கள். செவ்வாய் பலம் சீராக இல்லாததால் இயந்திரப் பணியாளர்களும், இஞ்சினீயர்களும் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. செப்டம்பர் 17,18,22,23,25,26,27 அக்டோபர் 6,7,8,11,13,14,15,16 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்கு, மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கும்ப, கன்னி, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள் 1,3,4,5,6,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மகரம் : (உத்திராடம் 2ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் முடிய)

குரு, சனி ஆகியோர் கோசாரப்படி சரிவர உலவாததால் அதிகம் பாடுபட்டே பயன்பெற வேண்டிவரும். சுலபமாக எதையும் நிறைவேற்றிவிட இயலாது. பேச்சிலும், உணவு விஷயத்திலும் கட்டுப்பாடு தேவை. அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் மேலதிகாரிகளின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவது அவசியமாகும். தொழிலாளர்களும், விவசாயிகளும் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். கணவன், மனைவி உறவு நிலை சாதாரணமாகவே காணப்படும். தந்தை நலனில் அக்கறை தேவைப்படும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்தவர்கள், அமைச்சர்கள், சட்டவல்லுநர்கள் ஆகியோர் பொறுப்புடன் காரியமாற்றுவது அவசியமாகும்.

6இல் செவ்வாய் உலவுவதால் 22ஆம் தேதி வரையிலும் பொறியியல் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை நிலவிவரும். அதன்பிறகு பிரச்னைகள் சூழும். 21ஆம் தேதி முதல் புதன் 10ஆமிடம் மாறுவதால் கணிதம், விஞ்ஞானம், எழுத்து, வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சமான சூழ்நிலையைக் காண்பார்கள். தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபடச் சந்தர்ப்பம் கூடிவரும். நீண்ட நாளைய எண்ணம் ஒன்று இப்போது நிறைவேறும். எதிர்ப்புகள் கட்டுக்குள் அடங்கியிருக்கும். திரவப் பொருள்கள் லாபம் தரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் பிரச்னைகளிலிருந்து விடுபடுவார்கள். பேச்சுவன்மை கூடும். செப்டம்பர் 17,18,22,23,25,26,27,29 அக்டோபர் 6,7,11,13,14,15,16 தேதிகள் சுமாரானவை. தென்திசை அனுகூலமானது. மிதுன, கன்னி, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,5,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கவிதை

குடந்தை புகழேந்தி

கடலில் தோன்றும் அலைகள் போல்
கற்பனை பொங்கி எழ வேண்டும்
இடரில் லாமல் இயல் கவிதை
இயற்றும் திறனும் உடன் வேண்டும்
சுடரின் ஒளிபோல் பொருள் வேண்டும்
சுவைக்கும் கவிதை மது வேண்டும்
படரும் கொடிபோல் அசை வேண்டும்
பாயும் புலியாய்ச் சீர் வேண்டும்

எழுத்து வலிமை பெற வேண்டும்
எதிலும் தொடையின் எழில் வேண்டும்
பழுத்த அனுபவ நடை வேண்டும்
பார்த்தால் தட்டாத் தளை வேண்டும்
அழுத்தம் கொள்கைகளில் வேண்டும்
ஆயிரம் ஜாலம் அதில் வேண்டும்
இழுக்கும் ரப்பர் தரம் வேண்டும்
இனிமை கூட்டும் நயம் வேண்டும்.

*

கும்பம் : (அவிட்டம் 3ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம் முடிய)

குரு, சுக்கிர பலம் காரணமாக உங்கள் அறிவாற்றலும், தோற்றப் பொலிவும் பளிச்சிடும். பெற்றோரால் நலம் பெறுவீர்கள். தொலை தூரப் பயணம் ஆக்கம் தரும். ஏற்றுமதி, இறக்குமதி இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பண நடமாட்டம் அதிகமாகும். நண்பர்கள், உற்றார், உறவினரால் நலம் பல பெறுவீர்கள். மக்கட்பறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். கணவன் மனைவியிடையே களிப்புறவு கூடும். பெண்கள் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மத போதகர்கள், அரசியல்வாதிகள், சட்ட வல்லுநர்கள் ஆகியோர் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். உத்தியோகஸ்தர்களது குறிக்கோள் நிறைவேறும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள்.

சமுதாய நலப் பணியாளர்களுக்கு வரவேற்பு கூடும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் புகழ் பெறுவார்கள். நிறுவன, நிர்வாகத் துறையினருக்கு வரவேற்பு கூடும். வியாபாரிகள் லாபம் கூடப் பெறுவார்கள். ஞானமார்க்கத்திலும், பக்தி மார்க்கத்திலும் ஈடுபாடு அதிகரிக்கும். புனிதப்பயணம் மேற்கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைக்கப் பெறுவீர்கள். பொருள் நடமாட்டமுள்ள இனங்களில் பணிபுரிபவர்கள் சுபிட்சம் காண்பார்கள். சாது தரிசனம், தெய்வ தரிசனம் ஆகியவை கிட்டும். முக்கியஸ்தர்களது தொடர்பால் நலம் சூழும். செப்டம்பர் 17,18,22,23, 25,26,27,29 அக்டோபர் 6,7,8,11,13,14,15,16 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. மேஷ, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,5,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : (பூரட்டாதி 4ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

கோசாரப்படி சுக்கிரன் ஒருவரே அனுகூலமான நிலையில் சஞ்சரிக்கிறார். ஏனைய கிரகங்களின் சஞ்சாரம் திருப்திகரமாக இல்லை. இதனால் நீங்கள் இந்த நேரத்தில் விசேடமான நற்பலன்களை எதிர்பார்க்க இயலாது. பேச்சிலும், செயலிலும் அடக்கம் தேவை. பதற்றம் அடியோடு கூடாது. நூதனமான முயற்சிகளை ஒத்திப்போடுவது அவசியமாகும். பொருள்வரவைவிடச் சற்று செலவுகள் அதிகமாகும் என்பதால் சிக்கனத்தைக் கையாள்வது நல்லது! வீண் அலைச்சலைத் தவிர்ப்பது அவசியம். பயணத்தின்போதும், இயந்திரங்களின் பக்கம் நெருங்கும்போதும் பாதுகாப்புத் தேவை. பிற மொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். நண்பர்களே விரோதிகளாகக் கூடுமாதலால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகுதல் கூடாது.

கணவன், மனைவி உறவுநிலை சாதாரணமாகவே காணப்படும். வாழ்க்கைத் துணைநலனில் கவனம் தேவைப்படும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவமாகப் பழகுவது நல்லது. அலுவலகப் பணியாளர்கள் தங்கள் கடமைகளைப் பொறுப்புணர்வோடு ஆற்றிவந்தால் சோதனைகளுக்கு ஆட்படாமல் தப்பலாம். தொழிலாளர்களும், சமுதாய நலப் பணியாளர்களும், விவசாயிகளும் அகலக்கால் வைக்கலாகாது. 21 ஆம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். மாணவர்களது நிலையிலும் வளர்ச்சி தெரியவரும். 23 ஆம் தேதி முதல் ஓரிரு எண்ணங்கள் ஈடேற ஆரம்பிக்கும். குரு, சனி, செவ்வாய் ஆகியோருக்குப் பிரீதி பரிகாரங்கள் செய்வது நல்லது. இறை வழிபாடு நலம் தரும். நல்லோர் தொடர்பை வலுப்படுத்திக் கொண்டு அவர்களது ஆலோசனைகளின் படி நடந்தால் சங்கடங்கள் மறையும். செப்டம்பர் 17,18,22,23,25,26,27,29 அக்டோபர் 11,14,15 தேதிகள் சுமாரானவை. துலா ராசிக்காரர்கள் அளவோடு உதவுவார்கள். தென்கிழக்குத்திசை நலம் தரும். 6 ஆம் எண் அனுகூலமானது.

அழுகிப் போகாத ஆணி வேர்கள்

எஸ். குமாரகிருஷ்ணன்

"டேய், சங்கர்! அந்தப் பெரியவர் உடம்பு சரியில்லாம இருக்காராம்... அவர் ஒரு வகையிலே நமக்குத் தூரத்துச் சொந்தம். உனக்குத் தாத்தா மாதிரி! எனக்குப் பதிலா நீ போய் அவரைப் பார்த்துட்டு வந்துடேன்..."- அன்பாய் ஒரு வேண்டுகோள் வைத்தாள் பூரணி அம்மாள்.

சங்கருக்கு முதலில் சங்கடமாய் இருந்தது.

"ஐயோ! போற இடம் டவுனாய் இருந்தாலும் பரவா யில்ல... சரியான பட்டிக் காடுன்னு சொல்றியே அம்மா!"

"ரெண்டு நாளைக்குத்தான் இருந்து பார்த்துட்டு வாயேன்! உறவு விட்டுடக் கூடாதுடா!"- மேலும் மேலும் பிடிவாதம் செய்தாள் பூரணி அம்மாள்.

வேறு வழியில்லாமல், சங்கர் சம்மதித்தான். மனம் முழுவதும் வெறுப்போடு புறப்பட்டான்!

புராணப் படங்களில் வரும் பூதத்தின் தலையைப் போல் பரந்த ஆலமரம். மந்திரவாதி யின் குகைகளில் தொங்கும் பாம்புகளைப் போல் விழுதுகள்! அந்த விழுதுகளைப் பிடித்துத் தொங்கி ஊஞ்சலாடும் பிறந்த மேனி வாண்டுகள்! மரம் முழு வதும் கோலிகுண்டு வடிவில் செக்கச் செவேலென்று ஆயிரக் கணக்கில் பழங்கள்... கிளை பூராவும் பலவிதமான பறவைகள்...

ஆலமரத்தைக் கடந்து பஜனைக் கோயில் வரும்போது பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் வரிசை கலைந்து, நாளைய திரை மலரைப் பற்றிய கற்பனையோடு போய்க்கொண்டு இருந்தனர்.

அந்தப் பிள்ளைகள், தங்கள் தலைமுடிக்கு எண்ணெய் என்றால் என்ன என்பதையே அறிமுகப்படுத்தியிருக்க மாட் டார்கள் போலிருக்கிறது! கல்லில் அடித்துச் சுருட்டிப் பிழிந்து சுருக்கம் கலையாத சட்டைகள்... எந்த நேரத்திலும் கிழிந்து 'மானத்தை வாங்கி விடுவேன்' என்று பயமுறுத்திக் கொண்டிருக்கும் டிராயர்கள்! கையில் இலவச நோட்டுப் புத்தகங்கள்...

சங்கருக்கு ஆச்சரியமாக இருந்தது. "டேய், தம்பிகளா! ஸ்கூலுக்குப் போகாம எங்கே போறிங்க?"

"கிளாசுக்குத்தான் போறோம்! இதோ... இந்தப் பள்ளிக் கூடத்திலே பிரேயர்! அதோ... அந்தக் கோயிலுக்கு முன்னால இருக்கிற மண்டபத்துல அஞ் சாம் கிளாஸ் வரைக்கும் பாடம்!" என்றபடி நகர்ந்தான் ஒரு பையன்.

இன்னொரு துடுக்குப் பையன், "சார்! நீங்க புதுசா வரப்போற வாத்தியாரா?" என்ற படி சல்யூட் அடித்து நின்றான்.

"வாத்தியாரா? போயும் போயும் உங்களுக்கா? டேய்! ஹையர் செகண்டரின்னா புரியுமா? நான், பெரிய டவுன்ல பன்னிரண்டாங் கிளாஸ் வாத்தி யாருடா!" என்று பெருமை யடித்துக் கொண்டான், சங்கர்.

அப்பாவிச் சிறுவர்கள், புரியா மல் நகர்ந்தனர். 'நம்ப டவுனில் படிக்கிற ஸ்டூடண்ட்ஸ் எல்லாம் மாடர்னா டிரஸ் பண்ணிகிட்டு எவ்வளவு அறிவாளியா இருக் காங்க! இந்தக் கிராமத்துப் பசங்க என்னடான்னா இப்படி இருக்கானுங்களே!', என்று மனசுக்குள் மட்டமாய் எடை போட்டான், சங்கர்.

'தாத்தா வீடு எங்கே? பிள்ளையார் கோயில் தெருன்னு அம்மா சொன்னாங்களே...' என்று நினைத்தவன், அந்தத் தெருவைத் தேடிப் பிடித்தான். தெரு முனையில் ஒரு பாட்டி, தன் இரு கையிலும் மாட்டுச் சாணத்தை வைத்து உருட்டிக் கொண்டிருந்தாள்.

சங்கர், மூக்கைப் பிடித்துக் கொண்டான். "பாட்டி! இந்த அசிங்கத்தைத் தொட்டு உருட்டி கிட்டு இருக்கியே... அப்புறம் எந்தக் கையால சாப்பிடுவே? கர்மம், கர்மம்!" என்றான்.

பாட்டிக்குக் கோபம் சுர்ரென்று வந்தது. "யாருப்பா நீ? கோமாதா நம்ம குலமாதா! அது போட்ட சாணியில் பிள்ளை யார் பிடிச்சுக் கும்பிடறது நம் மோட வழக்கம்!". என்றதும் சங்கர் அடங்கிப் போனான்.

தாத்தாவின் வீடு வந்தது. கதவில் பெரிய பூட்டு ஒன்று வரவேற்றது. அக்கம் பக்கம் விசாரித்தான்.

"ஆமாம் தம்பி! கொஞ்ச நாளா ஒடம்பு சரியில்லாம இருந்தாரு... இப்பப் பரவா யில்ல... காலையில கழனிப்பக்கம் போனாரு. ஏரிக்கரைக்கும் கீழ... ரெண்டாவது வயல் நாத்து நடறாங்க. பாத்துப் போங்க!" என்று பதில் வந்தது.

சூட்கேசைத் தூக்கிக் கொண்டு ஏரிக்கரை ஏறினான். கரையின் இருபுறமும் பனை மரமும் ஈச்ச மரமும் வரிசை மாறி கண்டபடி வளைந்து நின்றன.

ஒரு வழியாய் தாத்தாவின் வயலைக் கண்டுபிடித்தான், சங்கர். வரப்பில், பச்சைக் கம்பளமாய்ப் பளபளக்கும்

புல்வெளிமேல் குடைபிடித்தபடி தாத்தா!

சங்கரைக் கண்டதும், கண்ண ருகே கையை வைத்து, "யாரு? தம்பி யாரு?" என்று புருவத்தை நெளியவிட்டார்.

"ஹலோ தாத்தா! நான்தான் டவுன் பிள்ளை! பூரணத்தம்மா வோட லாஸ்ட் சன்! சங்கர் எம்.ஏ.,! போஸ்ட் கிராஜுவேட் டீச்சர்!" என்று தேவையில்லா மல் தன் படிப்பையும் பதவியை யும், ஆங்கிலம் கலந்த தமிழில் தம்பட்டம் அடித்துக் கொண் டான்.

"ஓ... நீயா! வா, தம்பி! இப்படி உட்காரு! பார்த்து... பார்த்து உட்காரு... சேறு வழுக்கும்... ம்... உங்க அம்மா சௌக்கியமா?" என்று அன்பான வார்த்தை களை அடுக்கினார், தாத்தா.

"உம்... எல்லாரும் ஓ.கே!" என்றான், சங்கர். உடலில் திட்டுத் திட்டாய்ச் சேறு ஒட்டிக் கொண்டிருக்க, வயலில் நாற்றுகளை நட்டுக் கொண் டிருந்தது உழைக்கும் வர்க்கம்.

பக்கத்துக் கால்வாயில் இறங் கிய ஒரு தொழிலாளி நீருக்குள் கைவிட்டுப் பிடி மண்ணை வாயில் வைத்துப் பல் தேய்த் தான்! அதே நீரில் துப்பினான். அதிலேயே கழுவிக் கொப்பளித் தான். ஏறி வந்து, பூவரச மரத்தில் கட்டி வைத்திருந்த பானைக் கஞ்சியைக் கவிழ்த்துக் குடித்தான்!

'டவுனில் பேஸ்ட் போட்டுப் பல்லைத் தேய்த்து நறுமணம் கமழ வச்சிருக்கோம்! இங்கே என்னடாவென்றால்... சுத்தத்துக் கும் இதுங்களுக்கும், இவ்வளவு தூரமா?" என்று அருவருப்பு அடைந்தான், சங்கர்.

"தாத்தா! உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னு அம்மா சொன் னாங்க. ஆனால் நீங்க பெட்லே ரெஸ்ட் எடுக்காம இப்படி வெயிலில் வேகறிங்களே?"

"ஆமாம், தம்பி! ஒடம்பு சுகமில்லைதான்... அதுக்காகப் படுக்கையிலேயே கிடந்தா, மனசு சோம்பேறித்தனமா ஆயிடும்!"

"ஓவர் ஒர்க் பண்ணா பாடி வீக் ஆயிடும்! நாமா இருந்தா, சி.எல். போட்டுட்டு நிம்மதியா தூங்கிகிட்டு இருப்போம்! இதுங்க என்னடான்னா..."

வயல் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பியாயிற்று. தாத்தா சமையலைச் சாப்பிட்டு விட்டு, ஒரு தூக்கம் போட்டு எழுந்தான். தோட்டத்துப் பக்கம் சென்று கிணற்றை எட்டிப் பார்த்தவன் அதிர்ந்தான்.

"தாத்தா! என்ன இது? கிணற்றிலே சொட்டுத் தண்ணி கூடக் காணோமே?"

"வெயில் காலம்னா இப்படித் தான் இருக்கும்! இத்தோட மழை பெய்ஞ்ச பூமி ஊறினாத்தான் நீர் சுரக்கும்!"

"அப்ப, நாளைக்குக் காலையிலே குளிக்கிறது... மத்த விஷயமெல்லாம்?"

"இந்த வீட்ல மட்டுமில்ல... யார் வீட்டுக் கிணத்திலும் தண்ணீர் கிடையாது! பொழுது விடிஞ்சா, ஆம்பளைங்க எல்லாம் ஏரிக்கரைப் பக்கமா போயிட வேண்டியதுதான்! அப்படியே ஆலங்குச்சிய ஒடிச்சிப் பல் விளக் கிட்டு, கழனிக்கு நடுவிலிருக்கிற கிணத்துல இறங்கி நீச்சல் அடிச் சுக் குளிச்சுட்டு வந்துடணும்!"



மின்னல் கீற்றுகள்

புடைக்கும் பொழுது
எகிறிக் குதித்தன
எடையற்ற உமிகள்.

*

பூந்தோட்டம்
இதயத்தில் முள்
காலுக்கடியில் மலர்

*

குளிரில் வியர்வை
புல்லின் மூக்கு
அரும்பிய பனித்துளி

*

சலனமற்ற குளம்
விரிந்தது நியூஸ் ரீல்
விழுந்தது கல்.

*

அலாரம் ஒலிக்கக்
காத்துக் கிடந்தது
நகர்ப்புறச் சேவல்

*

குளம்
தண்ணீருக்குள் தாமரையா?
ஓ! குளித்துக் கொண்டிருக்கிறாள் அவள்.

*

மழை நின்ற வானம்
யார் எண்ணெய் கொட்டியது?
வானவில்

*

மாசுச் சூழல்
மூக்கின் கீழ் மரம் வளர்ப்பு
மீசை

*

மழை நின்ற இரவு
மெர்க்குரி விளக்கின் கீழ் உடைகள்
ஈசல் இறகுகள்

*

மழை பெய்கிறது
கறுப்புக் காளான்கள்
குடையுடன் மக்கள்

*

பூசிமெழுகிய வாசல்
விழுப்புண்கள்
பம்பர சீசன்.

*



வெ. இறையன்பு

தாத்தா சொல்லச் சொல்ல, சங்கருக்கு மறுநாளை நினைத்தாலே பயமாக இருந்தது...

விடிந்து விட்டது! சங்கரும் வேறுவழியின்றி ஏரிக்கரைப் பக்கம் போனான்! 'சே! நாலு பேர் பார்க்கிற மாதிரி... திறந்த வெளியில் எப்படிப் போறது? நம்ம டவுனில்- ஜம்முனு பேப்பர் படிச்சுகிட்டே அழகா உட்காரலாம்!'

வெறுப்போடு ஏரி மீது ஏறினான். ஏரிக்குள் சிலர் எருமை மாடுகளைச் செங்கல்லால் தேய்த்துக் கொண்டு இருந்தனர். 'ஐயோ! இவங்க எதிரிலா!' என்று அலறியவன், 'பேசாமல் கரம்பு நிலத்தில் உட்கார்ந்துட்டு கிணத்துல இறங்கிக் கழுவிக்கலாம்' என முடிவெடுத்து வயலில் இறங்கினான்...

எல்லாம் முடிந்து, கிணற்றுப் படிகளில் கஷ்டப்பட்டு இறங்க... விடுகரையிலுள்ள கூரிய கற்கள் பா(ர)தம் பார்க்க... வலி தாங்காமல் ஒரு காலை வேகமாய்த் தூக்கும்போது, நிலை தடுமாறினான்.

'ஆ... அம்மா... ஐயோ' என்று அலறல். கிணற்றுக்குள் தலைகுப்புற விழுந்தான், சங்கர்!

தூரத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சில சிறுவர்கள் சப்தம் கேட்டு ஓடி வந்தனர். நேற்று பள்ளிக்கூடம் சென்று கொண்டிருந்த அதே சிறுவர்கள்! ஞாயிறு விடுமுறையில் உருப்படியாய் ஆடு மேய்க்கும் அவர்கள், "டேய்! டவுன் வாத்தியாருடா! தண்ணியில தவிக்கிறாருடா! ஓடுங்க... நம்ம முனுசாமியைக் கூப்பிடுங்க..." என்றபடி ஆட்டுக் குட்டிகளாய்த் துள்ளி ஓடினர்.

சங்கர், அரைகுறை நீச்சலடிக்கையில், முனுசாமி- சேற்றில்- வாய்க்காலில் பல்விளக்கிய அதே மனிதன், நீருக்குள் இறங்கி சங்கரின் முடியைக் கையால் பிடித்து இழுத்துக் கரையேற்றினான்! கவிழ்த்துப் படுக்க வைத்து, முதுகை அழுத்தினான். சங்கர், குடித்த நீரைத் துப்பினான்!

சங்கரின் கை, கால் எங்கும் ரத்தம் கசியும் சிராய்ப்புகள். முனுசாமி அவனைத் தோளில் தூக்கிக் கொண்டு ஓடினான்.

முதியவள் ஒருத்தி, அவசரமாய்ச் சில இலைகளைப் பறித்து அரைத்து, காயங்களில் சாறு பிழிந்தாள். நிமிர்ந்து பார்த்தான், சங்கர். நேற்று சாணி உருட்டிய அதே பாட்டி! அந்தக் கிராமத்தின் ஒரே மூலிகை வைத்தியர்!

சங்கரின் தலையும் மனமும் தொங்கிப்போய்விட்டன!

இப்படி ஒரு தடவை டவுனில், நடுச்சாலையில் தன் பள்ளிக்கு எதிரிலேயே வாழைப்பழத் தோல் வழுக்கி விழுந்த போது- எந்தப் பையனும் ஓடிவந்து உதவில்லை! வாத்தியார் வழுக்கி விழுந்துட்டாருடா!' என்று சிரித்ததோடு சரி!

ஆனால், இங்கே? இந்த ஏழைச் சிறுவர்கள் கூச்சலிட்டு, சேற்றிலுழைக்கும் முனுசாமி கரை சேர்த்து, எருமுட்டை விற்றுப் பிழைக்கும் மூதாட்டி கை வைத்தியம் பார்த்து... ஓ! ஏழைமையிலும் அறியாமையிலும் இருந்தாலும், மனிதநேயம் என்கிற ஆணிவேர் இங்கே இன்னும் அழுகிப் போகாமல் தான் இருக்கிறது.

சங்கர், முற்றிலும் திமிர் அடங்கியவனாய் அப்புறமாய்ச் சொன்னான்- "தாத்தா! நான் இந்த லீவு முழுக்க இங்கேயே தான் தங்கப் போறேன்!"

ஒரு புனித உலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், தென்னக இரயில்வேயும் இணைந்து - இரு கரம் கூப்பி வரவேற்கும் - புனிதத் தலங்களின் சுற்றுலா.

சனியன்று இரவு புறப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை சுற்றி விட்டு, திங்கள் காலை சென்னை வந்து விடலாம். கட்டணம் ரூ. 500/-

மேற்படி வார விடுமுறை சுற்றுலாவிற்குத் தயாராவதற்கு முன் நம்முன் எழுந்த பயங்கள் இரண்டு.

இரயிலில் செல்கிறோம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் இறங்குகிறோம். அங்கிருந்து பஸ்ஸில் கிளம்புகிறோம். சுற்றிப் பார்க்கிறோம். இப்படி இரயிலை விட்டு பஸ்ஸிற்கு மாறி - வேறு ஓர் இடத்தில் மீண்டும் பஸ்ஸிலிருந்து இரயிலுக்குத் திரும்பிப் புறப்படுகிறபோது நம்முடன் எடுத்துச் செல்லும் பெட்டி அல்லது பையை என்ன செய்வது? நம்முடனே பார்க்கிற ஒவ்வோர் இடத்திற்கும் எடுத்துக்கொண்டு அலைய வேண்டுமா? என்பது முதல் பயம்.

இரண்டாவது; ரொம்ப அற்ப பயம்தான். நம்முடன் எப்படியும் பல்வேறு இடங்களிலிருந்தும் வெவ்வேறு வகைப்பட்ட பயணிகள் 30இலிருந்து 40 பேர் வரை வருவார்கள். இரயிலை விட்டுக் காலையில் இறங்கியதும் அவர்களுடன் சேர்ந்து குளிப்பது சாத்தியமா? குளிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தால் ஒட்டுமொத்தமாக எல்லாரோடும் சேர்ந்து குருவிக் குளியலா? அல்லது, தனியாக 'ஹாய்'யாக ஷவர் குளியலா? ஷவர் குளியல் என்றால் ஆளாளுக்குக் குளித்து முடிக்க நேரமாகுமே? பட்டியலில் குறிப்பிட்டுள்ள எல்லா இடங்களையும் பார்க்க இயலுமா?

சாப்பாடு விஷயத்தில் பிரச்னையில்லை, போகிற வழியில் வண்டியை ஓர் ஓரமாக நிறுத்தி ஏதாவது ஒரு மோட்டலில், இருப்பதை அள்ளிக் கொட்டிக் கொள்ளலாம்.

இப்படி.... 'புனித தல - வார விடுமுறை - ஒருநாள் சுற்றுலா' விற்கு நாம் எழும்பூர் இரயில் நிலையம் வந்தபோது இரவு மணி 9.30.

தென்னக இரயில்வே நிர்வாகம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஒரு தனி கம்பார்ட்மெண்ட்டை ஒதுக்கியிருந்தது.

திருச்சி பாசஞ்சரின் கம்பார்ட்மெண்ட்டையும் படுக்கை எண்ணையும் குறிப்பிட்டார்கள். ஏறினோம். நம்முடன் சேர்ந்து 32 பேர் அங்கிருந்தனர். சரியாக இரவு 10.05 மணிக்கு திருச்சி பாசஞ்சர் புறப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்காக ஒதுக்கப்படும் இக் கம்பார்ட்மெண்ட்டில் - மீதி இருக்கும் படுக்கைகளை ஒரு குறிப்பிட்ட நேரம் வரை வைத்திருந்து மற்றதைப் பொது மக்களுக்கு விநியோகித்து விடுகிறார்கள், தென்னக இரயில்வேயினர்.

230 கி.மீ. தூரத்தில் இருக்கும் சிதம்பரத்தை நோக்கிப் பயணம் தொடங்கிற்று.

மறுநாள் காலை 5.00 மணிக்கு 230 கி.மீ. தூரத்தைக் கடந்து சிதம்பரத்தை அடைகிறோம்; இறங்குகிறோம். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பேருந்து நமக்காகக் காத்திருக்கிறது. அங்கிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் ஒட்டல் தமிழ்நாடு.

இரண்டு படுக்கைகள் கொண்ட எட்டு அறைகள், முன் பதிவு செய்யப்பட்டு - நான்கு பேருக்கு ஓர் அறை என்று ஒதுக்கப்படுகிறது.

"குளித்து விட்டு சரியாக 6.30 மணிக்கு சாப்பாட்டு ஹாலுக்கு வந்து விடுங்கள்" என்றார் வழிகாட்டி.


வெதுவெதுப்பான நீரில் குளித்து பயணக் களைப்பைப் போக்கி அலங்காரக் கட்டத்தில் இருந்தபோது காபி வருகிறது. பயணப்படுவதற்கு முன் எழுந்த பயத்திற்கு முதல் முற்றுப் புள்ளி. அடுத்து இரண்டாவது பயம், பெட்டி?

பெட்டியுடன் வந்து சாப்பாட்டு ஹாலின் உள்ளே நுழைகிறோம். பொங்கல் - வடை, இட்லி - சாம்பார், பூரி - மசாலா. 'பஃபே' முறையில் காலை உணவை முடிக்கிறோம்.

7.15க்கு டி.என்.01-ஜெ456 பதிவு எண் கொண்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பேருந்தில் அமர்கிறோம்.

"பெட்டியை உங்கள் இருக்கைகளுக்கு மேலே வைத்து விடுங்கள். கடைசியாக இறங்குகிறபோது எடுத்துக் கொள்ளலாம். பேருந்தில் உங்கள் பொருள்களைப் பாதுகாக்க ஓர் ஆள் இருப்பார்"





சிதம்பரம்

என்ற அறிவிப்பு இரண்டாவது பயத்தைப் போக்குகிறது.

அடுத்து காலணியையும் பேருந்திலேயே கழட்டி விட்டு, 40 ஏக்கர் பரப்பளவில் ஒரு தனி அரசாங்கமாய்த் திகழும் பொன்னம்பலக் கூத்தன் – நடராஜர் சந்நிதிக்குள் நுழையும்போது மணி 7.30.

ஒரே இடத்தில் நின்று இடப்புறம் கோவிந்தராஜாவையும் – நேர் எதிர்புறம் மூக்குக்கு நேரே நடராஜாவையும் தலையை மட்டும் திருப்பி வணங்குகிறோம். படியிறங்கி – சட்டையைக் கழற்றி – மூலவர் அறைக்குச் செல்லும் முன் தடுத்தார், முன் பக்கம் குடுமி வைத்த இளம் தீட்சிதர்.

"ஸார் கேமிரா."

"என்னோடதுதான்!"

"இங்கே எங்கேயும் படம் எடுக்கக்கூடாது."

"எடுக்க மாட்டோம்."

நம்பிக்கையில்லை. கூடவே வந்தார். வெள்ளித் தகடு அடித்த சின்னச்சின்ன இடைவெளிகளின் வழியே சிதம்பர ரகசியத்தைக் கற்பூர ஜோதியில் காண்கிறோம்.

தீட்சிதரின் பார்வை கேமிராவின்மீதே படர்ந்திருந்தது.

72,000 ஆணிகளின் உதவியுடன், 21,600 தங்க ஓடுகள் வேயப்பட்டு, 9 கலசங்களுடன் கூடிய தங்கக் கூரை கிழக்கிலிருந்து புறப்பட்ட சூரியனின் கதிர்களால் தகதகத்தது.

அன்னை சிவகாமசுந்தரியின் அருட்பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு நெற்றியில் இட்டு, வடப்புற வாசல் வழியாக வருகிறோம்.

வீதியின் இருபுறமும் பளபளக்கும் செப்பு பாய்லரின் உதவியுடன் சூடான சாயா.

8.00 மணிக்குள் சிதம்பர தரிசனம் முடிகிறது.

அடுத்த இடம் சிதம்பரத்திலிருந்து 24 கி.மீ. தூரத்தில் உள்ள வைத்தீஸ்வரன் ஆலயம்.

இடையில் கொள்ளிடமும், சீர்காழியும் வந்து விட்டுப் போயின.

8.45. இளம் காலை சூரியக் கதிர்கள் ஆலயப் பிராகாரத்தை வெளுப்பாக்கி இருக்க – மீன்கள் நிறைந்த திருக்குளத்தில் கை-கால் அலம்புகிறோம். படித்துறை முழுக்க பக்தர்களின் முழுக்கு.

மங்கல இசையுடன் ஓதுவார்களின் வேதம் முழங்க, ஆடிப்பூரத்தின் கொடியேற்றம் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. வைத்தியநாதசுவாமி – தையல் நாயகி தரிசனம் முடிகிறது.

திருச்சாந்துருண்டை பெற்று ஆலயத்தை வலம் வந்து பேருந்தை அடைந்தபோது மணி 9.00.

பேருந்து புறப்படுகிறது. பூம்புகாரைக் கடந்து – திருக்கடவூர், ஸ்ரீ அபிராமி அம்மை உடனாகிய ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தை அடைகிறோம்.

10 மணி காலைப் பொழுதில் கழுத்தில் மாலை – முகத்தில் புன்னகை சகிதமாய் வயது முதிர்ந்த தம்பதியர் பலர் நம் முன் எதிர்ப்படுகிறார்கள்.

அபிராமிபட்டருக்குக் காட்சியளித்த அன்னை அபிராமியின் தரிசனம் முடிகிறது. தலத்தைப் பற்றி மூன்று வரலாறுகள் சொல்லப்படுகின்றன. அவை வண்ண ஓவியங்களாக பிராகாரச் சுற்றுச் சுவரில் காட்சியளிக்கின்றன.

அமிர்தத்தை தேவர்களும் - அசுரர்களும் கடைகிறபோது விநாயகரை மறந்து விட - விநாயகர் கோபம் கொண்டு அமிர்தத்தைத் திருடிக்கொண்டு வைத்து விட்டாராம். அந்தப் பிள்ளையார்தான் கள்ளவாரணப் பிள்ளையாராகத் திருக்கடவூரில் வீற்றிருக்கிறார்.

சங்கு மண்டபத்தைக் கடந்து - காலஸம்ஹார மூர்த்தியைப் பார்க்கிறோம். மங்கல ஒசை - சிறு பந்தல்களுக்குக் கீழே சதாபிஷேக - சஷ்டியப்த - ஆயுள் ஹோம வைபவங்கள் ஆங்காங்கே நடக்கின்றன.

10.30க்கு வெளியில் வந்து இளநீர் குடித்து, பேருந்தில் அமர்ந்தபோது - பேருந்தின் டயர்களைத் தட்டிப் பார்த்தார் கிளீனர். என்னவாம்? பரிசோதித்துக் கொண்டாராம்.

திருநள்ளாறுக்குப் பயணப்படுகிற வழியில் தரங்கம்பாடி தாண்டி - புதுச்சேரி எல்லைக்குள் நுழைந்து காரைக்காலுக்குள் பிரவேசிக்கிறோம். திருநள்ளாறு போகிற பாதை ஒரங்களில் சிறு கால்வாய்கள் — நிறைய நீர்.

ஸ்ரீதர்பாரண்யேஸ்வர சுவாமி ஆலயத்தின் முன்னே புதிய எழுநிலை ராஜகோபுரத்திற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

சனி பகவான் வல ஓரத்தில் வந்து குவியும் பக்தர்களின் வேண்டுதல்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

பிராகாரச் சுவரின் ஓரத்தில் கட்டப்பட்டிருந்த சிமெண்ட் அலமாரித் தடுப்புகளில் வேண்டுதல் நிமித்தமாய் எண்ணெய் விளக்குகள் - அழுக்கான கறுப்பு வண்ணத்தில்.

மிதமான வெயில். நட்ட நடுப் பகலில் நாகூரை அடைகிறோம். 17-ஆம் நூற்றாண்டில் சரபோஜி மன்னர் தந்த இடத்தில் நாகூர் ஆண்டவரின் சமாதி இருக்கிறது. உலகிலேயே ஐந்து ஸ்தூபிகள் இருக்கும் ஒரே தர்கா நாகூர் தர்காதான்.

ஆங்காங்கே அழுக்கு. காய்ந்த நிலையில் துணி வகையறா. இனம் பிரிக்க முடியாத வாசனை. நகரா வாத்தியத்துடன் நாதஸ்வரம் ஒலிக்கிறது. சமாதியின் உள் கதவுகள் மூடப்பட்டிருக்கின்றன. நாகூர் ஆண்டவர் சமாதியுடன் அவர் மகன் - மருமகள் சமாதிகளும் தர்காவினுள் இருக்கின்றன. காலை 4.30இல் இருந்து 7.00 மணி வரையிலும், மாலை 6.30 மணியிலிருந்து 9.00 மணி வரையிலும் சமாதியைப் பார்க்கலாம்.

நாகூர்

வேளாங்கண்ணி



வெள்ளியன்று பகல் 12 மணியில் இருந்து 2 மணி வரை விசேஷமாய்த் திறந்து வைக்கப்படுமாம், மயில் தோகையைத் தலையில் தடவியபடி சொன்னார்கள்.

இந்துக்கள் நிறையப் பேர் தர்காவினுள் இருக்கிறார்கள். மொட்டையடித்து, பின்புறமுள்ள குளத்தில் குளிக்கிறார்கள்.

தர்காவை விட்டு வெளியே வந்து 1.10 மணிக்கு நாகப்பட்டினம் அடைகிறோம்.

ஓட்டல் தமிழ்நாட்டில் சாப்பாடு தயார். கோதுமை அல்வா, கருஞ்சிவப்பு நிறத்தில். சாம்பார், ரசம், தயிர், கூட்டு, பொரியல், அப்பளம், ஊறுகாயுடன் சாதம். பழம் - வெற்றிலை தாம்பூலத்தை முடித்து வெளியே வருகிறோம். ஒசோன் காற்றுடன் உலர்ந்த மீனின் வாசனை மூக்கைத் தாக்குகிறது.

மீண்டும் பயணம். 12 கி.மீ. தூரத்தைக் கடக்கிறோம். ஒரு சின்னத் திருப்பம். அன்னை வேளாங்கண்ணி பெயருடன் மருத்துவமனை, கல்விச்சாலை, விடுதிகள்.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆலயத்தினுள் பிரவேசிக்கிறோம். வெண்மை, தூய்மை, சுத்தம், அமைதி, ஆனந்தம். போர்ச்சுக்கீசிய மாலுமிகளைக் காப்பாற்றிய வேளாங்கண்ணி மாதா குழந்தையுடன் காட்சியளிக்கிறார்.

பக்தர்கள் கொடுத்த காணிக்கைப் பொருள்கள் கண்ணாடிக் கூடுகளுக்குள் காட்சிப் பொருள்களாய் அடுக்கப்பட்டிருக்கின்றன. முதல்வர் ஜெயலலிதா போட்டோவில் சிரித்துக் கொண்டிருக்கிறார். வெளியே வருகிறோம்.

'இது தபால் பெட்டி!

கோயில் உண்டியல் அல்ல'

என்ற அறிவிப்பு நகைக்க வைத்த அடுத்த நிமிடம், பக்தர்களின் அறியாமை நம்மை நாணப்படவும் செய்தது.

அடுத்த இலக்கு ஒப்பிலியப்பன் கோயில்.


அங்கிருந்து கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் பயணம்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு பெய்த மழையால் ஆறுகளில் நீர் நிறைந்திருக்க - பார்க்கிற இடமெல்லாம் பசுமை. சுகமான தென்றல் முகத்தைத் தழுவ நிசப்தமான நித்திரை.

வளைந்து, நெளிந்து, விரைந்த பாதையில் திருவாரூர், குடவாசல், நாச்சியார் கோயில் வந்து மறைந்தன.

மாலை 5.05க்கு ஒப்பிலியப்பன் கோயில். வேங்கடாசலபதியின் வலப்புறம் பூமி நாச்சியாரும், இடப்புறம் மார்க்கண்டேயரும் குத்துக்காலிட்டு அமர்ந்திருக்க ஆரத்தி எடுத்த குருக்கள் ஆங்கிலத்தில் விளக்கம் சொன்னார்.

'பல ஊர்களில் இருந்து பல மொழிக்காரர்கள் வந்திருப்பார்கள். எல்லாருக்கும் புரிய வேண்டும் என்பதற்காகத்தான் ஆங்கிலத்தில் சொன்னேன்' என்றார்.



சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதசுவாமி திருக்கோயில் இராஜகோபுரம்.

'மாம் ஏகம் சரணம் வ்ரஜ' வார்த்தைகள் வலக் கையில் பொறித்திருந்த வைரக் கிரீட நாயகரின் பிராகாரம் முழுக்க அவதார ஓவியங்கள். துலாபாரம். மொட்டையடித்து, காது குத்தல்... உப்பில்லாப் பலகாரங்கள் வெகு வேகமாய் விற்பனையாகின்றன.

5.30க்குப் புறப்பட்ட பேருந்து 6.00 மணிக்கு கும்பகோணம் மகாமகக் குளத்தை வட்டமடித்து – கும்பகோணத்திற்கு 'குட்பை' சொல்லிவிட்டு, திருவலஞ்சுழி பிள்ளையாருக்கு ஒரு 'ஹலோ' சொல்லிவிட்டு, சுவாமி மலையை நெருங்குகிறது. செயற்கையாக வடிவமைக்கப்பட்ட மலை.

அறுபது படிகளில் தமிழ் வருடங்களின் பெயர்கள். ஆறு படை வீடுகளில் நான்காவது படை வீடான சுவாமிமலை ஆடிக் கிருத்திகை வைபவத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

திரையிடப்பட்ட துணிக்குப் பின் நின்றிருந்த முருகப் பெருமான் நம்மைக் காக்க வைக்கிறார். காத்திருத்தலுக்குப் பின் ஸ்ரீ சுவாமிநாத சுவாமியின் தரிசனம் கற்பூர ஜோதி ஒளியில் கண் கொள்ளாக் காட்சி.

படிகளைக் கடந்து சந்நிதி வீதி. புலி நகம், நரிப் பல் என்று ஆசை காட்டும் வர்த்தகக் கும்பல்.

புறக்கணித்து விட்டுப் புறப்படுகிறோம். கலகலப்பாய் பாபநாசம், அமைதியாய் அய்யம் பேட்டையைக் கடந்து தஞ்சாவூர், ராஜராஜசோழன் நிருமாணித்த பிரகதீஸ்வரர் ஆலயம்.

அதற்கு முன் சின்ன விவாதம். இரவு 9.20க்கு ஜனதா எக்ஸ்பிரஸில் டிக்கெட் முன்பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சையைப் பேருந்து அடைகிறபோது மணி 8.15. இடைப்பட்ட நேரத்தில் கோயிலா? சாப்பாடா?

சாப்பாடு வெல்கிறது. கோயில் வலம் தோல்வி கண்டு விடுகிறது.

இதுவரை 237 கி.மீ. தூரத்தை பேருந்தில் நாம் கடந்து வந்திருக்கிறோம் என்ற எண்ண ஓட்டத்துடன் இரவு உணவை முடிக்கிறோம்.

உடன் வந்த பயணிகளுடன் பேசுகிறோம்.

"எப்படி இருந்தது பயணம்?"


"ரொம்ப நல்லா இருந்தது!"

"களைப்பாக இல்லையா?"

"இல்லை! அரிய புண்ணியத் தலங்கள் பலவற்றைப் பார்த்த திருப்தியே மேலோங்கி நிற்கிறது. ஒரே நாளில் இத்தனை இடங்களைப் பார்ப்போமா என்ற சந்தேகத்தை இந்தப் பயணம் போக்கி விட்டது. நன்றி; தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு! அதுவுமில்லாமல் எல்லா வேலைகளையும் முடித்து விட்டு, சனிக்கிழமை புறப்பட்டு விடுமுறை நாளான ஞாயிறன்று சுற்றிவிட்டு, திங்கட்கிழமை காலை சென்னை அடைந்ததும், பணிக்குச் செல்லும் சௌகரியம் வேறு சுற்றுலாப் பயணத்தில் வராது" என்றார்கள்.

9.20க்கு ஜனதா எக்ஸ்பிரஸ் தஞ்சை இரயில் நிலையத்திற்குள் நுழைகிறது. கடைசி கம்பார்ட்மெண்ட் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குத் தென்னக இரயில்வே நிர்வாகத்தினரால் சேர்க்கப்பட்டிருக்கிறது. இருக்கையில் அமர்கிறோம். தஞ்சையில் இருந்து சென்னைக்கு 335 கி.மீ. தூரப் பயணம்.

நித்திரையில் ஆழ்வதற்கு முன் சில எண்ணங்கள். சிதம்பரம், வைத்தீஸ்வரன் கோயில், திருக்கடவூர், திருநள்ளாறு, நாகூர், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, ஒப்பிலியப்பன் கோயில், கும்பகோணம், சுவாமிமலை, தஞ்சா



வூர்... அடேயப்பா! ஒரேநாளில் இந்து, கிறிஸ்துவ - முஸ்லிம் ஆலயங்களுக்கு ஒரு 'ஹலோ' சொல்லி விட்டோமே!

இந்த ஹலோ, போனோம், பார்த்தோம் என்ற திருப்தியை - ஓடுகிற பஸ்ஸில் இடைப்படும் குட்டிக் கோயில்களைப் பார்த்து கன்னத்தில் போட்டுக்கொள்ளும் திருப்தியை - மட்டுமே தருகிறது.

இதையே கொஞ்சம் பொறுமையாய், அவசரமில்லாமல் செய்தால் எப்படி இருக்கும்? முடியுமா? முடியும்.

எப்படி? ஒரு நாளை, இரண்டு நாள்களாக்க வேண்டும். இடையே விடுபட்ட தஞ்சாவூர், சீர்காழி, பூம்புகார், திருவாரூர், பிச்சாவரத்தையும் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

கட்டணத் தொகை அதிகமாகும். பரவாயில்லை. காலைச் சிற்றுண்டி, மதிய உணவு, காபி, இரவு விருந்துகளுக்கான தொகை இரட்டிப்பாகும். தங்குவதற்கு ஆங்காங்கே அரசின் விடுதிகள் இருக்கின்றன. அவற்றுக்கும் ஒரு நிரந்தர வருமானத்திற்கு இந்த முறை வழி வகுக்கும்.

தென்னகத்தில் விரவி, பரவிக் கிடக்கின்ற தொன்மைகள் என்றென்றும் மனத்தினுள் பசுமையாய்ப் படர - வழி வகுக்கும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கும், அதற்குத் துணை புரியும் தென்னக இரயில்வேக்கும் வணக்கங்கள், வாழ்த்துகள், நன்றி.

— நாகராஜகுமார்

மனம் விட்டுப் பேசுவோம்

● பரத நிருத்யத்திற்கே தன் வாழ்நாள் முழுதும் அர்ப்பணித்து தெய்விகமாக வாழும் ஒரு நாட்டிய மணிக்கு ஜப்பானிய விருது தகுதியான ஒன்று. அதைப் பிரசுரித்து 'அமுதசுரபி' பெருமை தேடிக் கொண்டது. அழகு மிகு அட்டைப் படம்.

– லீலா கோபாலன்,

செகந்திராபாத்

● ஆகஸ்ட் 1994 இதழில் திருமதி பத்மா சுப்பிரமணியம் அவர்களின் சில குறிப்புகள் வெளியாகியுள்ளன. அதில் தற்போது வயது 51 என்றுள்ளது. அதன்படி அவர் 1943 இல் பிறந்திருக்க வேண்டும். 1903 ஆம் ஆண்டு மீனாட்சி கல்யாணம் என்ற நாடகத்தை எப்படி நடத்தியிருக்க முடியும்? இதற்கு திருத்தம் கொடுத்தால் நலமெனக் கருதுகிறேன்.

– பூ.வி. சந்திரசேகரன்,

திருவள்ளுவர் நகர்.

– ஆர். ஹேமலதா,

சென்னை – 5.

(1963 என்றிருக்க வேண்டும். இந்தப் பிழையை உடனே கவனித்தோம். நாட்டியமணிக்கும் தெரிவித்து விட்டோம்).

● அன்பர் அனுபவம் படித்தேன். அன்னையின் அருள் பிரமிக்க வைத்தது. அன்னை மேல் பக்தி சிரத்தை அதிகமாகிறது.

– அன்பின் செபா,

களியல் 629 101.

● ஒவ்வொரு மாதமும் 'கங்காபுரிக் காவலன்' தொடர் மிகவும் விறுவிறுப்பாகத் தொடர்கிறது. கதை – கவிதைகளோ மணக்கின்றன. 'தமிழில் தவறுகளை அறிவோம்' பகுதியோ சுவைக்கிறது. 'நாணயம்' பகுதியோ இனிக்கிறது. ஆக – ஆகஸ்ட் 'புதுச்சேரி இலக்கியச் சிறப்பிதழ்' அழகு களை கட்டுகிறது. அமுதசுரபி மாதம் இரண்டு இதழாக மலராதா என்று மனம் ஏங்கி வாட்டி வதைக்கிறது.

– சி.பா. சந்தான

கோபாலகிருஷ்ணன்,

கடலூர்.

● ஆண்டாள் பிரியதர்சினியின் 'அன்புள்ள தங்கைக்கு' கவிதை மிக அருமை. மெலிதாக சோக இழைகளால் நெய்யப்பட்ட இந்தக் கவிதை உள்ளத்தை உருக வைக்கிறது. இந்தக் கவிதைக் கண்ணாடியில் நமது கடந்த கால முகங்களல்லவா தெரிகின்றன!

– ஆர். கே. தேவி,

கோவை புதூர்.

● பாவையர் பக்கங்கள் – அமுதசுரபி ஆகஸ்ட் இதழில் திருமதி கிரிஜா ராகவன் அவர்கள் எழுதிய 'எண்ணிப் பார்க்கலாம் பெண்ணே' என்ற கடிதத்தில் – 'விமர்சித்து, குறைகளை இடித்துக் காட்டி இன்னும் நிறைய எழுதுங்கள்' என்றிருக்கிறார். 'இடித்து' என்பதற்கு பதில் 'எடுத்து' என்றிருந்தால் 'நட்புடன்' இருந்திருக்கும் எனத் தோன்றுகிறது.

– கமலா வேத நாராயணன்,

பம்பாய்.

● ரொம்ப நாள்களாக இளசை எஸ்.சுந்தரம் அவர்களின் நகைச் சுவை நிகழ்ச்சியை திருச்சி வானொலியில் கேட்க முடியவில்லையே என்று பார்த்தேன். இப்போதுதான். புரிகிறது, அவர் தூத்துக்குடி வானொலியில் முதல் உதவி இயக்குநராகப் பொறுப் பேற்றுள்ள விஷயம். இனி தூத்துக்குடி வாசிகள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்.

– இந்திரா ஆராவமுதன்,

ஸ்ரீரங்கம்.

● 'சீவலப்பேரி பாண்டி' விமர்சனத்தில் 'செக்ஸ் காட்சிகளுக்கு மட்டுமல்ல; சென்ஸார் போர்டு வன்முறைகளையும் ஒரு வரையறைக்குள் கொண்டு வந்தால் தான் கொள்ளையர்களைக் கதாநாயகனாக்கும் மக்கள் எண்ணம் மாறும்' என்ற வரிகள் மக்களுக்கும், சென்ஸாருக்கும் சவுக்கடி கொடுப்பதாக இருந்தது.

– டி.எஸ். கணேசன்,

சென்னை – 600 014.

கங்காபுரிக் காவலன்

'அப்பாடா, முனிவர் தவம் கலைந்தது!, என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்ட தேவி, வெளியே கேட்கும்படியாகவும் சொன்னாள். இராசேந்திரன் அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்.

15. மன்னனின் நோக்கமும் மாதேவியின் திட்டமும்

விக்கிரமன்

கோதாவரி நதிக்கரையில், கிழக்கே கதிரவன் உதிக்கும் அழகை ரசித்தவாறு இராசேந்திர சோழ தேவர் அமர்ந்திருந்தார். அவர் மனம் எப்போதுமில்லாத வகையில் அமைதியாக இருந்தது. அவர் அருகே பட்டத்து அரசி பஞ்சவன் மாதேவி அமர்ந்திருந்தாள்.

கடல் போன்ற கோதாவரி நதியில் சூரியோதயத்தைக் காண்பதில் பஞ்சவன் மாதேவிக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், அரசரைப் போன்று அந்தக் காட்சியிலேயே மனத்தை முழுமையும் ஈடுகொடுத்து மூழ்கி விட அவளால் முடியவில்லை.

மெல்லப் பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள். மிக முக்கியமான சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் போது தான், அரசர் சுற்றுச் சூழலை மறந்து அமைதியாக யாருடனும் பேசாமல் இருப்பார்.

'என்னால் அவ்வாறு இருக்க முடியவில்லையே; மனத்தில் இருப்பதை யாரிடமாவது கொட்டித் தீர்க்கவே தோன்றுகிறது. இவரால் எப்படி அமைதியாக இருக்க முடிகிறது?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

தேவாரப் பதிகங்களைப் பாடும் ஓதுவார்களை அழைத்து வந்திருந்தார்கள். அவர்கள் தாளத்துடன் பாடினார்கள். ஒரு முறை திரும்பிப் பார்த்த அர்சர், சிறிது நேரம் கழித்துப் பாடுவதை நிறுத்துமாறு சைகை செய்தார். அவர்களும் அங்கிருந்து சென்று விட்டனர்.

கதிரவன் மேலெழுந்து, கதிர்களைச் 'சுள்'ளென்று வீசத் தொடங்கியபோது, இராசேந்திரன் பஞ்சவன் மாதேவியின் பக்கம் திரும்பிப் புன்முறுவல் பூத்தார்.

"முனிவராகும் பக்குவம் இன்னும் வரவில்லை தேவி! கொடிய பகைவரைக்கூட அடக்க முடிகிறது. ஆனால் மனம் எனும் உள் விரோதியை அடக்குவது அவ்வளவு எளிதாகத் தோன்றவில்லை. அடக்கியவுடன் ஏற்படும் அமைதி இருக்கிறதே, அதற்கு எல்லையே கிடையாது. இங்கு வந்து பல நாள்கள் ஓடிவிட்டன. ஒவ்வொரு நாளும் என் மனம் அலைகடல் போல் கொந்தளிக்கும்..."

அரசர் சற்றுப் பேச்சை நிறுத்தியவுடன், அவரிடம் பேச வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருந்த அரசி, "உங்கள் மனத்தில் கவலையும், குழப்பமும் ஏற்படக் காரணமே இல்லையே..." என்று குறுக்கிட்டாள்.

"தெற்கே, பழையாறையில் என்ன நடக்கிறதோ என்ற கவலை இருக்கலாம். அங்கு ஒவ்வொரு நாளும் நடைபெறும் நிகழ்ச்சியை அதிகாரிகள் அறிவித்துக் கொண்டிருக்கின்றனர். என்னை உடன் அழைத்து வராமலிருந்த கவலையும் தீர்ந்துவிட்டது. போர் நடத்தச் சென்றவர்களோ மாபெரும் வீரர்கள். வடக்கே இருந்து சில நாட்டரசர்கள் தங்களைத் தேடி வந்தனர். அதனால் புதிய கவலை ஏற்பட்டிருக்கலாம் அப்படித்தானே? அவர்களும் ம்கிழ்ச்சியுடன் சென்றுவிட்டனர். ஆனால், நான் நினைக்கிறேன் -உங்கள் மனத்திலுள்ள கவலை என்னவென்றால்..." பேச்சை நிறுத்தினாள்.

அரசரை நிமிர்ந்து நோக்கினாள். அரசரும் திரும்பி அவளைப் பார்த்தார்.

"என் மனத்திலுள்ள கவலை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

⟶

அரசர் மன நிலையைப் புரிந்து கொண்டாள் அரசி. எந்தவிதத் தடையுமின்றிப் பேசலாம். உரிமையுடனும் பேசலாம்.

"வீரர்களுடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டது போர் புரிய அன்று; புனித யாத்திரைக்காக. அந்தத் தெளிவு தங்களிடமிருந்தது. ஆனால், வெளி உலகிற்குத் தெரியா வண்ணம், சில நாடுகளின் மீது படையெடுத்து சோழ நாட்டிற்கு உள்ள பல நிரந்தர விரோதிகளை வென்றுவிடும் எண்ணமும் உண்டு. அந்த எண்ணம் தங்கள் மனத்தில் பல சஞ்சலங்களை ஏற்படுத்தியிருக்கும். அவை ஒரு வகையில் தீர்க்கப்பட்ட பிறகு, கங்கையாற்றில் புனித நீராடச் செல்வதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினீர்கள். நான் அருகே இல்லாமல் புனிதச் சடங்குகளை நிறைவேற்றுவது முறையில்லை என்பதை உணர்ந்தீர்கள். என்னை வரவழைப்பதைப் பற்றிச் சிந்தித்தீர்கள். அதே போது, உங்கள் அபிமான வல்லியையும் உடன் அழைத்து வருவதா, வேண்டாமா என்ற குழப்பம் ஏற்பட்டிருக்கும். நல்ல வேளையாக தான் வருவதற்கு இயலாது என்று அவள் சொல்லிவிட்டபடியால் என்னை மட்டும் அழைத்தீர்கள்.

என்னை இங்கே அழைத்ததன் மூலம் தங்களுக்கிருந்த மற்றொரு குழப்பமும் நீங்கியது" என்று மனத்திலுள்ளதை ஒளிக்காமல் கூறிச் சற்று நிறுத்திய பஞ்சவன் மாதேவி, 'என்ன குழப்பம்?' என்று அரசர் வினவுவார் என்று எதிர் பார்த்தாள். அது போன்றே அவர், 'என்ன குழப்பம்?' என்று கேட்டார். தேவி மேலும் தைர்யத்துடன் பேசலானாள்.

"நான் பழையாறையிலிருந்தால், வீரமாதேவியின் பணிகளுக்கு இடையூறாக இருப்பேன். என்னை இங்கே அழைத்து வந்து விட்டால் அங்கே கோயிலும், ஏரியும் எந்தவிதத் தடையுமின்றி மளமளவென்று வளர்கின்றன" என்றாள்.

இராசேந்திரன் மெல்ல நகைத்தார். முதுமையால் துவண்டிருக்கும் பஞ்சவன் மாதேவியின் கரத்தை மெல்லத் தன் வலக் கரத்துடன் பிணைத்து, " தேவி! நீயே சொல்லு. இவ்வளவு அமைதியாக, நெருக்கமாக நாம் இதுவரை அமர்ந்து பேச வாய்ப்பிருந்திருக்கிறதா?"

பஞ்சவன் மாதேவி மறுமொழி கூறவில்லை. ஏதாவது பேசி, அரசரின் மன நிலையில் மாறுதலை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காகத் தலையை மட்டும் அசைத்தாள்.

"தஞ்சையிலும், பழையாறையிலும் இருக்கும்போது உனக்கும் மன சஞ்சலம் அதிகம் தானே?"

தேவி தலையை மட்டும் அசைத்தாள்.

"வீரமாதேவி வந்த பிறகு, வீணே நீ உன் மனத்தில் கவலையை வரவழைத்துக் கொண்டாய்".

தலையை மட்டும் அசைத்தாள்.

'உன்னுடன் அரிந்தவன் தேவியும் சேர்ந்து கொண்டாள். பொறாமைத் தீ வளர அவளும் ஊதினாள். அதனால் மனத்தில் கவலை சூழ்ந்தது. அப்படித் தானே?"

பஞ்சவன் மாதேவி தலையை அசைக்கவில்லை.

'அது என்ன பொறாமைத் தீ என்று சொல்கிறார். உண்மையைச் சொன்னார், சங்கடம் வராமல் தடுத்தார். அது பொறாமையா? '

மறுமொழி கூறவில்லை. அரசருக்கு அப்போது இருந்த மன அமைதியைக் குலைக்க விரும்பவில்லை.

அரசி மௌனமாக எந்தவித உணர்ச்சியும் புலப்படுத்தாமல் இருப்பதை அறிந்த அரசர், "நடந்து போனவற்றை நினைவு படுத்த நான் விரும்பவில்லை. நாட்டை ஆளும் அரசர் மனத்தில் ஏற்படும் அழுத்தம், தீர்க்கவேண்டிய பிரச்னைகள் ஏராளம் என்பதை நீ அறிவாய் அல்லவா! கங்கை நதியில் புனித நீராட நான் ஏன் திட்டமிட்டேன் என்பது உனக்குத் தெரியுமா?"

அரசி தலையசைத்தாள்.

"நம் குல தெய்வம் சிவபெருமான் செஞ்சடையில் வீற்றிருக்கும் புண்ணியம் செய்த நதி கங்கை. கங்கையின் வரலாறு கேட்டறிந்தது முதல் நான் கங்கையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். செழுநீர்புனல் கங்கை செஞ்சடை அணிந்த புண்ணியனான சிவபெருமானை நினைக்கும் நாளெல்லாம், கங்கை நதிக்கரைக்குச்



செல்ல விரும்பினேன். என் தந்தை பேரரசரின் எண்ணமும் கங்கைக்கரைக்குச் செல்ல வேண்டும் என்பதிலேயே இருந்தது. அவர் இறுதி இலட்சியமும் அதுவே. அவருக்குக் கிடைக்காத பெருமை எனக்குக் கிடைத்திருப்பது நடராசப் பெருமான் திருஅருள் தான். பெரிய கோயிலைக் கட்டும் எண்ணம் ஏற்பட்டு, அதை நிறைவேற்ற வீரமாதேவி எனக்குக் கிடைத்தாளல்லவா? அது இறைவன் செயல் அல்லவா?"

இப்படிச் சொல்லும்போது, பஞ்சவன் மாதேவியின் முக உணர்ச்சியை இராசேந்திரன் கவனிக்கத் தவறவில்லை.

"வீரமாதேவியிடம் உனக்கு ஏற்பட்ட தவறான எண்ணத்தால், சோழநாட்டிற்குக் காலகாலத்திற்குக் கிடைத்த மாபெரும் புகழை, பெருமையைத் தடுக்க நினைத்தாய். உன்மீது குற்றம் சாட்டுவதாகவோ, குறை கூறுவதாகவோ நினைக்க வேண்டாம். மனிதகுல இயல்பு அது. அரசியென்றாலும், அந்தக் குறையினின்று தப்ப முடியாது. மற்றொரு தட்சிண மேரு என்று புகழப்படவிருக்கும் அந்தக் கோயிலின் விமானத்தின்மீது அமைக்கவிருக்கும் பொற்கலசத்திற்குக் கங்கை நீரால் அபிடேகம் செய்விக்க விரும்பினேன். அதற்குக் கங்கை நீரைக் கொண்டு வருவதுதான் என் முதன்மையான நோக்கம். அதை மனத்தில் எண்ணியே வடநாட்டு யாத்திரையை மேற்கொண்டேன். புனிதக் கங்கையில் நீராடிப் புண்ணியம் சேர்த்துக் கொள்வதை முதன்மையாகக் கருதவில்லை. நான் கட்டும் பெரிய கோயிலில் உள்ள பெருவுடையாருக்குப் புனித நீரால் அபிடேகம் செய்ய வேண்டும்; கோயிலின் திருமுழுக்கு கங்கை நீரால் நடத்தப்படவேண்டும் என்பதுதான் என் இலட்சியம்.

"உயர்தர இலட்சியம் மனத்திற்குள் இருக்கும்போது அதை நிறைவேற்றும் திட்டங்களை வகுக்கும்போது அதைப்பற்றிய சிந்தனை, கவலை மனத்தில் இருப்பது இயற்கைதானே! ஏனோ தொடக்கத்திலிருந்து, புதிய கோயில், புதிய நகரம், புதிய ஏரி ஏற்படுத்தும் மாபெரும் திட்டம் உனக்குப் பிடிக்கவில்லை.

"ஆடவல்லான் அருளால் இப்போது அவை சரியாகிவிட்டன. கங்கையில் நீராடச் செல்லவேண்டும் எனும் எண்ணம் எனக்கு ஏற்பட்டவுடன் உன்னையும் அழைத்து வரத் திட்டமிட்டேன். அதற்கிடையில், கோதாவரிக் கரையில் தங்கியிருக்கும் கட்டாயம் ஏற் பட்டது. நம்மால் வாழும் வகை செய்யப்பட்ட வர்களே நமக்கு விரோதியாகும் நிலை ஏற்பட்டது. வேங்கியில ஏற்பட்ட குழப் பத்தைத் தீர்க்க வேண்டிய நிலை. கங்கை நதியை நோக்கிச் செல்லும் என் நோக்கம் தடைப்பட்டது. அதற்கிடையே புதிய பிரச்னை. வடமேற்குத் திசையில் நம் நாட் டிற்குப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருப்ப தாய்ச் செய்தி வந்தது. கஜினி முகமது என்ற வெளிநாட்டு மன்னர் வட நாட்டில் உள்ள பெரும் செல்வத்தின்மீது ஆசைப் பட்டுத் தம் படைகளுடன் வந்து தாக்கு தலைத் தொடங்கியிருக்கிறான். அவனைத் தடுத்து நிறுத்தாவிடில் நம் நாட்டிற்குப் பெரும் ஆபத்து வந்து விடும். நம் பலம் அறியாமல் அவன் நம்மீது மோதமாட்டான் என்றாலும், முர்க்கத்தனமான படை வீரர்கள் - ஏராளமான குதிரை வீரர்களுடன் அவன் வருகிறானாம். அவன் நோக்கம் நாட்டைப் பிடிப்பது அன்று; கோயில்கள் தாம் அவன் இலக்கு. கோயில்களில் உள்ள ஏராளமான செல்வங்களைக் கொள்ளை யடிப்பதுதான் அவன் நோக்கம்.

நாம் கோதாவரிக் கரையில் தங்கியிருப் பதை அறிந்த வட நாட்டு வேந்தர்கள் சில நாள்களுக்கு முன்பு என்னைச் சந்திக்க வந்தது உனக்கு நினைவிருக்கலாம். அவர் களுக்கு உதவியாக சோழ வீரர்களை அனுப்புவதாக வாக்களித்தேன். நம் படை களை இரண்டு பகுதிகளாகப் பிரித்தேன். ஒரு பகுதியை கஜினி முகமதின் படை வீரர்கள் முன்னேறுவதைத் தடுக்க அனுப்பியுள்ளேன். ஒரு பிரிவைக் கங்கைக் கரையை நோக்கி அனுப்பத் திட்டமிட் டுள்ளேன். இப்போது எனக்குத் தெளிவு ஏற்பட்டுள்ளது. நல்ல நாளாகப் பார்த்து நாம் கங்கைக் கரைக்குச் செல்வோம். நீராடுவோம். புனித நீரெடுத்துச் சோழ நாடு திரும்புவோம்".

பஞ்சவன்மாதேவி அமைதியாக அரசர் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். பிராயத்தில் இன்னும் இருபது ஆண்டுகள் குறைவாகி விட்டதுபோல் புதிய உற்சாகம் ஏற்பட்டது.

'வீரமாதேவி! பார்த்தாயா? நீ சொல்வது போல் மன்னர் எப்போதும் ஆடுவார் என நினைத்தாயே. உன் இளமை மோகத்தால் அவரை வயப்படுத்திவிட முடியும் என நினைத்தாயே - மனப்பால் குடித்தாயே, செருக்குடன் அவருடன் இணைந்து ஆடி னாயே என்ன நடக்கப் போகிறது தெரியுமா? நான் அரசருடன் கங்கையில் நீராடி புனிதக் கங்கை நீருடன் திரும்பி வருவேன். அதற்குள் அங்கே கோயில் கட்டி முடிக்கப் பட்டிருக்க வேண்டும். சந்தேகம்தான். பழையாறையில் உள்ள கோயிலுக்கும் திருவையாற்றுக் கோயிலில் உள்ள இறை வனுக்கும், இறைவிக்கும் திருமஞ்சனம் செய்விக்கச் செல்வோம். ஏன் - தஞ்சைப் பெரிய கோயிலை ஏனோ புறக்கணிக்க எண்ணிய அரசரின் மனத்தை மாற்று வேன். பேரரசர் - என் மாமனார் - விருப்பப் படி கங்கை நீரைக் கொண்டு, பெருவுடை யாருக்குத் திருமஞ்சனம் செய்விப்பேன் - வீரமாதேவி - உன் மமதை சபதம் - குலைவது திண்ணம்' பஞ்சவன் மாதேவி தன் மனத்துக்குள்ளேயே கற்பனை செய்து கொண்டாள்.

"தேவி, திடீரென மௌனமாகி விட் டாயே? என்ன சிந்தனை? என்ன திட்டம்? என் கவலையெல்லாம் உன்னிடம் வந்து விட்டனவோ? கங்கை நீருடன் சோழ நாட்டுப் புதிய நகரத்திற்குள் நுழையும் போது வரவேற்பு எப்படியெல்லாம் இருக்கும் என்று கற்பனை செய்து பார்க்கி றாயா?" என்று அரசர் கேட்டவுடன் திடுக் கிட்டுச் சுயநிலைக்கு வந்தாள் பஞ்சவன் மாதேவி.

அப்போது, ஒற்றர் படைத் தலைவர் விரைந்து வந்து, சோழநாட்டிலிருந்து இராசராச பிரம்மராய உத்தமசோழரும் விலாருடையாரும் படைவீரர்களுடன் வந்து கொண்டிருக்கும் செய்தியைத் தெரி வித்தார்.

இராசேந்திர சோழதேவர் புருவம் உயர்த்தினார். எதற்காக அவர்கள் வரு கிறார்கள் என்ற கேள்விக் குறி அவர் உள்ளத்தே எழுந்தது. தொடரும்....


கல்வியாளர் கே.சி.ஆர்.

"கல்வியின் மிக்கதாம் செல்வமொன்றில்லையே; கண்மணி கேளடா நீ என்றன் சொல்லையே!" என்று கல்வியின் சிறப்பைப் பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். மங்காத செல்வமான கல்வியைப் பரப்பும் தொண்டில் ஈடுபட்டு இன்று பல தரப்பினரும் பாராட்டும் வகையில் புகழ் ஈட்டியிருப்பவர் Rtn திரு. கே.சி. ராஜாபாதர்.

திண்டிவனம் பகுதியில் "கே.சி.ஆர்." என்றால் தெரியாதவர் இலர் எனும் அளவிற்கு அப்பகுதி மக்களால் அன்போடு அழைக்கப்படும் Rtn திரு.கே.சி. ராஜாபாதர் அவர்களால் நிறுவப்பட்ட திண்டிவனம் தாகூர் கல்விச் சங்கத்தின் கீழ் 20 கல்வி நிறுவனங்கள் சிறப்புடன் இயங்கி வருகின்றன.

எளிய குடும்பத்தில் பிறந்த திரு. கே.சி. ராஜாபாதர் சிறு வயதில் தனியார் பள்ளிகளில் படித்தபோது தனியார் கல்வி நிறுவனங்களின் சேவை மனப்பான்மையையும், நிர்வாகத் திறனையும் கண்டு கவரப்பட்டார். பின்னர், பச்சையப்பன் கல்லூரியில் படித்தபோது மக்களுக்கு பச்சையப்பன் மீதிருக்கும் மரியாதையைக் கண்டு தானும் கல்வித்துறையில் ஈடுபட்டு கல்வியாளராகச் சேவை செய்திட வேண்டும் என்ற சிந்தனையை விதைத்துக் கொண்டார். திண்டிவனம் பகுதி மக்கள் படிப்பதற்கேற்ற சிறந்த கல்வி நிறுவனங்கள் தேவை என்பதை உணர்ந்து தனி மனிதனாக நின்று நம்பிக்கை, உழைப்பு, ஆகியவற்றை மட்டுமே மூலதனமாகக் கொண்டு தாகூர் பள்ளியைத் தொடங்கி நடத்தினார். பலரின் குறுக்கீடுகளுக்கிடையில் உள்ளூர் மாணவர்கள் கல்வி பெற வேண்டும் என்ற நோக்குடன் தன் நிர்வாகத் திறனால் தடைகளைக் கடந்து படிப்படியாக முன்னேறி இன்று திண்டிவனம், நெய்வேலி, தாம்பரம், சென்னை ஆகிய ஊர்களில் பல்வேறு பள்ளி, பயிற்சிக் கல்லூரிகளைச் சிறப்புடன் நடத்தி வருகின்றார்.

கவி தாகூரின் படைப்புகளின் மேல் ஆர்வமுள்ள இவர் தமிழகத்திலும் தாகூரின் 'சாந்தி நிகேதன்' போல அமைய வேண்டும் என்ற ஆவலினால் தாகூரின் பெயரையே தன் பள்ளிகளுக்கு வைத்துள்ளார்.



திண்டிவனம், நெய்வேலி, தாம்பரம் ஆகிய ஊர்களில் ஏழை மாணவர் நலனுக்காக நடத்தப்படும் இப்பள்ளிகளில் மாணவர்கள் வரையறுக்கப்பட்ட சுதந்திரம் என்ற அடிப்படையில் நடத்தப்படுவதால் சிறப்புறச் செயல்பட முடிகின்றது. பெற்றோர் மத்தியிலும் பெரும் வரவேற்பிருக்கிறது.

"கல்வி நிறுவனம் என்பது 'படிப்பு' என்பதோடு நின்று விடாமல் சிறந்த குடிமகனை உருவாக்கி, அவன் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் இருக்கவேண்டும்" என்று கூறும் கே.சி.ஆர். ஒரு ரொட்டேரியன். அரிமா சங்கத்திலும் தொண்டாற்றியுள்ளார். பல அமைப்புகளில் முக்கிய பொறுப்பில் உள்ளார். தென்னார்க்காடு பகுதிகளில் இலக்கிய அமைப்புகளை ஆதரித்து ஊக்குவித்து வரும் இவரை ஆசிரியர்களும், எழுத்தாளர்களும் 'இளஞ்சிங்கம்' என்று பெருமையுடன் போற்றுகின்றனர்.

குறைந்த செலவில் ஏழை, நடுத்தர மாணவர்கள் படிக்கவும், படித்ததும் வேலை கிடைக்கவும், சுயதொழில் தொடங்கவும் ஏற்ற தொழிற் கல்வி நிறுவனங்களான தாகூர் தொழிற் பயிற்சி நிலையம், தாகூர் தோல், ரெக்சின் பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையம், தாகூர் கம்ப்யூட்டர் சென்டர் ஆகியவற்றையும் நிறுவி சிறப்புற நடத்தி வருகிறார். சுதந்திரப் போராட்ட தியாகியின் வழித்தோன்றலான இவர் தன் நிறுவனங்களுக்கு மகாத்மா காந்தி, அன்னை இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி போன்ற தலைவர்களின் பெயர்களைச் சூட்டியுள்ளார்.

+ 2 பயின்ற பின் மருத்துவம், பொறியியல் படிப்பில் சேர முடியாதவர்கள், சேர்ந்து படிக்க ஏற்ற பாரா - மெடிகல் பயிற்சிக் கல்லூரிகளையும் இவர் நடத்தி வருகிறார். தாம்பரம் தாகூர் இன்ஸ்டிட்யூட் ஆஃப் மெடிக்கல் சயன்ஸ் & ரிசர்ச் சென்டர், அடையாறு ராஜீவ் காந்தி பாரா - மெடிகல் பயிற்சிக் கல்லூரி ஆகிய இவற்றில் பயின்றுவரும் பலருக்கும் உடனே வேலை கிடைக்கும் வகையிலான நர்ஸிங், மெடிக்கல் லேப் டெக்னாலஜி, பிஸியோதரபி என பயிற்சி வகுப்புகள் உள்ளன. சுயதொழில் தொடங்கவும், வெளிநாட்டில் வேலை பெறவும் கூட இந்த பாரா - மெடிகல் பயிற்சிகள் உதவுகின்றன.

தமிழ்நாடு பாரா - மெடிக்கல் பயிற்சிக் கல்லூரி நிர்வாகிகள் சங்கப் பொதுச் செயலாளர் பொறுப்பில் உள்ள திரு. கே.சி. ராஜாபாதர் அவர்கள் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் தேர்வுகளுக்கான பிரதானக் குழு உறுப்பினராக தமிழக அரசால் சமீபத்தில் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது நாம் பாராட்டத்தக்கதாகும். இவரது நிர்வாகத்தில் இயங்கும் திண்டிவனம் தாகூர் கல்விச் சங்கத்திற்குச் சிறந்த தன்னார்வ சேவை நிறுவனத்திற்கான டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா விருது வழங்கப்பட்டுள்ளமை பொருத்தமான ஒன்றாகும்.

புதுவை. கோ.பாரதி

84, டி.டி.கே. சாலை, சென்னை-600018-இல் உள்ள 'தமிழ் அரசி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீராம் டிரஸ்ட்- 600001-சார்பில் வெளியிட்டவர் ஏ.வி.எஸ். ராஜா. ஆசிரியர்: 'கலைமாமணி' விக்கிரமன். நிர்வாக அலுவலகம் : 145 லிங்கிச் செட்டித் தெரு, த.பெ. எண். 5043, சென்னை - 600 001. தொலைபேசி : 5228545, 510535.